கல்கி

KALKI 40 காசு
3.1.1971











ஜனவரி 17உ
பொங்கல்
சிறப்பிதழில்
ஆரம்பம்






விளைவுகளே கூறுகின்றன! துவைத்த துணிகளை அலசுவதற்குமுன் வாளியிலுள்ள தண்ணீரில் சிறிதளவு டினோபால் சேர்க்கவும். பிறகு பாருங்கள் சலவையின் வெண்மை எப்படிப் பளிச்சிடுகிறது என்று! சட்டை, புடவை, படுக்கை விரிப்பு, டவல் எல்லாமேதான்!

இத்தனைக்கும் ஆகும் செலவு, துணிக்கு ஒரு பைசாவுக்கும் குறைவு! டினோபால் வாங்குங்கள். ரெகுலர் பாக், எகானமி பாக் மற்றும் ஒரு வாளித் துணிக்கு ஒரு பாக்கெட் ஆகிய மூன்று அளவுகளில் கிடைக்கிறது.

டினோபால் என்ற பெயர் ஜே.ஆர்.கெய்கி எஸ்.ஏ. பாஸல் ஸ்விட்சர்லாந்து ஸ்தாபனத்தாரின் ரிஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க் ஆகும்.

சுஹ்ரித் கெய்கி லிமிடெட், த.பெ. 11050, பம்பாய்-20 BR.

Shilpi HPMA 12A/70 Tam



Ratan Batra/FC/Tam/337

கேரளா
சந்தன சோப்
உங்களை
விரும்புகிறது





கேரளா சந்தன சோப் உங்களுடைய மேனியை பார்ப்பதற்கு மிக இளமையாகவும், அழகாகவும் இருக்கச்செய்கிறது. அதனுடைய சுத்தமான சந்தன எண்ணை உங்களுடைய நிறத்தை வெயிலிலிருந்தும் குளிர் காற்றிலிருந்தும் காப்பாற்றுகிறது. அதனுடைய சுத்தமான நறுமணம் மணிக்கணக்கில் உங்களை விட்டு அகலாது.

இது ஒரு

கேரளா சோப்ஸ் & ஆயில்ஸ் லிட்.,
கோழிக்கோடு-5. ன் உன்னத தயாரிப்பு
(இது ஒரு கேரள அரசின் நிறுவனம்)

SISTA'S-KSO-1-TA

சென்னை நகரம் & செங்கற்பட்டுக்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்:
Ms. லாலா கோபி கிருஷ்ண கோகுல்தாஸ், 98-A, அரமனைக்காரத் தெரு, சென்னை


முத்தென ஒளிரும்
முகமலர் பெற்றிட
Lakmé
VANISHING CREAM
லக்மே வேனிஷிங் க்ரீம்
ASP/L-73

கல்கி

பொருளடக்கம்

சாதாரண, மார்கழி 19 — ஜனவரி 3, 1971

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சந்தா விவரம் :	ஒருவருடம்	ஆறுமாதம்
இந்தியா	ரூ. 20-00	ரூ. 10-00
இலங்கை (இலங்கைநாணயம்)	ரூ. 21-00	ரூ. 10-50
இதர நாடுகள்	ரூ. 40-00	ரூ. 20-00



கொஞ்சுமிளம் தென்றலோ, குலவ வரும் மல்லிகையோ!

கம கமக்கும் மல்லிகை மணம். இளமை கொழிக்கும் மேனியெழில். இரண்டையும் உங்களுக்கு வழங்கவே ஜெய் அழகு சோப். வில்லை கரைந்தாலும் சுகந்தம் குறையாத அதன் மென்மை நுரை உங்கள் சருமத்திற்கு நேயமானது. உங்கள் பைந்தளிர் மேனி என்றும் பதினாறுகப் புதுமையுடன் பொலிய உபயோகியுங்கள் ஜெய்—ஜிகினாத் தாளுறை தரித்த ஒரே அழகு சோப்!



உங்கள் புத்தெழில் பெருக ஜெய் அழகு சோப் மனங்கவர் மல்லிகை மணம் கமழ்வது.

டாடா தயாரிப்பு.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்



மலர் 30

இதழ் 23

ஜனநாயக முன்னணிக்கு ஒரு குறைந்தபட்ச திட்டம்

இந்திரா-கம்யூனிஸ ஆட்சிக்கு எதிராக ஜனநாயகக் கட்சிகள் ஒன்று சேரும் வாய்ப்பு நெருங்கி வருகிறதல்லவா? இச்சமயத்தில் இந்த மாபெரும் ஜனநாயகக் கூட்டணிக்குக் கீழ்க்கண்ட திட்டத்தை வகுத்து அளிக்கிறார் ஸ்ரீ க. சந்தானம் அவர்கள்.

1. அரசியல் சாஸனத்தைக் காப்பது: நமது ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் அரண் அரசியல் சாஸனமே யாகும். அதன் வாசகத்தையும் உட்கருத்தையும் மனப்பூர்வமாகப் பின்பற்றி ஒழுக வேண்டும். இன்றோ, அல்லது சமீப எதிர்காலத்திலோ, அரசியல் சாஸனத்தைப் பெருமளவு மாற்றுவது, அல்லது புதியதொரு சாஸனத்தை வகுப்பது பற்றிப் பேசுவதில் பயனில்லை. அதற்கு அரசியல் கட்சிகளில் ஒற்றுமை வேண்டும். அவ்வித சூழ்நிலை சமீப காலத்தில் உருவாகுமென்று எதிர்பார்ப்பதற்கில்லை. எனவே, இப்போதுள்ள சாஸனத்தை அப்படியே பற்றி ஒழுகுவதாக உறுதியான சங்கற்பம் செய்து கொள்ள வேண்டும். ஏதேனும் சிறு மாறுதல் தேவை எனத் தோன்றினாலும், சட்ட நிபுணர்கள் கொண்ட ஒரு குழு பரிசீலித்து ஆமோதித்த பின்பே அப்படிப்பட்ட திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும். பொறுப்புள்ள சர்க்கார்கள் பின்பற்ற வேண்டிய சம்பிரதாயங்களைப் பற்றி ஆலோசனை கூறவும், மத்ய — மாநில சர்க்கார்களின் தொடர்பு குறித்து யோசனை சொல்லவும் மேற்படி சட்ட நிபுணர் குழு உதவ வேண்டும். இக்குழுவில் எழுவர் இருக்கலாம். இவர்களில் மூவராவது ஸுப்ரீம் கோர்ட்டின் முன்னாள் நீதிபதிகளாக இருத்தல் வேண்டும்.

2. சட்டத்தின் ஆட்சி, பட்சபாதமற்ற சம நீதி: சட்டத்துக்கிசைந்த வாழ்முறையைப் பூரணமாக அமுலாக்க வேண்டும். சட்டத்தை மீறி வன்முறையில் இறங்குவோர் அனைவர் மீதும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படிச் செய்தாலன்றி முன்னேற்றம் சாத்தியமே இல்லை. அரசியல் நோக்கங்களுக்காக, சட்டத்தின் ஆட்சியை அமுல்செய்வதில் சிறிதும் விட்டுக்கொடுப்பதற்கேயில்லை. மக்களுக்குப் பட்சபாதமற்ற சமநீதி கிடைப்பதற்காக நீதி பரிபாலனத்துக்குப் பூரண சுதந்திரம் தரவேண்டும். நீதிபரிபாலனத்தில் அரசியல் தலையீடு கூடவே கூடாது. நீதி மன்றத்தினரை நியமிப்பதில் அரசியல், அல்லது கட்சி நோக்கம் அறவே கூடாது.

3. நல்ல நிருவாகம்: நீதிமன்றம் போலவே நிருவாகம் நல்லபடியிருந்தால்தான் முன்னேற்றத்துக்கு அடித்தளம் போட்டதாகும். நிர்வாக அமைப்பு, ஊழல்கள் நெருங்க முடியாததாகவும், திறமை வாய்ந்ததாகவும் இருக்க வேண்டும். நீதிபரிபாலனத் துறை போலவே, திறமையும் சுதந்திரமும் பொருந்திய பப்ளிக் ஸர்வீஸ் கமிஷனிடம் உத்தியோகத் தேர்வுப்பொறுப்பு ஒப்படைக்கப்பட வேண்டும். இதில் மத்திய, மாநில அரசாங்கத் தலையீடு கூடாது. கமிஷனின் முடிவுக்கு மாறாகச் சர்க்கார் எவரையும் நியமிக்க முயலக் கூடாது.

மந்திரிமார்களும் சட்டசபையாளரும் லஞ்ச ஊழலுக்கு ஆளாகாதிருந்தாலொழிய, உத்தியோகஸ்தர்களிடம் நேர்மையை வலியுறுத்துவது கடினம். மந்திரிமார் — சட்டசபையாளர் குறித்த குறைகளைத் தைரியமாக விசாரிக்க 'லோக்பால், லோகாயுக்த்' ஆகிய அமைப்புக்களை நன்கு செயல்படுத்த வேண்டும். சட்டசபையாளர்களுக்கென ஒழுங்கு விதிமுறைகள் வகுக்கவேண்டும்.

நிதி விஷயத்தில் எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்குச் சிக்கனம் வேண்டும். சர்க்கார் பட்ஜெட்கள் யாவும் வரவுக்கும் செலவுக்கும் ஈடுகட்டுவனவாகவே இருத்தல் வேண்டும். பற்றாக்குறை பட்ஜெட்டே கூடாது.

4. மத்திய — மாநில உறவு: சாஸனம் விதித்தபடி ராஜ்யங்கள் முழு சுயாதி

கார உரிமை பெற்றிருக்க வேண்டும். சாஸனத்தை முறித்தோ, அல்லது திரித்தோ, காரியங்கள் செய்யப்பட்டாலன்றி, மாநில சர்க்கார்களுக்கு உரித்தான விஷயங்களில் மத்திய சர்க்கார் தலையிடக் கூடாது. சாஸனத்தின் 263-வது பிரிவு கூறுவது போல், ஓர் அனைத்து மாநிலக் குழு (Inter State Council) நிறுவப்பட்டு, மத்திய-மாநிலத் தொடர்பு குறித்த விஷயங்கள் யாவும் அதனால் நிர்வகிக்கப்பட வேண்டும். அரசியல் சாஸனம் பற்றிய கருத்து வேறுபாடுகளோ அனுஷ்டிக்க வேண்டிய சம்பிரதாயங்கள் பற்றிய பிரச்னைகளோ மத்திய, மாநில சர்க்கார்களிடையே இருக்குமாயின் முதலில் சொன்ன சட்ட நிபுணர் குழுவின் ஆலோசனை கோரப்பட வேண்டும். நிதிக் கமிஷனின் சிபாரிசுப்படியே மாநில சர்க்கார்களுக்கு மானியம் முதலியன வழங்கப்பட வேண்டும்.

மாநில அரசாங்கங்களும், இவ்விதமே பஞ்சாயத்து ஆட்சி, நகரசபை பரிபாலனம், கூட்டுறவு அமைப்புக்கள் இவற்றில் தலையிடாமல் அவற்றுக்குச் சட்ட வரம்புக்குட்பட்ட அதிகபட்ச சுதந்திரம் தர வேண்டும்.

5. அந்நியக் கொள்கை: எல்லா நாடுகளிடத்தும் நட்புப் பாராட்ட வேண்டும். குறிப்பாக ஜனநாயக நாடுகளுடன் நெருக்கமான தொடர்பு கொள்ள விசேஷ முயற்சிகள் எடுக்க வேண்டும். பாகிஸ்தானுடன் நம் தொடர்பை நட்பு முறையில் முன்னேற்றுவதற்கு நம்மால் சாத்தியமான அனைத்தும் செய்ய வேண்டும்.

6. பொருளாதாரக் கொள்கைகள்: (அ) வறுமையை ஒழித்தல்; மக்களின் வாழ்க்கைத் தரத்தை ஒரே சீராக உயர்த்துதல்; வயதுவந்த அனைவருக்கும் முழுநேர வேலைக்கு வசதி செய்தல் — இவையே பொருளாதாரத்தின் முக்கிய லட்சியங்களாக வேண்டும். இந்த லட்சியங்களை மேற்கொள்கையில் தேச சுபிட்சத்தையும், சமூக சமநீதியையும் மனத்தில்கொண்டு, தனியாரும் கார்ப்பொரேஷன்களும் நிர்வகிக்க முடியாத துறைகளில் மட்டுமே சர்க்கார் ஈடுபட வேண்டும்.

(ஆ) மத்திய சர்க்கார் தபால் தந்தி, ரயில்வே, விமானப் போக்குவரத்து, துறைமுகம், கப்பல் போக்குவரத்து, விஞ்ஞான ஆராய்ச்சி ஆகிய தேசிய வாழ்வின் அடிப்படைச் சேவைகளில் ஈடுபாடு காட்ட வேண்டும். நாணய மதிப்பின் ஸ்திரத்தன்மையைக் காப்பதிலும், விலைவாசிகளைக் கட்டுப்படுத்தி வைப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும். பெருத்த மூலதனம் தேவைப்படும் தொழில்களைச் சர்க்காரே மூலதனம் போட்டு, சர்க்காரே நேரடியாக நடத்துவதை ஆட்சேபிக்கலாகாது. ஆனால் இதற்கு இரு நிபந்தனைகள் உண்டு. ஒன்று, இந்தத் தொழிலகங்கள் ஒவ்வொன்றும் சட்டப்படி சுய நிர்வாக சுதந்திரம் பெற்றிருக்க வேண்டும்; இரண்டாவது, அவை லாபகரமாக நடத்தப்பட வேண்டும். இப்போதுள்ள உருக்காலைகளும் மற்ற கனரக ஆலைகளும் லாபகரமாகத் தொழில்பட ஆரம்பித்தாலன்றி, மேற்கொண்டு இத்துறைகளை விஸ்தரிக்கலாகாது. வானொலியும் டெலிவிஷனும் ஒரு சுதந்திரம் வாய்ந்த தனிக் கார்ப்பொரேஷன் வசம் இருக்க வேண்டும்.

(இ) மாநில சர்க்கார்கள் நீர்ப்பாசனம், மின்விசை உற்பத்தி, அதன் விநியோகம், சாலைகள் அபிவிருத்தி ஆகியனவற்றில் கவனம் செலுத்த வேண்டும். கல்வி, சுகாதாரம், குடிநீர், துப்புரவு ஆகிய பொதுத் தேவைகள் மக்கள் அனைவருக்கும் திருப்திகரமாக இருக்கும்படி விஸ்தரிக்கப்பட வேண்டும்.

(ஈ) விசேஷ கவனத்துக்குரிய ஒரு திட்டம் வருமாறு: விவசாயத்தில் நீர்ப்பாசனத்துக்கு அடுத்தபடியாக மிகவும் ஊக்க வேண்டியது கூட்டுறவு வசதிகளேயாகும். விதைகள், ரசாயன எரு, டிராக்டர் உள்ளிட்ட உழவுக் கருவிகள் ஆகியனவற்றைக் கூட்டுறவு அடிப்படையில் வழங்க வேண்டும். விவசாயத்துக்கான கடன் தேவை முழுதும், கூட்டுறவுச் சங்கங்களாலும், மாவட்ட — மாநில கூட்டுறவு வங்கிகளாலும் பூர்த்தி செய்யப்பட வேண்டும். பயிரிடப்படும் நிலமனைத்துக்கும் இன்ஷ்யூரன்ஸ் காப்பு இருக்க வேண்டும். இப்போது வசூலிக்கப்படும் நில வரியில் ஒரு பாகமே இதற்கான 'பிரீமிய'மாகக் கருதப்படலாம்.

(உ) கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும், யூனியன்களுக்கும் போதிய அதிகாரமும், நிதி வசதியும் தந்து அவற்றைத் திறமையுள்ள சுதந்திர நிர்வாக ஸ்தாபனங்களாக்க வேண்டும். விவசாயத்தில் வேலை இல்லாத பருவங்களில் மக்களுக்கு வேறு வேலை தருவது இவற்றின் பொறுப்பாக வேண்டும். நிலமற்ற உழவுத் தொழிலாளருக்கும், வசதியற்ற குடியானவர்களுக்கும் இவை வீடு கட்டித் தர வேண்டும். இதற்கான நிதியத்தை மத்திய — மாநில சர்க்கார்கள் ஒரு திட்டமிட்ட அடிப்படையில் வழங்க வேண்டும்.

இவ்வாறே நகரசபைகளும், கார்ப்பொரேஷன்களும் குடிநீர், கழிகால் வசதி ஆகியவற்றை மேற்கொள்ள நிதி வசதி ஏற்படுத்தித் தர வேண்டும். இந்த ஸ்தாபனங்கள் நகரங்களில் வேலையற்றிருப்போருக்கு வேலை தருவதிலும், சேரி வாழ் மக்களுக்கு வீடு கட்டித் தருவதிலும் கவனம் செலுத்த வேண்டும். படிப்பறிவிலும், தொழிலறிவிலும் தேர்ச்சி பெற்றும் வேலை இல்லாதிருப்போர் பிரச்னையை மாநில சர்க்காரே விசேஷ இலாகா மூலம் தீர்த்துவைக்க வேண்டும்.

(ஊ) தொழிலாளர் உறவு: தேசிய வருமானம் ஒரே சீராக உயர வேண்டுமாயின், தனியார் துறை, சர்க்கார் துறை இரண்டிலும் உள்ள எல்லாத் தொழில் நிறுவனங்களிலும் தொழிலாளர் — நிர்வாகி உறவு நல்ல முறையில் இருக்க வேண்டும். வேலை நிறுத்தம், கதவடைப்பு ஆகியவற்றால் ஏற்படும் கஷ்டங்களைத் தாங்கும் திராணி நம் நாட்டுக்கு இல்லை. சர்ச்சைகள் ஏற்பட்டால் உடனுக்குடனே அவற்றை மத்தியஸ்தத்தின் மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும். நீதி மன்றத் தீர்ப்புக்களைப் போலவே மத்தியஸ்தக் குழுவின் முடிவுக்கு இரு சாராரும் கட்டுப்பட்டுப் பூரணமாக அமுல் செய்ய வேண்டும். கேரோ, நாச வேலை, வன்முறை ஆகியனவற்றைக் குற்றங்களாகக் கருதிச் சட்டப்படி

தண்டிக்க வேண்டும். இவ்வாறே கடமையிலிருந்து தப்பிக்கப் பார்க்கும் முதலாளிகள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(எ) கல்வி, மற்ற சமூகப் பணிகள்: பதினொன்று வயதுக்குக் கீழ்ப்பட்ட அனைவருக்கும் கட்டாயமாகக் கல்வி போதிக்கப்பட வேண்டும். விதிக்கப்பட்ட பாடதிட்டங்களுக்கு ஏற்ப, தனியார் பள்ளிகள் நடத்துவதற்கு அதிகபட்ச ஊக்கம் அளிக்க வேண்டும். மாநில சர்க்காரும் ஸ்தல ஸ்தாபனங்களும் இலவசக் கல்விநிலையங்களை நடத்த வேண்டும். அதே போதில், ஒரு பகுதி சர்க்கார் மானியமும், மறு பகுதி மாணவரின் சம்பளமாகவும் பெற்றுத் தனியார் பள்ளிகள் நடத்தவும் அனுமதிக்க வேண்டும். உயர் கல்வி என்பது சுதந்திர நிர்வாக உரிமை பெற்ற சர்வகலாசாலைகளின் பொறுப்பில் இருக்க வேண்டும். மாநில சர்க்கார்களின் உயர்கல்விசாலைகளும், மாணவர் விடுதிகளும் போதிய நிதி வசதிகளுடன் இந்தச் சர்வகலாசாலைகளிடம் ஒப்புவிக்கப்பட வேண்டும். பொது நிறுவனங்களாலும், டிரஸ்ட்களாலும் நடத்தப்படும் கல்லூரிகளுக்குச் சர்வகலாசாலை ஊக்கமும் உதவியும் தர வேண்டும்.

இவ்வாறே சுகாதாரத் துறையில் தனிப்பட்ட டாக்டர்களும், சர்க்கார் சார்பற்ற சங்கங்களும் ஒரு பகுதி சர்க்கார் மானியம் பெற்றும், மறு பகுதி நோயாளிகளிடம் கட்டணம் பெற்றும் மருத்துவப் பணிபுரிய விசேஷ ஊக்கம் தர வேண்டும். இவை சர்க்காரின் இலவச வைத்தியப் பணியைப் பூர்த்தி செய்யும் அங்கம்போல் சேவை புரியும்.

(ஏ) ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஒரு திட்டக் கமிஷன் இருக்க வேண்டும். மாநிலத்துக்குரிய துறைகளில் அது திட்டம் வகுக்க வேண்டும். இவ்வாறு திட்டமிடுதலை மத்திய சர்க்காரின் பூரண ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க வேண்டும். மத்திய திட்டக் கமிஷன் பின்வரும் இனங்களில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும்: (1) மத்திய இலாகாக்களுக்கு மட்டுமே உரித்தான விஷயங்கள் (2) ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களுக்கிடையே இணைப்பு தேவைப்படும் திட்டங்கள் விஷயமாக மாநில கமிஷன்களுக்கு யோசனை வழங்குதல் (3) மாநிலத் திட்டங்களுக்கு மத்திய உதவி வழங்குவதை ஒழுங்குமுறை செய்தல். நிதிக் கமிஷனின் சிபாரிசுப்படியே மாநிலத் திட்டங்களுக்கு மத்திய மானியம் வழங்கப்பட வேண்டும். ரிஸர்வ் பாங்கின் கட்டுப்பாட்டில் 'மாநில அபிவிருத்தி பாங்கு' ஒன்றை ஏற்படுத்தி, அதன் மூலமே உற்பத்திகரமான நோக்கங்களுக்காக மாநிலங்களுக்குக் கடன் வழங்க வேண்டும். பல தேசங்களின் திட்டங்களுக்குக் கடன் வழங்குகையில் உலக பாங்கு பின்பற்றும் நியதிகளைப் போலவே இதற்கான விதிமுறைகள் இருத்தல் வேண்டும்.

(ஐ) தேசம் முழுவதற்கும் மதுவிலக்கு விஸ்தரிக்கப்பட்டு, அதைக் கண்டிப்பாக அமுலாக்க வேண்டும். குதிரைப் பந்தயம், சர்க்கார் லாட்டரி, தனியார் லாட்டரி, மற்றும் எல்லாச் சூதாட்டங்களையும் தடை செய்ய வேண்டும்.

7. **பொது:** சுதந்திரத் தொழிலுக்கும், சுதந்திர வியாபாரத்துக்கும் இன்றுள்ள கட்டுப்பாடுகள் யாவும் நீக்கப்பட வேண்டும். மத்திய — மாநில சர்க்கார்களும், தொழில் துறையினரும், வர்த்தகர்களும் பிரதிநிதித்துவம் பெறும் ஓர் உயர்மட்டப் பொருளாதாரக் கமிஷனை அமைக்க வேண்டும். இந்தக் கமிஷன் அத்தியாவசியம் எனக் கருதும் அம்சங்களில் மட்டுமே தொழில் — வர்த்தகத்துக்குக் கட்டுப்பாடுகள் இருக்கலாம். அதிகார வர்க்கத்தினரின் தலையீடு இன்றி, சட்டபூர்வமாகச் சுதந்திர நிர்வாக உரிமை பெற்ற ஓர் அமைப்பிடமே இந்த அத்தியாவசியக் கட்டுப்பாடுகளை அமுல் செய்யும் பொறுப்பைத் தர வேண்டும். தேசிய வருமானம் பெருகப் பெருக, மக்களின் சமூகப் பாதுகாப்புக்குரிய விரிவான அமைப்பு உருவாகும். பிரஜையின் வசதியைப் பொறுத்து வரி விகிதங்களை அமைப்பது, அனைவருக்கும் உத்தியோக வாய்ப்பு ஏற்படுத்துவது, சமூக வாழ்வின் அடிப்படைத் தேவைகளை இலவசமாக வழங்குவது, சமூகத்துக்கு பாதுகாப்பு ஏற்படுத்துவது ஆகியனவே சமநீதிக்கும், ஏற்றத்தாழ்வுகளைக் குறைந்தபட்சமாக்குவதற்கும் உதவும் முக்கியமான சாதனங்கள். தேசியத் தொழில் முயற்சியைப் பூர்த்திசெய்வதற்கும், தேசப் பொருளாதாரத்தில் உள்ள பொத்தல்களை அடைப்பதற்கும் இசைவாக அந்நிய மூலதனமும் அந்நியரின் தொழில் நிருவாகமும் நமக்குக் கிடைக்க வழிசெய்ய வேண்டும் ; இதற்குரிய விசாலப் போக்குடைய கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

ராஜாஜியின் கருத்துக்கள்

முற்காலத்தில் தொழிலாளர் சமுதாயத்துக்கே பாதுகாப்புத் தேவைப்பட்டது. இன்றோ முதலாளிகளுக்கும் சமூகத்துக்குமே பாதுகாப்புத் தேவைப்படுகிறது. இன்று சமூகம் சிக்கிக் கொண்டுள்ள வாழ்முறையின் காரணமாக, தொழிலாளர்கள் 'நாங்கள் கேட்பதைத் தந்தாலொழிய விடமாட்டோம்' என்று சமூகத்தைச் 'சிறை' வைக்க முடிகிறது.

ஒருவரை உண்மையாக உழைக்குமாறு செய்ய எந்த நீதிமன்றத்தினாலும் இயலாது; ஆனால் சட்டத்தின் உதவி கொண்டு முதலாளி — தொழிலாளி ஒப்பந்தங்களைக் கட்டாயமாக வலியுறுத்தலாம். தற்போது ஒப்பந்த முறிப்புக்குப் போதிய பரிகாரம் இல்லை. அது தண்டனைக்குரிய குற்றமாக இல்லை. தொழிலாளர்கள் ஒப்பந்தத்தை முறிப்பதற்கு உதவியும் ஊக்கமும் தருகிறவர்களை இப்போதுள்ள சட்டம் தொடவேயில்லை.

இவ்வாறு அதிகார சக்தி ஒரு தட்டில் மட்டும் எடை கூடியிருப்பதை மாற்றி, சமநிலை உண்டாக்குவதில் பிரிட்டிஷ் சர்க்கார் முதல் அடி வைத்துள்ளது. சட்டப்படி செல்லாத வேலைநிறுத்தங்களில் ஈடுபடும் தொழிற்சங்கங்களுக்குக் கடுமையான அபராதம் விதிக்க வேண்டும் என பிரிட்டனில் மசோதா தயாரிக்கப்பட்டுள்ளது. இது சட்டமானால், தேச நலனுக்கு மாறாகவும், தர்ம நீதிக்கு மாறாகவும் ஒப்பந்தங்களை முறித்துச் செய்யப்படும் காரியங்களிலிருந்து சமூகத்துக்குக் காப்புக் கிடைக்கும். தொழிற்சங்கங்களின் கொடுங்கோன்மையைத் தவிர்க்கும் போதே இந்த மசோதா, தொழிலாளர்களின் நியாயமான உரிமைகளில் யாரும் தலையிட முடியாதவாறும் காப்புத் தருகிறது.

★

இந்நாட்களில் சேரி வாழ்வோருக்கு வசதியளிப்பது பற்றி ஏகப் பேச்சாக இருக்கிறது. நகரங்களில் வேலை செய்தோ, அல்லது வேலை தேடியோ வாழ்பவர்களின் உறைவிடமான சேரிகளின் அபிவிருத்திக்காகப் பொதுப் பணத்தைச் செலவிடுவதுடன் இந்தப் பிரச்னை முடிந்து விடவில்லை. அதைவிடத் தீர்க்கமான சிந்தனைக்குரிய விஷயம் இது. 'ஏழைகளுக்கு வீட்டு வசதி' என்ற பேரில், சில கண்டிராக்டர்களுக்கு அபரிமிதமான லாபம் ஏற்படுவதும் ராஜ்ய அரசாங்கங்கள் ஆளும் கட்சிக்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்கச் சேரி வாழ்வோரிடம் விசேஷ சலுகை காட்டுவதும் சேரி அபிவிருத்தி விஷயத்தில் உள்ளடக்கமாகும்.

நகர மக்கள் உடல் வணங்கிச் செய்ய வேண்டிய வேலைகளுக்குப் பிறரை எதிர்பார்க்கும் வரையில், நாட்டுப்புறத்திலிருந்து நகரத்துக்கு வருவோரின் எண்ணிக்கை உயர்ந்தே வரும். சேரிகளும் பெருகும். இன்று செங்கல்லும் சிமென்டும் போட்டுக் கட்டிய வீடுகளில் இன்றையச் சேரி மக்களைக் குடியமர்த்தினும் பீற்பாடு அவர்கள் இன்றைவிட உயர்ந்த வாழ்க்கைத்தரம் அடையும் போதுகூட, அவர்களை இக்குடியிருப்பிலிருந்து அகற்ற முடியாது. அவர்களே இந்த வீடுகளின் சொந்தக்காரர் போலாகி விடுவர். இவர்கள் வாழ்க்கைத் தரத்தில் உயர்ந்து விட்டதால், இவர்கள் செய்துவந்த பழைய வேலைகளைச் செய்யப் புதிதாக மக்கள் வந்தபடியே இருப்பர். இவர்களுக்காக மேலும் மேலும் சேரிகள் ஏற்படும். எனவே, இவ்விஷயத்தில் கூர்ந்த கருத்துச் செலுத்தி, இரமமாகத் திட்டம் வகுக்க வேண்டும்.

பிரிட்டனில் நகரங்களில் வாழும் குடும்பத்தினரும் தங்கள் காரியங்களைத் தாங்களே செய்து கொள்கின்றனர். நம் நகரங்களில் சேரிகள் பெருகக் கூடாது என எண்ணினால் நாமும் பிரிட்டனின் உதாரணத்தைப் பின்பற்ற வேண்டும்.

★

பாங்குகளை அரசுடைமையாக்கியது, ராஜமானியங்களை நிறுத்தியது ஆகியவற்றில் இந்திரா சர்க்காருக்கு ஸுப்ரீம் கோர்ட் தோல்வி தந்து விட்டதல்லவா ! இதன் விளைவாக, ஆட்சி பீடத்தினரும், பார்லிமென்டைச் சேர்ந்த சில கோஷ்டிகளும் ஸுப்ரீம் கோர்ட் ஜட்ஜுகளை நியமிப்பதிலேயே தங்கள் கைவரிசையைக் காட்ட முனையலாம். ஆட்சி பீடத்தின் ஆக்கிரகத்திலிருந்து சாஸனத்தைக் காப்பதில் ஸுப்ரீம் கோர்ட்டுக்கு உள்ள அதிகாரத்தைக் குலைக்க இவ்விதத்தில் அவர்கள் முற்படுவர்.

ஸுப்ரீம் கோர்ட், ராஜ்யங்களிலுள்ள ஹைகோர்ட்கள் ஆகியவற்றின் சுதந்திரத்தைக் காப்பதில் வழக்கறிஞர் சங்கங்கள் **(Bar Councils)** விழிப்புடன் செயலாற்ற வேண்டும். அரசாங்க நீதித்துறை அதிகாரிகள் விஷயத்தில் சலுகை காட்ட நிறைய இடம் இருப்பதால், இதைப் பிரயோகித்து வழக்கறிஞர் சங்கங்களை விலைக்கு வாங்கவும் முயற்சி நடக்கும். எனவே, இறுதியில் பத்திரிகைகள்தாம் சுதந்திரத்தின் பாதுகாப்பாளராக இருந்தாக வேண்டும்.

★


உழவனுக்கு நிலம் என்ற கொள்கையின் அடிப்படையில் பண்ணைகளைச் சிறு துண்டுகளாக்கப் பலவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் அதே சமயத்தில் விவசாயிகளுக்கு டிராக்டர்களை விற்கும் முயற்சியும் நடைபெறுகிறது. விவசாயத்தை இயந்திர மயமாக்கும் திட்டமும் பண்ணைகளைத் துண்டாடுவதும் ஒரே சமயத்தில் நடக்க முடியாது. 'சோஷலிஸ' லட்சியத்தைத் திருப்தி செய்வதற்காகப் பண்ணைகளைத் துண்டாடுவதும் பிறகு டிராக்டர்களைப் பயன்படுத்த வேணுமே என்பதற்காக எல்லா நிலத்தையும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஒருங்கிணைக்க வீணே முயல்வதும் மூடத்தனமான திட்டமாகும்.

ஆதாயம் பெறுவதற்கான வழி நிலத்துக்குச் சொந்தம் கொண்டாடுவது ஒன்று மட்டுமே அல்ல. சிறு துண்டு நிலங்களை வைத்திருப்பதால் கிடைக்கும் ஆதாயத்துக்கு இணையாகக் கிராம மக்கள் கூலியாகவே சம்பாதித்துவிடமுடியும். இதனை, ஏதோ சொற்ப காலத்துக்கு அதிகார பீடத்தில் அமர வாய்ப்புப் பெற்றவர்கள் உணரவேண்டும்.



இவ்வருட சங்கீத கலாநிதியாகிய ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள் மியூஸிக் அகாடெமியில் தமது தலைமையுரையை வழங்குகிறார். இவ் விழாவினைத் தொடங்கி வைத்தவர் கேரள கவர்னர் ஸ்ரீ விசுவநாதன்.

இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் விழாவுக்குத் தலைமை வகித்த டாக்டர் பிருகபாணியையும் தொடங்கிவைத்த மைசூர் கவர்னர் ஸ்ரீ தர்மவீராவையும் இங்கே காண்கிறோம்.



தமிழிசை விழாவின் இவ்வருடத் தலைமையை ஏற்ற ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி 'இசைப் பேரறிஞர்' விருதினை ஸ்ரீ வி. வி. நரசிம்மனிடமிருந்து பெறுகிறார்.





திருப்பதி P. V. அனந்தசயனம் அய்யங்கார் அவர்கள் குமாரர் சிரஞ்சீவி P. V. பார்த்தசாரதிக்கும், ஸ்ரீ T. V. ராகவாச்சாரியார் அவர்கள் குமாரத்தி சௌ. வேதவல்லிக்கும் சமீபத்தில் காஞ்சிபுரத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!



காசியில் பிரும்மஸ்ரீ சுவாமிமலை விசுவநாத சாஸ்திரிகளுக்கு ஹனுமான் காட்டில் அவர்கள் கிருஹத்தில் ஷஷ்டியப்தபூர்த்தி சமீபத்தில் வெகு விமரிசையாக நடந்தேறியது. மாலையில் வஸந்த பூஜையும், வித்வத் ஸதஸும் நடந்தன. பலஇடங்களிலிருந்து வாழ்த்துக்களும் ஆசிகளும் வந்தன. காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளிடமிருந்து ப்ரஸாதமும் சால்வையும் அனுக்கிரஹித்து வந்து கொடுக்கப்பட்டது.

ரகுபதி ராகவ

மகாத்மா காந்தி

தமிழாக்கம்: ராஜாஜி



57

சூரிய அஸ்தமனம், பாலசந்திரன், விண்மீன்கள் விளங்கும் இரவு இவற்றின் சொல்லுக்கடங்காத அழகெல்லாம் பரம் பொருளின் அழகைத்தான் எடுத்துக் காட்டுகின்றன. இவை ஆண்டவனைத் தியானிக்கச் செய்கின்றன. மெய்ப்பொருளின் அழகே இவற்றிற்கெல்லாம் அழகைத் தருகிறது. அந்தி மாலையின் அழகைக் கண்டு வியந்தாலும் சந்திரனுடைய வடிவழகில் மூழ்கினாலும் என் உள்ளம் மலர்ந்து ஆண்டவனின் பாதத்துக்குச் செல்கிறது. அவனையும், அவன் அருளையும் இந்தக் காட்சிகளில் காண முயல்கிறேன். அவனை உள்ளத்தில் வைத்த போதுதான் இந்த அழகு நிறைந்த காட்சிகள் எனக்கு மகிழ்ச்சி தருகின்றன. அவனை மறந்துவிட்டேனானால் இவற்றில் ஒரு பயனுமில்லை. இவை தடுக்கும் இடையூறுகளேயாகும். முக்தியடைவதற்குச் சரீரமே தடையாவது போல் பொருள்களின் அழகும் தடையாகி விடும். (யங் இந்தியா, 13 - 11 - 24)

சத்தியமே முதலில் நாம் தேட வேண்டிய பொருள். அது கிட்டி விட்டால், அழகு தானாக உண்டாகும். நற்பயனும் தானாக உண்டாகும். இதைத்தான் ஏசுநாதர் குன்றின் மேல் நின்று உபதேசித்தது. ஏசுநாதர் சிறந்த கலைஞர் என்றே நான் கருதுகிறேன். உண்மையைக் கண்டும் தான் அடைந்த தரிசனத்தைப் பிறருக்கு எடுத்துக்காட்டியும் வந்த அவர் ஏன் உத்தம கலைஞர் ஆக மாட்டார். அத்தகைய கலைஞரே மகம்மது நபியும். அரபி பாஷையில் குர் ஆனே சிறந்த கலைப் பொருள் என்று அரபி நூல்களைப் படித்தவர்கள் சொல்கிறார்கள்.

அழகைப் பற்றிச் சிந்தனை செலுத்தாமலே ஏசுநாதரும் மகம்மது நபியும் பேசிய பேச்சில் கலைப் பொருளின் அழகு வந்து சேருகிறது. காரணம், அவர்களுடைய வாக்கிலிருந்த சத்தியமே; சத்தியமும் சௌந்தர்யமும் முடிவில் ஒன்றே. அதை அடைவதுதான் என் ஆசை. அதற்காகத்தான் என்வாழ்க்கை. உயிரையும் கொடுத்து அதைப் பெறுவேன். (யங் இந்தியா, 20 - 11 - 24)

கோடிக்கணக்கான மக்களுக்குக் கலையழகை எப்படிச் சொல்லித் தருவது? அழகை உணரச் செய்து, அதன் வழி அவர்கள் மெய்ப்பொருளைக் காணச் செய்வது முடியாத காரியம். ஆனபடியால் அவர்களை முதலில் உண்மையைக் காணச் செய்ய வேண்டும். அதை அவர்கள் கண்டு அநுபவித்த பிறகு அழகை அவர்களே காண்பார்கள். பசியில் வாடும் மக்களுக்கு எது உணவு தருகிறதோ அதில்தான் நான் அழகைக் காண்கிறேன். முதற்கடமை அவர்களின் பிழைப்புக்கு வழி காட்ட வேண்டும். பிறகு கலைகளும் அவற்றின் மகிழ்ச்சியும் அழகும் தாமாகத் தோன்றும். (யங் இந்தியா, 20 - 11 - 24)

உண்மையான கலையில் வெளித் தோற்றத்தின் அழகோடு பொருளின் அழகும் இருக்க வேண்டும். கலைகளில் இரண்டுவிதங்கள் உண்டு. கலை விஷத்தைப் போல் கொல்லவும் செய்யும். மருந்துமாகி உயிரைத் தரும். உண்மையான கலைப் பொருளை உண்டாக்கும் கலைஞன் சுத்த உள்ளமும் சீலமும் கொண்டவனாக இருக்க வேண்டும். (யங் இந்தியா, 11 - 8 - 21)

கலைக்கும் சுத்த வாழ்க்கைக்கும் சம்பந்தமில்லையென்று கருதுவது தவறு. என்னுடைய அநுபவத்தைக் கொண்டு இந்தக் கொள்கை சுத்தத் தவறு என்று சொல்வேன். சுத்த வாழ்க்கையே உத்தமக் கலைப் பொருளாகும். அதைப் போன்ற வேறு உண்மைக் கலைப்பொருள் கிடையாது. பயிற்சியடைந்து நன்றாகப் பாடப் பலர் கற்றுக் கொள்ளலாம். ஆனால் பரிசுத்தமான வாழ்க்கை என்கிற கானத்தைத் தோற்றுவிப்பவர்கள் வெகு சிலரே. பரிசுத்தமான வாழ்க்கையே சிறந்த கானம். (ஹரிஜன், 19 - 2 - 38)

ஒரு நல்ல புத்தகம் ஒரு நல்ல நண்பன்

தேசிய புத்தக வாரத்தைத் தொடர்ந்து சென்னையில் நான்காவது தேசிய புத்தகக் காட்சி நடைபெறும் நேரத்தில் சிலரின் புத்தகப் பழக்கத்தைப் பற்றி விசாரித்தபோது....



காலை எட்டு மணிக்கு ஆபீசுக்குப் புறப்பட்டு மாலை ஆறு மணிக்குத் திரும்பும் கணபதிக்குப் பொழுதுபோக்கு படிப்பு. தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியாகும் பிரபல பத்திரிகைகளைப் படித்தும்கூட வருஷத்துக்குச் சுமார் இருபது கனமான புத்தகங்கள் படிக்க நேரம் பிடிக்கிறார் இவர். ''இரவு தினம் இரண்டு மணி நேரம் படிக்கிறேன்'' என்று சாதாரணமாகக் கூறும் இவர் படிப்பவை அசாதாரணமான புத்தகங்கள்.

''சமீபத்தில் என்ன புத்தகங்கள் படித்தீர்கள்?''

ஒவ்வொன்றாக நினைவுகூர்கிறார்: ''கென்னடி வரலாறு, நூறு அமெரிக்கச் சிறுகதைகள், வியாஸரும் வால்மீகியும் காளிதாஸரும் பற்றி அரவிந்தர், பிளவட்ஸ்கியின் வேதாந்தத் திறவுகோல், இந்தியர் கண்ணில் அமெரிக்க வாழ்வு, சத்ய சாய் பேசுகிறார்.....'' என்று அடுக்கிக் கொண்டே போகிறார்.

கணபதி ஒரு புத்தக அன்பர்-நூல்களைப் படிப்பதால் மட்டும் அல்ல; அவற்றை விலை கொடுத்து வாங்குவதாலும். ''புதுப் புத்தகங்களை வாங்கி காட்ரெஜ் அலமாரியில் வைப்பேன். படிக்கப் படிக்க அவை மர பீரோவுக்கு வரும். அவற்றில் கையெழுத்துப் போட்டு விடுவேன்'' என்று தமது பழக்கத்தைக் கூறுகிறார், போட்டோ — பிளாக் நிறுவனத்தின் நிர்வாக அதிகாரியாகப் பணி புரியும் கணபதி.

* * *

''பத்திரிகைக்காரன் என்றால் பலவும் படிக்க வேண்டும்'' என்கிறார் 'ஹிந்து' உதவியாசிரியர் என். ஆர். பூவராகன். இசை, கலை, தத்துவம் என்னும் மூன்று துறைகளிலும் ஆழ்ந்த அறிவும் ஆராய்ச்சி அநுபவமும் நிறைந்த இந்த 'உழைக்கும் பத்திரிகையாளர்' புத்தகங்களுக்காக நிறையச் செலவிடுகிறார். ''இரவு பதினொரு மணிக்கும் படிப்பு, காலை ஐந்து மணிக்கும் படிப்பா, பரீட்சைக்குப் போகும் மாணவனைப் போல!'' என்று அடுத்த வீட்டுக்காரர்கள் வியந்து கேட்கிறார்கள். ''என் புத்தகங்களில் படித்து முடித்த தேதியும் நேரமும் குறிப்பிடுவேன்'' என்று கூறும் இவரது வீடே ஒரு நூலகம். பழக்கத்தின் உள்ளே ஓர் உட்பழக்கமாக, அரிய நூல்களை வாங்கிச் சேகரிக்கும் 'காஸ்ட்லி ஹாபி' இவரைப் பிடித்துக் கொண்டிருக்கிறது. இப்படி இசை பற்றிப் பழம் நூல்களைச் சேகரிக்கிறார்.

மாணவராயிருந்தபோதே பற்றிக்கொண்ட பழக்கம் படிக்கும் பழக்கம். சார்லஸ் லாம்ப் சிறு வயதில் வயிற்றைக் கட்டி, துளித் துளியாகச் சேமித்து முப்பது ஷில்லிங் திரட்டி, ஒரு நாடகத் தொகுதி வாங்கிய நிகழ்ச்சி இந்தப் புத்தக அபிமானி நினைத்துப் பார்க்கும் கதை.

தொழிலதிபர் பொள்ளாச்சி மகாலிங்கம் சிறு வயதிலேயே படிக்கும் பழக்கத்தை விரும்பி வளர்த்துக் கொண்டிருக்கிறார். பாட்டனார் தினம் தரும் இரண்டணாவில் ஓரணா மிச்சப்படுத்தி, கலைமகள், மணிக்கொடி போன்ற பத்திரிகைகளை வாங்குவது வழக்கமாம். இதைப் படிக்க ஒரு தோழர் குழாம் இருந்ததாம். ''ஒன்பதாவது படிக்கும்போதே நகரசபை நூலகத்தில் நேருவின் புத்தகங்களைப் படித்து விட்டேன். கல்லூரி ஹாஸ்டலில் ஒரு நாள் டாகுரின் ''கோரா'' நாவலைக் காலைச் சிற்றுண்டிக்குப் பிறகு படிக்க ஆரம்பித்தேன். அதிலே அப்படியே ஈடுபட்டுவிட்டேன். சாப்பாட்டு நேரம் வந்தது.



எழுந்திருக்கவில்லை. மாலை காப்பிக்குப் போகவில்லை. இரவுசாப்பாட்டுக்குப் போகவில்லை. இரவு எட்டு மணிக்கு ஒரு முறை குளியலறைக்குப் போனேன். அவ்வளவுதான். படித்தேன், இரவெல்லாம் படித்தேன். விடியற்காலை நாலு மணிக்குப் புத்தகத்தை முடித்து விட்டுத்தான் படுத்தேன்! இப்போது கிடைக்கும் ஓய்வு நேரத்தில் — ரயிலில், விமானத்தில், காரில் படிக்கிறேன். என் படிப்பில்

பாதி பயணத்தின் போதுதான். சமீபத்தில் நான் படித்தவை: நியூ இங்கிலிஷ் பைபிள், ஹவாய் என்னும் நாவல். உடம்பு சரியில்லே என்றால் உற்ற துணை புத்தகம். சர்ச்சில் யுத்த நினைவுகளை அம்மாதிரி ஒரு நிலையில் படித்து முடித்தேன்.

''பல்வேறு நாட்டுச் சூழலில் அமைக்கப்பட்ட நாவல்களை நான் விரும்புகிறேன். இன்று சராசரியில் மாதம் ஒரு புத்தகம் படித்து விடுகிறேன்.

''தமிழ்ப் புத்தகங்கள், பத்திரிகைகள் எல்லாம் பார்க்கிறேன். புத்தகம் எனக்கு மிகவும் பிடித்து விட்டால் அந்த மகிழ்ச்சியை மற்றவர்களுக்கும் தெரிவிக்கிறேன்.''

நல்ல புத்தகங்களைப் பல பிரதிகள் வாங்கிப் பிறருக்கு வழங்கும் பழக்கமும் இவருக்கு உண்டு.

இவருடைய குழந்தைகள்?

''ஏதாவது வாங்கிக் கொள்ளுங்கள் என்று நேற்று ஆளுக்கு 25 ரூபாய் கொடுத்தால் உடனே போய் 'புக்சென்ட'ரில் அத்தனையும் புத்தகமாக வாங்கிக் கொண்டு வந்திருக்கிறார்கள்!''

வைத்துப் படித்திருக்கிறேன்! பத்திரிகைத் தொடர்கதைகள் எல்லாவற்றையும் பைண்டு செய்து பல புத்தகங்கள் தயாரித்து விட்டேன்'' என்று ஒரு பெரிய அலமாரியைக் காட்டுகிறார். இரவல் போய்த் தொலைந்தது போக மிச்சம் இருக்கும் பாதியாம் அது.

''இரண்டே நாட்களில் கௌன்ட் ஆஃப் மான்டி கிறிஸ்டோ படித்தேன். ஒரே மூச்சில் தாமஸ் ஹார்டியின் பதினெட்டுப் புத்தகங்களைத் தொடர்ந்து படித்தேன்; கல்லூரி நாட்களில் மு. வ. புத்தகங்கள் எல்லாம் படித்திருக்கிறேன்.

''இப்போது குழந்தைகள் அதிகம் படிக்க விடுவதில்லை. வேலையும் மிகுதியாக இருக்கிறது. தொழில் தொடர்பாக மாதம் இருபது பத்திரிகைகள் படிக்கிறேன். அவற்றில் கட்டுரைச் சுருக்கங்கள் உண்டு. அவற்றை மட்டுமே படிக்க முடிகிறது. அதன் பின்னர் அவசியமான முழுக் கட்டுரைகளையும் படிப்பேன்.

''நாலு நூலகங்களில் நான் அங்கத்தினர். என் கணவரோ மாதம் ஐம்பது ரூபாய்க்கு மேல் புத்தகங்கள் வாங்குகிறார். இன்று சுமார் இரண்டாயிரம் புத்தகங்களுக்குமேல் வீட்டில் இருக்கின்றன.''



* *

ரங்கூனுக்கு வடக்கே இருநூறு மைலில் சிற்றூரில் இருந்தபோதே மாணவப் பருவத்தில் நிறையப் புத்தகங்கள் படித்தவர் 'பாரி நிலைய' அதிபர் திரு க. அ. செல்லப்பா. ''அப்பா ரங்கூனுக்குப் போகும்போதெல்லாம் ஒரு சீட்டில் என் தேவையை எழுதிக் கொடுத்து விடுவேன். நான் கேட்கும் புதுப் புத்தகங்கள் வந்து விடும். அப்போது என் ஒரே செலவு புத்தகங்களுக்குத்தான்—மாதம் பதினைந்து, இருபது ரூபாய். அல்லயன்ஸ் வெளியீடுகளையும் சுத்தானந்த பாரதியார் நூல்களையும் வெ. சாமிநாத சர்மா புத்தகங்களையும் இருபது வயதில் படித்து விட்டேன். அவை அந்த நாளில் எத்தனையோ இளைஞர்களைக் கவர்ந்து வழிகாட்டிய புத்தகங்கள்.

பாரதம் முழுவதும் படித்தேன். வீட்டிலே பாரதம் படிக்கக் கூடாது என்பார்கள். ஜப்பான் சண்டையின் போது நான் சேர்த்து வைத்த ஆயிரம் புத்தகங்களையும் போட்டு விட்டுத் தமிழ்நாடு திரும்பினேன். ஏதேதோ வேலை பார்த்து, புத்தக விற்பனையில் ஈடுபட்டேன். பதிப்பாளர் ஆகி விட்டேன்.

''இன்று புத்தகம் வாங்கும் பழக்கம் தமிழகத்தில் நிறைய இல்லை என்பது ஒரு குறைதான். ஒரு சினிமா

குழந்தைகள் மருத்துவ மனையில் பணி புரிந்து கொண்டு, ஒரு கிளினிக்கையும் வைத்துக் கொண்டு, மூன்று குழந்தைகளுக்குத் தாயாகி ''எம்.டி.'' பரீட்சைக்குத் தயாரித்துக்கொண்டிருக்கும் ஸ்ரீமதி டாக்டர் தாரா நடராஜனுக்குப் படிக்க நேரம் இருக்கிறதா? இல்லை. ஆனால் பழக்கம் ஊறியிருக்கிறது.

''என் அப்பா இரவு இரண்டு மூன்று மணிவரை படிப்பார். ஒரு நாளைக்கு ஒரு நாவல் முடித்து விடுவார். எனக்கும் நாவல் பிடிக்கும். பள்ளி நாட்களில் 'லக்ஷ்மி'யின் நாவல்களைப் பரீட்சை நாட்களில் கூடப் பாடப் புத்தகம் நடுவே



படங்கள்: அசரவேகப் படிப்பு-அடிஞர், ராஜாஜி, அண்ணாதுரை

புத்தகக் கிறுக்கு



இவர் கையில் வைத்திருப்பது உலகிலேயே மிகவும் சிறிய ஆங்கில அகராதி. ஓர் அங்குல நீளமும் முக்கால் அங்குல அகலமும் உள்ள இந்த 384 பக்க அகராதியைப் பூதக்கண்ணாடியின் உதவியோடுதான் படிக்க முடியும். இது 1877-ம் ஆண்டுக்கு முன் அச்சடிக்கப்பட்டு இருக்க வேண்டும். ஏனெனில், 'ரேடியோ' என்ற வார்த்தை இதில் கிடையாது.

'ஸண்டே ஸன்' - நாயக்.

விடாமல் பார்க்கிறார்கள். ஒரு புத்தகம் வாங்கத் தயங்குகிறார்கள்.''

புத்தக விற்பனையாளராகத் திகழ்ந்த திரு மகாதேவன் இன்றைக்கும் ஓயாமல் படித்துக் கொண்டிருக்கிறார். எண்பத்தொரு வயதாகும் இவரைப் பார்க்கப் போகும்போது பெரிய புத்தகமும் கையுமாகத் தான் காட்சி யளிக்கிறார். பூதக் கண்ணாடியின் உதவியுடன் படிக்கிறார்.

''அப்பா கல்யாணராமய்யர் ஒரு புத்தக வியாபாரி. நல்ல புத்தகங்களும் பதிப்பித்தவர். சிறு வயதிலேயே நானும் இந்தத் துறையில் ஈடுபட்டேன். நாற்பது வருஷங்கள் நடத்தினேன். உலகம் எங்கும் ஆங்கிலப் பதிப்பாளர்களுடன் தொடர்பு உண்டு. இங்கே பொதுநூல்கள் வாங்குவோர் நிறைய இருந்தார்கள். நான் அவ்வப்போது தினசரியில் சிறு விளம்பரம் போடுவேன். அவ்வளவு தான். தேடி வருவார்கள். என் வீடே கடை. அலமாரி அலமாரியாக இருக்கும் புத்தகங்களை மணிக் கணக்கில் பார்த்து வேண்டியதை எடுத்துக் கொள்வார்கள். பெரிய வக்கீல்கள், ஜட்ஜுகள், என்ஜினீயர்கள், வியாபாரிகள், போலீஸ் அதிகாரிகள் எல்லோரும் வருவார்கள். சிவஸ்வாமி ஐயர் வந்தார். டி. ஆர். வேங்கடராம ஐயர் ஒரு நாள் வந்தார். அவர் சொல்லி, அப்புறம் ராதாகிருஷ்ணன் வந்தார். டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் நிறையப் புத்தகங்கள் வாங்குவார். வெள்ளைக்காரர்களும் வருவார்கள்.

''ஒரு நாள் ஒரு சீமாட்டி நிறையப் புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து, பார்வையிட வீட்டுக்கு எடுத்துப் போவதாகச் சொன்னார். பெயர் எழுதியபோதுதான் அவர் கவர்னரின் மனைவி என்று தெரிந்தது. அப்புறம் கவர்னரே வந்தார். சீனிவாச சாஸ்திரிக்கு ஓர் அகராதி வாங்கிக் கொடுத்திருக்கிறேன்.

''எனக்குப் படிப்பதுதான் பொழுது போக்கு. இப்போது பெரிய எழுத்துப் புத்தகங்களைப் படிக்கிறேன். நான் படிப்பது பெரும்பாலும் வாழ்க்கை வரலாறுகள்தாம். என் பையன் ரயில்வேயில் வேலை பார்க்கிறான். என் புத்தக விற்பனையை நிறுத்தி 'ரிடையர்' ஆகிவிட்டேன்!''

விசாரணை : தம்பி சீனிவாசன்

கருணை உள்ளம்



யுனைடெட் கமர்ஷியல் பாங்கின் தென் பிராந்திய மானேஜர் திரு எம். கருணாகரன் திடீரென்று டிசம்பர் 19ந் தேதியன்று காலமானார் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம். ஒரு சிறந்த பாங்கின் நிர்வாகி, திறமையான பணியாளர் என்பதுடன் தமது பெயருக்கேற்ப உயர்ந்த மனிதத் தன்மையும் பண்பும் உள்ளவர். அவருடைய உத்தியோகத்தில் மனித உள்ளங்களைப் புரிந்துகொண்டு செயல்பட வேண்டியது அவசியமாயிருந்தது. இதை அவர் செவ்வனே செய்தார். அபிமான உணர்ச்சியுடன் அநுதாப நோக்குடன் அவர் எப்போதும் நடந்து கொண்ட விதம் காரணமாக அவரைப் பலபேர் நண்பராகக் கொண்டு அவரிடம் அன்பு செலுத்தினர். ''எங்கள் முன்னேற்றத்தில் முழு அக்கறை கொண்டவர். நாங்கள் ஒரு சிறந்த நண்பனை இழந்தோம்'' என்று யூனியன் காரியதரிசி இதயபூர்வமாக வருந்திக் கூறுகிறார் என்றால் திரு கருணாகரன் எந்த அளவுக்குப் பலரது அன்பைக் கவர்ந்திருந்த பணியாளர் என்பது விளங்கும். அவருடைய குடும்பத்தினருக்கு அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.


பொன்னியின்
செல்வன்
அமரர்
கல்கி
ஐந்தாம் பாகம்
தியாக சிகரம்



பொன்னியின் செல்வன்

பூர்வ கதை

இன்றைக்கு ஆயிரத்து எண்பது ஆண்டுகளுக்கு முன்பு விஜயாலய சோழன் இரண்டாவது சோழ சாம்ராஜ்யத்துக்கு அடிகோலினான். சோழ நாட்டின் சேனா வீரர்கள் நாலு திசைகளிலும் படையெடுத்துச் சென்று வெற்றிக்கு மேல் வெற்றி அடைந்து சோழ சாம்ராஜ்யத்தின் எல்லையை விசாலப்படுத்தி வந்தார்கள். சுந்தரசோழ சக்கரவர்த்தியின் காலத்தில் மதுரைப் பாண்டிய குலத்தின் கடைசிப் பிரதிநிதியான வீரபாண்டியன் கொல்லப்பட்டான். பாண்டிய நாடு சோழ சாம்ராஜ்யத்தில் முற்றிலும் ஐக்கியம் அடைந்தது.

சுந்தரசோழ சக்கரவர்த்தியின் மூத்த புதல்வனும் வீரபாண்டியனுடைய தலைகொண்டவனுமான ஆதித்த கரிகாலன் சோழ சாம்ராஜ்யத்தின் பட்டத்து இளவரசனாக முடிசூட்டப் பெற்றான். வடதிசைச் சைன்யத்துக்கு மாதண்டநாயகனாகிக் காஞ்சியைத் தன் இருப்பிடமாகக் கொண்டான். காஞ்சியில் புதிதாகப் பொன் மாளிகை கட்டித் தன் தந்தையை அங்கு வந்து இருக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டு, பழைய வாணர் குடியில் பிறந்த வந்தியத்தேவன் என்னும் வீரனிடம் ஓலை கொடுத்து அனுப்பினான்.

* * *

சுந்தரசோழ சக்கரவர்த்தி அரண்மனையில் பாரிச வாயுவினால் பீடிக்கப்பட்டு நடமாட்டமின்றிப் படுத்த படுக்கையாக இருந்தார். உடல் நோயைக் காட்டிலும் அதிகமாக மன நோயினால் சுந்தர சோழர் பீடிக்கப்பட்டிருந்தார்.

இளம் பிராயத்தில் ஈழநாட்டை அடுத்திருந்த ஒரு சிறு தீவில் சுந்தர சோழர் தங்கியிருக்க நேர்ந்தபோது கரையர் குலத்தைச் சேர்ந்த ஊமைப் பெண் ஒருத்தியினால் கரடியின் வாயிலிருந்து காப்பாற்றப் பட்டார். அந்தப் பெண்ணிடம் காதல் கொண்டார். சில காலம் இருவரும் அந்தத் தீவில் ஆனந்த வாழ்க்கை நடத்தினார்கள்.

அப்போது சுந்தரசோழர் தாம் ஒருகாலத்தில் சக்கரவர்த்தியாகக் கூடும் என்று எதிர்பார்க்கவில்லை. அவர் பாட்டனாரான புகழ்பெற்ற





பராந்தக சக்கரவர்த்தி அனுப்பிய வீரர்கள் அவரைத் தேடிப் பிடித்து அழைத்துப் போனார்கள்.

* * *

பராந்தக சக்கரவர்த்தியின் மூத்த புதல்வர் இராஜாதித்தர் தக்கோலத்தில் இரட்டை மண்டலச் சைன்யத்துடன் நடந்த பெரும் போரில் வீர சொர்க்கம் அடைந்தார். அவருக்கு அடுத்த கண்டராதித்தருக்கு அச்சமயம் மக்கள் இல்லை. அவருக்கு இளையவரான அரிஞ்சய சோழர் வைதும்பராயன் மகளாகிய அழகிற் சிறந்த கல்யாணியை மணம் செய்து கொண்டிருந்தார். அவர்களுடைய ஏக புதல்வர் சுந்தர சோழர். பராந்தக சக்கரவர்த்தி மரணத் தறுவாயில் தமக்குப்பின் கண்டராதித்தரும் அவருக்குப் பிறகு சுந்தரசோழரும் சிம்மாசனம் ஏற வேண்டுமென்று திட்டமிட்டுக் காலமானார்.

சிவநேசச் செல்வரான கண்டராதித்தர் பட்டத்துக்கு வந்த பிறகு செம்பியன்மாதேவி என்று சரித்திரப் புகழ்பெற்ற மழவரையர் மகளை மணந்தார். அவர்களுக்கு மதுராந்தகன் என்றும் மகன் பிறந்தான். ஆயினும் கண்டராதித்தருக்குப் பின்னர், அவருடைய சகோதரர் அரிஞ்சய சோழர் ஒரு வருஷம் ஆட்சி புரிந்து இறந்த பிறகு, சுந்தர சோழர் சிம்மாதனம் ஏறினார்.

பாட்டனாரின் விருப்பத்தின்படியும் மற்றும் இராஜ குடும்பத்தினர் அனைவருடைய சம்மதத்தின் பேரிலும் சுந்தரசோழர் சக்கரவர்த்தியானார். அவர் திருக்கோவலூர் மலையமான் மகளை மணந்தார். அவர்களுக்கு இரு வீரப் புதல்வர்களும் ஓர் அருமை மகளும் பிறந்தார்கள். சுந்தர சோழரின் சாம்ராஜ்யம் விரிந்தது போலவே அவருடைய புகழும் நாலாதிசையிலும் பரவியது. ஆனாலும் அவர் மனத்துக்குள் மதுராந்தகனுக்குப் பட்டமில்லாமல் செய்த குற்றம் உறுத்திக் கொண்டிருந்தது. நோய்வாய்ப்பட்டுப் படுத்தபிறகு அவருடைய மனச்சாட்சி அவரை அதிகமாகத் தொந்தரவு செய்தது. இது போதாது என்று, ஈழத் தீவைச் சேர்ந்த ஊமைப் பெண் ஆவி வடிவத்தில் வந்து அவரைத் துன்புறுத்தியதாக

என்னிப் பிரமை கொண்டிருந்தார். இந்தக் காரணங்களினால் அவர் தமது குமாரர்களாகிய ஆதித்த கரிகாலனுக்கும் அருள்மொழிவர்மனுக்கும் சமாதானம் கூறிவிட்டு மதுராந்தகனுக்கே தமக்குப் பின்னால் பட்டம் கட்டிவிட்டால் நல்லது என்று கருதத் தொடங்கினார்.

விஜயாலய சோழர் காலத்திலிருந்து சோழ சாம்ராஜ்யத்தில் பழுவேட்டரையர் வம்சத்தினர் மிகச் செல்வாக்குப் பெற்று விளங்கி வந்தனர். சுந்தர சோழரின் காலத்தில் பெரிய பழுவேட்டரையர் சோழ நாட்டின் தனாதிகாரியாகவும் சின்னப் பழுவேட்டரையர் தஞ்சைக் கோட்டையின் தளபதியாகவும் பதவி வகித்து வந்தார்கள்.

அவர்களிடம் சுந்தரசோழர் பரிபூரண நம்பிக்கை வைத்திருந்தார். அவர்களுடைய விருப்பத்துக்கு மாறாக எதுவும் செய்ய அவர் விரும்பவில்லை.

பழுவேட்டரையர்களும், மற்றும் சோழ நாட்டுச் சிற்றரசர்கள் பலரும், முரட்டுச் சுபாவம் கொண்டவனாகிய ஆதித்த கரிகாலனை வெறுத்தார்கள்.

கரிகாலனுடைய சகோதரி குந்தவைப் பிராட்டியும் சகோதரன் அருள்மொழிவர்மனும் சோழ நாட்டு மக்களின் அன்பைப் பூரணமாகக் கவர்ந்திருந்தார்கள்.

இதனால் அவர்கள் பேரிலும் சிற்றரசர்கள் அசூயை கொண்டிருந்தார்கள். இக்காரணங்களினால் சிற்றரசர்கள் குலமுறைச் சட்டத்தை அனுசரித்து மதுராந்தகத்தேவனைச் சிம்மாதனத்தில் ஏற்ற விரும்பினார்கள். கொள்ளிடத்தின் வடகரையில் உள்ள கடம்பூர் சம்புவரையர் அரண்மனையில் அந்தரங்கக் கூட்டம் நடத்தி அவ்விதம் தீர்மானம் செய்தார்கள். இந்த அந்தரங்கக் கூட்டத்தின் நடவடிக்கைகளை வாணர் குலத்தைச் சேர்ந்த வந்தியத்தேவன் என்னும் வீரன் தெரிந்து கொள்ளும்படி நேர்ந்தது.

சுந்தர சோழ சக்கரவர்த்தியிடம் வந்தியத்தேவன் கரிகாலருடைய ஓலையைச் சேர்ப்பித்துவிட்டுப் பழையாறையில் இளையபிராட்டி குந்தவையைச் சந்தித்தான். முற்பிறவியின் தொந்தத்தினால் அவர்களுடைய உள்ளங்கள் ஒத்து ஒன்றாயின. குந்தவையின் விருப்பத்தின்படி அவளுடைய தம்பி அருள்மொழிவர்மனை அழைத்து வர வந்தியத்தேவன் இலங்கை சென்றான். பூங்குழலி என்னும் ஓடக்காரப் பெண் அவனைப் படகிலேற்றிக் கொண்டு போய் ஈழநாட்டில் சேர்த்தாள். இலங்கையில் அநுராதபுரத்துக்கு அப்பால் வந்தியத் தேவன் அருள்மொழிவர்மனைச் சந்தித்துக் குந்தவையின் ஓலையைக் கொடுத்தான். அதில், ''பொன்னியின் செல்வ! இராஜ்யத்துக்கு அபாயம் நேர்ந்திருக்கிறது. உடனே திரும்பி வரவும்'' என்று எழுதியிருந்தது.

* * *

அருள்மொழிவர்மன் குழந்தைப் பிராயத்தில் காவேரி நதியில் தாம் தந்தையுடன் உல்லாசப் படகிலே சென்று கொண்டிருந்த போது தவறி நதியின் வெள்ளத்தில் விழுந்து விட்டான். விழுந்த சமயத்தில் அதைப் படகிலிருந்தவர்கள் யாரும் கவனிக்கவில்லை. கரையிலே இருந்த பெண் ஒருத்தி நதி வெள்ளத்தில் பாய்ந்து குழந்தையைக் காப்பாற்றிப் படகிலிருந்தவர்களிடம் கொடுத்துவிட்டு உடனே மறைந்து விட்டாள். காவேரி அன்னைதான் அவ்வாறு இளவரசனைக் காப்பாற்றி மறைந்தாள் என்று பலரும் கருதினார்கள். இதன் காரணமாக, அருள்மொழிவர்மனுக்குப் 'பொன்னியின் செல்வன்' என்ற பட்டப் பெயர் ஏற்பட்டது.

பிற்காலத்தில் இராஜ ராஜ சோழன் என்று சரித்திரப் பிரசித்தி அடைவதற்கிருந்த பொன்னியின் செல்வன் அப்போது ஈழத்துப் போரில் ஈடுபட்டிருந்தான். மகிந்தன் என்னும் இலங்கை மன்னன் போரிலே தோற்று ஓடி மலைப் பிராந்தியத்தில் ஒளிந்து கொண்டான். புத்த பிக்ஷுக்களில் ஒரு பகுதியார் அருள்மொழிவர்மனை இலங்கை அரசனாக மணிமகுடம் சூட்டிக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டார்கள். பொன்னியின் செல்வன் அதை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டான்.

அருள்மொழிவர்மன் ஈழநாட்டிலிருந்தபோது, காடுகளில் பித்தியைப் போல் திரிந்து கொண்டிருந்த ஊமைச் செவிட்டு ஸ்திரீ ஒருத்தியைப் பார்த்தான். அவள் இளவரசனைச் சில அபாயங்களிலிருந்து காப்பாற்றினாள். அவளே தன்னைப் பொன்னி நதியின் வெள்ளத்திலிருந்து காப்பாற்றியவள் என்றும் அறிந்து கொண்டான். அவள் சித்திரங்களின் மூலம் தன்னுடைய பழைய வரலாற்றைத் தெரிவித்தாள். அதிலிருந்து மந்தாகினிக்கும் சுந்தர சோழருக்கும் இளம் பிராயத்தில் ஏற்பட்டிருந்த இணையில்லாத அன்பைக் குறித்து இளவரசன் அருள்மொழிவர்மன் அறிந்து கொண்டான்.

இப்போது வந்தியத்தேவன் அந்த ஸ்திரீயை ஈழநாட்டில் பார்க்க நேர்ந்தது. அவளுக்கும் பெரிய பழுவேட்டரையரின் இளையராணி நந்தினிக்கும் உருவப் பொலிவில் இருந்த ஒற்றுமையைக் கண்டு அவன் வியந்தான். அதைப் பொன்னியின் செல்வரிடமும் தெரியப்படுத்தினான்.

* * *

நந்தினி என்பவள் குழந்தைப் பிராயத்தில் பழையாறையில் ஆலயபட்டர் வீட்டில் வளர்ந்தாள். அவளிடம் ஆதித்த கரிகாலன் பிரியம் கொண்டான். குந்தவையோ அவளுடைய அழகைக் கண்டு அசூயை கொண்டாள். செம்பியன்மாதேவியின் கட்டளையினால் நந்தினி குழந்தைப் பருவத்திலேயே பாண்டிய நாட்டுக்கு அனுப்பப்பட்டாள்.

ஆதித்த கரிகாலன் இறுதியான பாண்டியர் யுத்தத்தில் வீரபாண்டியனைத் தேடிச் சென்று வைகை நதிக்கரையில் நந்தினி வாழ்ந்த சிறிய குடிசையில் கண்டுபிடித்தான். நந்தினி வீர பாண்டியன் உயிரைக் காப்பாற்றும்படி இரந்து மன்றாடினாள். கரிகாலன் அதைக் கேளாமல் வீர பாண்டியனுடைய தலையை வெட்டிக் கொன்றான். பின்னர் நந்தினி வயது முதிர்ந்த பழைய பழுவேட்டரையரை மணம் புரிந்து கொண்டாள். வீர பாண்டியனுடைய ஆபத்துதவிப் படையைச் சேர்ந்த ரவிதாஸன், தேவராளன், சோமன் சாம்பவன், கிரமவித்தன் முதலிய சதிகாரர்கள் வீரபாண்டியனுடைய மரணத்துக்குப் பழி வாங்கும் பொருட்டுச் சுந்தர சோழரின் குலத்தை அடியோடு கருவழிப்பதாகச் சபதம் செய்திருந்தார்கள். அவர்களுக்குப் பழுவேட்டரையரின் இளையராணியாகிய நந்தினி இரகசியமாக உதவி புரிந்து வந்தாள்.

கொள்ளிடக் கரைக் காட்டில் சதிகாரர்கள் கடைசி முறை இரகசியமாகக் கூடிப் பாண்டிய குலத்துச் சிறுவன் ஒருவனுக்குப் பட்டமும் கட்டினார்கள். ஆதித்த கரிகாலனைக் கொல்லும் பொறுப்பை நந்தினியே ஏற்றுக் கொண்டாள். அதே சமயத்தில் சுந்தரசோழரையும் பொன்னியின் செல்வனையும் கொன்றுவிட வேண்டும் என்றும் சதிகாரர்கள் முடிவு செய்தார்கள்.

* * *

பொன்னியின் செல்வன் ஈழ நாட்டிலிருந்து கோடிக்கரைக்குப் பிரயாணமாகி வந்தபோது நடுக்கடலில் கப்பல் சுழிக் காற்றில் அகப்பட்டு மூழ்கியது. அருள்மொழியும் வந்தியத்தேவனும் பூங்குழலியினால் உயிர் தப்பிக் கரை ஏறினார்கள். ஆனால் ஈழ நாட்டில் அப்போது பரவியிருந்த கொடிய தொற்றுச் சுரம் பொன்னியின் செல்வனைப் பற்றிக் கொண்டிருந்தது. கரை ஏறும்போது அவன் பிரக்ஞை அற்றிருந்தான். அவனைப் பூங்குழலியும் அவளுடைய இன்னொரு அத்தை மகனாகிய சேந்தன் அமுதனும் படகில் ஏற்றி நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்தில் கொண்டு போய்ச் சேர்த்தார்கள்.

குந்தவைப் பிராட்டியும் கொடும்பாளூர் இளவரசி வானதியும் நாகைப்பட்டினத்துக்கு வந்து சூடாமணி விஹாரத்துக்கு அருகில் கால்வாய்க் கரையில் இருந்த நந்தி மண்டபத்தில் அருள்மொழி

யைச் சந்தித்தார்கள். சோழ நாடெங்கும் சதியும் குழப்பமுமாக இருப்பதால் இன்னும் சில நாட்கள் சூடாமணி விஹாரத்திலேயே தங்கிப் பூரண உடல் வலிவு பெறும்படி குந்தவை அருள்மொழியைக் கேட்டுக் கொண்டாள். சகோதரியிடம் எல்லையற்ற மரியாதை வைத்திருந்த பொன்னியின் செல்வன் அதற்கு இணங்கினான்.

ஊமை ஸ்திரீ மந்தாகினி உயிரோடிருப்பதை அறிந்த குந்தவை அவளை எப்படியாவது சுந்தர சோழரிடம் சேர்ப்பிக்க விரும்பினாள். மந்தாகினி பொன்னியின் செல்வனைப் பார்ப்பதற்காகக் கோடிக் கரை வந்தாள். முதன் மந்திரி அநிருத்தரின் கட்டளைப்படி அவளைப் பலவந்தமாகக் கைப்பற்றித் தஞ்சைக்கு அழைத்துச் சென்றார்கள். தஞ்சைக்கு அருகில் அவள் தப்பி ஓடிவிட்டாள். சதிகாரர்களான ரவிதாஸனும் சோமன் சாம்பவனும் பழுவூர் அரண்மனையில் புகுவதைப் பார்த்து மந்தாகினி அவர்களைப் பின்தொடர்ந்தாள். பொக்கிஷ நிலவறை வழியாகச் சுந்தர சோழர் அரண்மனையை அடைந்தாள். அவர் தூங்குகிறார் என்று எண்ணி அருகில் நெருங்கினாள். சுந்தர சோழர் அவளை மந்தாகினியின் ஆவி உருவம் என்று எண்ணி விளக்கை எடுத்து அவள் மீது எறிந்தார். குந்தவையும் மற்றவர்களும் ஓடி வந்து அவருக்கு உண்மையைத் தெரிவித்தார்கள். சுந்தர சோழர் அவள் மீண்டும் தம் வாழ்க்கையில் வந்ததை விரும்பவில்லை. அதை அறிந்தோ அறியாமலோ மீண்டும் மந்தாகினி மறைந்தாள்.

* * *

கடம்பூர் சம்புவரையர் அரண்மனைக்குப் பெரிய பழுவேட்டரையரும் இளையராணி நந்தினியும் விஜயம் செய்தார்கள். அவளுடைய ஓலையைப் பார்த்துவிட்டு ஆதித்த கரிகாலர் இங்கு வந்தார். வந்தியத் தேவன் வழியிலே அவரைச் சந்தித்துக் கடம்பூர் போகாமல் தடுப்பதற்கு முயன்றான். அவருக்கு எதிராக நடக்கும் சதிகளைப் பற்றிக் கூறினான். நந்தினிக்கும் அவருக்கும் சகோதர உறவு உண்டு என்பதையும் தெரியப் படுத்தினான். கரிகாலர் அவன் தடுத்ததைக் கேளாமல் கடம்பூர் சென்றார்.

கூடுமானால் உள்நாட்டுக் குழப்பம் ஏற்படாமல் தடுக்கச் சிற்றரசர்கள் விரும்பினார்கள். ஆகையால் கரிகாலனிடம் சமரசம் பேசினார்கள். பெண்ணையாற்றுக்கு வடக்கேயுள்ள சாம்ராஜ்யப் பகுதியை அவனுக்கு அளிப்பதாகவும் மதுராந்தகனுக்குத் தென் பகுதியை அளிப்பதாகவும் கூறினார்கள். கரிகாலன் அதற்கு ஒருவாறு இணங்குவதுபோலப் பேசினான். மதுராந்தகனை அழைத்து வந்தால் ஒரு முடிவுக்கு வரலாம் என்று கூறினான். மதுராந்தகனை அழைத்து வரப் பெரிய பழுவேட்டரையர் தஞ்சைக்குப் புறப்பட்டார்.

கரிகாலனும் வந்தியத்தேவனும் வீரநாராயண ஏரிக் கரையின் மேற்குக் கரையிலிருந்த பெருங் காட்டில் வேட்டையாடச் சென்றார்கள். ஏரிக் கரைத் தீவு ஒன்றில் நீர் விளையாடிவிட்டு வன போஜனம் செய்வதற்காக நந்தினியும் சம்புவரையர் மகள் மணிமேகலையும் சென்றார்கள். ஏரிக்கரையில் இந்த நால்வரும் சந்தித்தார்கள்.

மணிமேகலை முன்னமே வந்தியத்தேவனிடம் காதல் கொண்டிருந்தாள். அவனை ஒரு சமயம் பெரும் அபாயத்திலிருந்து தப்புவித்திருந்தாள்.

கரிகாலன் நந்தினியைச் சிறிது நேரம் தனியாகச் சந்திக்க நேர்ந்த போது, "நீ என் சகோதரி" என்று தெரிவித்தான். அதுவும் ஒரு சதி என்று கூறி மறுத்தாள் அவள்.

மணிமேகலை யாழிசையுடன் தனது இனிய குரலிசையைச் சேர்த்துப் பாடினாள். கான இன்பத்தில் அவர்கள் மெய்ம்மறந்திருந்த போது புயற் காற்று வீசத் தொடங்கியது. அவர்கள் ஏறி வந்த படகு மிதந்து போய்விட்டது. மாலையில் சம்புவரையர் பெரிய படகுகளுடன் அங்கு வந்து அவர்களை அழைத்துச் சென்றார்.

இனி, இச்சரித்திரக் கதையின் இறுதிப் பகுதியாகிய ஐந்தாம் பாகத்தை நேயர்கள் படிக்கத் தொடங்கலாம்.

முதல் அத்தியாயம்

மூன்று குரல்கள்

நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்தில் பொன்னியின் செல்வர் பொறுமையுடன் காத்துக் கொண்டிருந்தார். தஞ்சைக்குச் சென்று தந்தை தாயாரைப் பார்க்க வேண்டுமென்ற ஆர்வம் அவர் உள்ளத்தில் பொங்கிக் கொண்டிருந்தது. இலங்கையின் அரசைத் தாம் கவர எண்ணியதாகத் தம் மீது சாட்டப்பட்ட குற்றம் ஆதாரமற்றது என்று நிரூபிக்க அவர் ஆர்வம் கொண்டிருந்தார். தந்தையின் வாக்கை மீறி நடந்ததாகத் தம் மீது ஏற்படக் கூடிய அபவாதத்தைக் கூடிய விரைவில் போக்கிக் கொள்ளவும் அவர் விரும்பினார்.

ஆயினும், தமது ஆர்வத்தையெல்லாம் அடக்கிக் கொண்டு, தமக்கையாரிடமிருந்து செய்தி வந்த பின்னர்தான் தஞ்சைக்குப் புறப்பட வேண்டும் என்று உறுதியாக இருந்தார்.

பொழுது போவது என்னவோ மிகவும் கஷ்டமாக இருந்தது. புத்த பிக்ஷுக்கள் தினந்தோறும் நடத்திய ஆராதனைகளிலும் பூஜைகளிலும் கலந்து கொண்டு சிறிது நேரத்தைப் போக்கினார்.

சூடாமணி விஹாரத்தின் சுவர்களிலே தீட்டப்பட்டிருந்த அருமையான சித்திரக் காட்சிகளைப் பார்ப்பதில் சிறிது நேரம் சென்றது.

பிக்ஷுக்களுடன், முக்கியமாகச் சூடாமணி விஹாரத்தின் ஆசாரிய பிக்ஷுவுடன் சம்பாஷிப்பதிலே கழிந்த பொழுது அவருக்கு உற்சாகத்தை அளித்தது.

ஏனெனில் சூடாமணி விஹாரத்தின் தலைமைப் பிக்ஷு கீழ்த் திசைக் கடலுக்கு அப்பாலுள்ள பற்பல நாடுகளிலே வெகு காலம் யாத்திரை செய்தவர். சீன தேசத்திலிருந்து சாவகத் தீவு வரையில் பல ஊர்களுக்கும் சென்று வந்தவர். அந்தந்த நாடுகளைப் பற்றியும் அவற்றிலுள்ள நகரங்களைப் பற்றியும் ஆங்காங்கு வசித்த மக்களைப் பற்றியும்

அவர் நன்கு எடுத்துக் கூற வல்லவரா யிருந்தார்.

சீன தேசத்துக்குத் தெற்கே கடல் சூழ்ந்த பல நாடுகள் அந்நாளில் ஸ்ரீ விசயம் என்னும் சாம்ராஜ்யத்தில் அடங்கி யிருந்தன. அருமண நாடு, காம்போஜ தேசம், மானக்கவாரம், தலைத் தக்கோலம், மாபப்பாளம், மாயிருடிங்கம், இலங்காசோகம், தாமரலிங்கம், இலாமுரி தேசம் முதலிய பல நாடுகளும் நகரங்களும் ஸ்ரீ விஜய சாம்ராஜ்யத்துக்கு உட்பட்டோ, நேசப் பான்மையுடனே இருந்து வந்தன. இவற்றுக் கெல்லாம் நடுநாயகமாகக் கடாரம் என்னும் மாநகரம் இணையற்ற சீர் சிறப்புக்களுடனும் செல்வ வளத்துடனும் விளங்கி வந்தது.

அந்த நாடு நகரங்களைப் பற்றி விவரிக்கும்படி ஆச்சாரிய பிக்ஷுவுக்கு ஒய்வு கிடைத்தபோதெல்லாம் பொன்னியின் செல்வன் அவரைக் கேட்டு வந்தான். அவரும் அலுப்பு சலிப்பில்லாமல் சொல்லி வந்தார். அந்நாடுகளில் உள்ள இயற்கை வளங்களைப் பற்றியும் வர்த்தகப் பெருக்கத்தைப் பற்றியும் கூறினார். பொன்னும் மணியும் கொழித்துச் செந்நெல்லும் கரும்பும் செழித்துச் சோழ வள நாட்டுடன் எல்லா வகையிலும் போட்டியிடக் கூடிய சிறப்புக்களுடன் அந்நாடுகள் விளங்குவதைப் பற்றிக் கூறினார். பழைய காலத்திலிருந்து தமிழகத்துக்கும் அந்த நாடுகளுக்கும் உள்ள தொடர்புகளைப் பற்றிக் கூறினார். பல்லவ நாட்டுச் சிற்பிகள் அந்தத் தேசங்களுக்குச் சென்று எடுப்பித்திருக்கும் அற்புதச்சிற்பத் திறமை வாய்ந்த ஆலயங்களைப் பற்றிச் சொன்னார். தமிழகத்திலிருந்து சென்ற சித்திர, சங்கீத, நாட்டியக் கலைகள் அந்நாடுகளில் பரவியிருப்பதைப் பற்றியும் கூறினார். ராமாயணம், மகாபாரதம் முதலிய இதிகாசங்களும், விநாயகர், சுப்பிரமணியர், சிவன், பார்வதி, திருமால் ஆகிய தெய்வங்களும், புத்த மதமும் அந்தத் தேசத்து மக்களின் உள்ளங்களில் கலந்து குடிகொண்டிருப்பதையும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரித்து உணர முடியாதவர்களாக அந்நாட்டு மக்கள் எல்லாத் தெய்வங்களையும் வணங்கி வருவதையும் எடுத்துச் சொன்னார். தமிழ் மொழியின் தந்தையாகிய அகஸ்திய முனிவருக்கு அந்த நாடுகளில் விசேஷ மரியாதை உண்டு என்பதையும் அம் முனிவருக்குப் பல கோயில்கள் கட்டியிருப்பதையும் கூறினார்.

இதையெல்லாம் திரும்பத் திரும்ப அருள்மொழிவர்மர் கேட்டுத் தெரிந்து மனத்திலும் பதியவைத்துக்கொண்டார். அந்தந்தத் தேசங்களுக்குத் தரை வழியான மார்க்கங்களையும் கடல் வழியான மார்க்கங்களையும் இளவரசர் நன்கு விசாரித்து அறிந்தார். வழியில் உள்ள அபாயங்கள் என்ன, வசதிகள் என்ன என்பதையும் கேட்டு அறிந்தார்.

''சுவாமி! அந்த நாடுகளில் மறுபடியும் தாங்கள் யாத்திரை செய்யும்படியாக நேரிடுமா?'' என்று வினவினார்.

''புத்த பகவானுடைய சித்தம்போல் நடக்கும். இளவரசே! எதற்காகக் கேட்கிறீர்கள்?'' என்றார் பிக்ஷு.

''நானும் தங்களுடன் வரலாம் என்ற ஆசையினால்தான்.''

''நான் உலகத்தைத் துறந்த சந்நியாசி; தாங்கள் புவி ஆளும் சக்கரவர்த்தியின் திருக் குமாரர். தாங்களும் நானும் சேர்ந்து யாத்திரை செய்வது எப்படி? தங்களைச் சில நாள் இந்த விஹாரத்தில் வைத்துக் காப்பாற்றும் பொறுப்பே எனக்குப் பெரும் பாரமாயிருக்கிறது. எப்போது என்ன நேருமோ என்று நெஞ்சு திக் திக்கென்று அடித்துக் கொள்ளுகிறது...''

''சுவாமி! அந்தப் பாரத்தை உடனே நிவர்த்தி செய்ய விரும்புகிறேன். இந்தக் கணமே இங்கிருந்து....''

''இளவரசே! ஒன்று நினைத்து ஒன்றைச் சொல்லி விட்டேன். தங்களை இங்கு வைத்துக் கொண்டிருப்பது பாரமாயிருந்தாலும் அதை ஒரு பாக்கியமாகக் கருதுகிறேன். தங்கள் தந்தையாகிய சக்கரவர்த்தியும் தமக்கையார் இளைய பிராட்டியும் புத்த தர்மத்துக்கு எவ்வளவோ உதவி செய்திருக்கிறார்கள். அதற்காக நாங்கள் பட்டிருக்கும் நன்றிக் கடன்களில் ஆயிரத்தில் ஒரு பங்குக்குக் கூட இப்போது நாங்கள் செய்வது ஈடாகாது. தாங்கள் புத்த தர்மத்துக்குச் செய்திருக்கும் உதவிதான் அற்பசொற்பமானதா? அநுராதபுரத்தின் சிதிலமான ஸ்தூபங்களையும் விஹாரங்களையும் செப்பனிடச் செய்த கைங்கரியத்தை நாங்கள் மறக்க முடியுமா? அதற்கெல்லாம் இணையான பிரதி உபகாரமாக ஈழ நாட்டின் மணி மகுடத்தையே தங்களுக்கு அளிக்க பிக்ஷுக்கள் முன்வந்தார்கள். இளவரசே! அதை ஏன் மறுத்தீர்கள்? இலங்கையின் சுதந்திர சிங்காதனத்தில் தாங்கள் ஏறியிருந்தால், நூறு நூறு—கப்பல்களில் ஏராளமான பரிவாரங்களுடனே கீழ்த்திசை நாடுகளுக்குத் தாங்கள் போய்வரலாமே? இந்தப் பிக்ஷுவைப் பின்தொடர்ந்து யாத்திரை செய்யவேண்டுமென்ற விருப்பமே தங்கள் மனத்தில் தோன்றியிராதே?'' என்றார் ஆச்சாரிய பிக்ஷு.



சேலத்தில் டிசம்பர் 4, 5, 6 தேதிகளில் இந்து தேவாலயப் பாதுகாப்பு மாநாடு நடைபெற்றது. மடாதிபதிகள் பலரும் சமயத்துறை பெரியார் பலரும் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். ஆலய நிர்வாகம், வழிபாட்டு முறை முதலியன குறித்த விஷயங்களை இத்துறையில் சம்பந்தப்பட்டோர் அடங்கிய ஒரு தனிக் குழுவிடமே ஒப்புவிக்க வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

''குருதேவரே! இலங்கை இராஜ குலத்தின் சரித்திரத்தைக் கூறும் 'மகா வம்சம்' என்னும் கிரந்தத்தைத் தாங்கள் படித்ததுண்டா?'' என்று இளவரசர் கேட்டார்.

''ஐயா! இது என்ன கேள்வி? 'மகா வம்சம் படிக்காமல் நான் இந்தச் சூடாமணி விஹாரத்தின் தலைவனாக ஆகியிருக்க முடியுமா?''


''மன்னிக்க வேண்டும். 'மகா வம்சம் படித்ததுண்டா?' என்று தங்களிடம் கேட்டது தங்களுக்குப் படிக்கத் தெரியுமா என்று கேட்பது போலத்தான். ஆனால், அந்த மகா வம்சம் கூறும் அரச பரம்பரையில் யார், யார் என்னென்ன பயங்கரமான கொடும் பாவங்களைச் செய்திருக்கிறார்கள் என்று தங்களுக்குத் தெரியும் அல்லவா? மகன் தந்தையைச் சிறையில் அடைத்தான்; தந்தை மகனை வெட்டிக் கொன்றான்; தாய் மகனுக்கு விஷமிட்டுக் கொன்றாள்; தாயை மகன் தீயிலே போட்டு வதைத்தான்!.... பெற்றோர்களுக்கும் பெற்ற மக்களுக்கும் உறவு இப்படியென்றால், சிற்றப்பன் மார்கள், மாமன்மார்கள், சிற்றன்னை பெரியன்னைமார்கள், அண்ணன், தம்பிகள் — இவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. குருதேவரே! இப்படிப்பட்ட கொடும் பாதகங்களை இலங்கை அரச குலத்தினர் செய்தனர் என்று மகா வம்சம் கூறுகிறதல்லவா?''

''ஆம், ஆம்! அத்தகைய தீச்செயல்களுக்கு அவரவர்கள் அடைந்த தண்டனைகளையும் கூறுகிறது. அந்த உதாரணங்களைக் காட்டி, மக்களைத் தர்ம மார்க்கத்தில் நடக்கும்படி 'மகா வம்சம்' உபதேசிக்கிறது. அதை மறந்துவிட வேண்டாம்! மகாவம்சம் புனிதமான கிரந்தம். உலகிலே ஒப்புயர்வற்ற தர்ம போதனை செய்யும் நூல்'' என்று ஆச்சாரிய பிக்ஷு பரபரப்புடன் கூறினார்.

''சுவாமி! 'மகா வம்சம்' என்ற நூலை நான் குறை சொல்லவில்லை. இராஜ்யாதிகார ஆசை எப்படி மனிதர்களை அரக்கர்களிலும் கொடியவர்களாக்கி விடுகிறது என்பதைப் பற்றித்தான் சொன்னேன். அத்தகைய கொடும் பாவங்களினால் களங்கமடைந்த இலங்கைச் சிம்மாதனத்தை நான் மறுதளித்தது தவறாகுமா?''

''மகா புத்திமான்களான புத்த சங்கத்தார் அதனாலேதான் இலங்கை அரச வம்சத்தையே மாற்ற விரும்பினார்கள். தங்களை முதல்வராகக் கொண்டு புதிய வம்சம் தொடங்கட்டும் என்று எண்ணினார்கள். தாங்கள் அதை மறுத்தது தவறுதான். இலங்கைச் சிங்காதனத்தில் வீற்றிருந்து அசோக வர்த்தனரைப் போல் உலகமெல்லாம் புத்த தர்மத்தைப் பரப்பிப் பாதுகாக்கும் வாய்ப்பு தங்களுக்குக் கிடைத்தது...''

''குருதேவரே! பரத கண்டத்தை ஒரு குடை நிழலில் ஆண்ட அசோக வர்த்தனர் எங்கே? இன்று இந்தப் புத்த விஹாரத்தில் ஒளிந்து கொண்டு தங்கள் பாதுகாப்பை நாடியிருக்கும் இந்தச் சிறுவன் எங்கே? உண்மையில் தங்கள் சீடனாகக் கூட நான் அருகதையில்லாத



''வருஷா வருஷம் வீடு பூராவும் வித விதமான காலண்டர்களாக மாட்டுவீங்கள். இந்த வருஷம் ஒண்ணே ஒண்ணுதானே மாட்டியிருக்கிறீர்கள்?''

''இந்த வருஷம் வீடு பூராவும் வெள்ளை அடிச்சுட்டேன்!'' — வி. கே.

வன். புத்த தர்மத்தை எப்படிப் பாதுகாக்கப் போகிறேன்?...''

''இளவரசே! அவ்விதம் சொல்ல வேண்டாம். தங்களிடம் மறைந்து கிடக்கும் மகா சக்தியைத் தாங்கள் அறியவில்லை. தாங்கள் மட்டும் புத்த தர்மத்தை மனப் பூர்வமாக ஒப்புக்கொண்டால் அசோகரைப் போல் புகழ் பெறுவீர்கள்...''

''என் உள்ளத்தில் இளம் பிராயத்திலிருந்து விநாயகரும், முருகனும் பார்வதியும் பரமேசுவரனும் நந்தியும் பிருங்கியும் சண்டிகேசுவரரும் கோயில் கொண்டிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் அப்புறப்படுத்திவிட்டல்லவா புத்த தர்மத்துக்கு இடம் கொடுக்க வேண்டும்? குருதேவரே! அடியேனை மன்னியுங்கள். தங்களுடனே நான் யாத்திரை வருகிறேன் என்று சொன்னபோது புத்த தர்மத்தில் சேர்ந்துவிடுவதாக எண்ணிச் சொல்லவில்லை. கடல்களைக் கடந்து, தூர தூர தேசங்களுக்குப் போய்ப் பார்க்கும் ஆசையினால் தங்களுடன் வருவதாகச் சொன்னேன்! ஆனாலும் மறுபடியும் யோசிக்கும்போது...''

''இளவரசே! தங்கள் வார்த்தையை நான் தவறாகத்தான் புரிந்து கொண்டு விட்டேன். ஆனாலும் புத்த தர்மத்துக்கும் தங்களுக்கும் தொடர்பு இல்லாமல் போகவில்லை. புத்த பகவானுடைய பூர்வ ஜன்மம் ஒன்றில் அவர் சிபிச் சக்கரவர்த்தியாக அவதரித்திருந்தார். புறாவின் உயிரைக் காப்பாற்றுவதற்காகத் தம் சதையை அவர் அரிந்து கொடுத்தார். அந்தச் சிபியின் வம்சத்திலே வந்தவர்கள் சோழ குலத்தினர். ஆகையினாலேயேதான் உங்கள் குலத்தில் பிறந்தவர்களுக்குச் 'செம்பியன்' என்ற பட்டம் ஏற்பட்டிருக்கிறது. இதைத் தாங்கள் மறந்துவிட வேண்டாம்.''

''மறக்கவில்லை, குருதேவரே! மறந்தாலும் என் உடம்பில் ஓடும் இரத்தம் என்னை மறக்க விடுவதில்லை. ஒரு பக்கத்தில் சிபிச் சக்கரவர்த்தியும் மனுநீதிச் சோழரும் என்னுடைய இரத்தத்திலேயும் சதையிலேயும் எலும்பிலேயும் கலந்திருந்து, **'பிறருக்கு உபகாரம் செய். மற்றவர்களுக்காக உன்னுடைய நலன்களைத் தியாகம் செய்!'** என்று வற்புறுத்திக் கொண்டே இருக்கிறார்கள். மற்றொரு பக்கத்தில் கரிகால் வளவரும் விஜயாலய சோழரும் பராந்தகச் சக்கரவர்த்தியும் என்னுடைய இரத்தத்திலே சேர்ந்திருந்து, **'கையில் கத்தியை எடு! நால் வகைச் சைனியத்தைத் திரட்டு. நாலு திசையிலும் படையெடுத்துப் போ! கடல் கடந்து போ! சோழ சாம்ராஜ்யத்தை விஸ்தரித்து, உலகம் காணாத மகோந்நதம் அடையச் செய்!'** என்று இடித்துக் கூறுகிறார்கள். இன்னொரு புறத்தில் சிவனடியார் கோச்செங்கணாரும், தொண்டை மண்டலம் பரவிய ஆதித்த சோழரும், மகானான கண்டராதித்தரும் என் உள்ளத்தில் குடிகொண்டு, **'ஆலயத் திருப்பணி செய். பெரிய பெரிய சிவாலயங்களை எழுப்பு! மேரு மலைபோல் வானளாவி நிற்கும் கோபுரங்களை நிர்மாணி!'** என்று உபதேசித்துக் கொண்டே இருக்கிறார்கள். என் முன்னோர்கள் இவ்வளவு பேருக்கும் நடுவில் கிடந்து நான் திண்டாடுகிறேன், குருதேவரே! அவர்களுடைய தொந்தரவுகளைப் பொறுக்க முடியாமல் உண்மையாகவே சில சமயம் எனக்குப் புத்த சமயத்தை மேற்கொண்டு பிக்ஷுவாகிவிடலாம் என்றுகூடத் தோன்றுகிறது. கருணை கூர்ந்து எனக்குப் பௌத்த சமயத்தைப் பற்றிச் சொல்லுங்கள். புத்த பகவானைப் பற்றிச் சொல்லுங்கள்!'' என்றார் பொன்னியின் செல்வர்.

இதைக் கேட்ட பிக்ஷுவின் முகம் மிக்க மகிழ்ச்சியடைந்து விளங்கியது. ''இளவரசே! பௌத்த மத்தைப் பற்றியும் புத்த பகவானைப் பற்றியும் தாங்கள் அறியாதது என்ன இருக்கக் கூடும்?'' என்றார்.

கீதைக் கதைகள்



22. சுவை

□ சகல கலைகளையும் கற்றுணர்ந்தவனான மமதையுடன் தலையை நிமிர்த்தினான், பல்லாயிரம் நூல்களைக் கற்றுத் தேர்ந்த ஒருவன்.

பல நூல்களை அரித்துத் தின்ற கரையான் அவனைப் பார்த்துச் சிரித்தது.

□ சுழன்றுபடியபடி மத்து வெண்ணெயைத் திரட்டியது. பாவம், இத்தனைக்கும் அதற்கு வெண்ணெயின் சுவை தெரியப் போவது கிடையாது.

□ எதிரியை வணங்குவது போல வளைந்து கும்பிட்டது வில். மறுகணம் வீழ்ந்தனன் எதிரி.

□ தர்மம் என்ற நாணயத்தின் சத்தியம், அகிம்சை ஆகிய இரண்டு முகங்களின் முத்திரைகளும் தெளிவாகத் தெரிந்தால்தான் அஃது ஆண்டவனின் கஜானாவில் செல்லவளியாகும்.

□ ''ஆறே, நீயேன் அவசரப்பட்டு ஓடுகின்றாய்?'' எனக் கேட்டான் காலதேவன்.

''நீயொருவன் வாழ்கின்றாய் என்பது உலகத்துக்குத் தெரிய வேண்டாமா ?'' எனக் கூறிய நதி மங்கை ஓடிக் கொண்டே இருக்கிறாள்.

□ ''கடலே! நீ ஏன் நாடுகளைப் பிரித்து நிற்கின்றாய்?'' என ஏங்கினாள் மீனவப் பெண்.

''பிரிக்கின்றதா? பிரிக்கப்பட்ட நாடுகளைத் தொடுத்தல்லவா நிற்கின்றது !'' என்றாள் மாலுமி.

□ சரீர பலம் மோதியது. ஒருவனுக்கு வெற்றி; மற்றவனுக்குத் தோல்வி. அறிவு பலம் மோதியது. ஒருவனுக்குத் தோல்வி; மற்றவனுக்கு வெற்றி. ஆன்மீக பலம் மோதியது. என்ன விந்தை? யாருக்குமே தோல்வி ஏற்படவில்லை!

□ அண்டாவில் கொதித்துக் கொண்டிருந்த நீரைப் பார்த்து, ''தண்மையை இழந்து, நீ வெப்பம் பெற்றாய். எனவே, நான் பெரியவன் என்பதை உணர்'' என்றது நெருப்பு.

வெந்நீர் கொதித்து வெளியே சிந்தியது. வீறு பேசிய நெருப்பு மறுகணம் அவிந்தது.

□ ''உண்ண உண்ண இவ்வுணவின் சுவை குன்றுவதேன்?'' என நாவைக் கேட்டேன்.

''உணவையும், என்னையும் குறை சொல்லாமல், உன் வயிற்றைக் கேள்!'' என்றது நா.

□ அறுவை வைத்திய நிபுணன் கத்தியால் கட்டியை அறுத்து நோயைக் குணப்படுத்தினான். அவனுடைய உயிரைப் பறிப்பதற்குக் கொலையாளி கத்தியை உபயோகித்தான். ''என் பயன் உபயோகிப்பவன் வசத்தே'' எனக் கத்தி அலறியது.

□ ''தீர்த்தா! கடல் நீர் உப்புக் கரிக்கின்றது. எனவே, எனக்குப் பாலிலே வாழும் பாக்கியத்தை அருளும்'' எனச் சிறு மீன் ஒன்று நோன்பிருந்தது.

அந்தச் சிறு மீனின் அறியாமையை நினைந்து நரி சிரித்தான்.

□ ''நான் வளைந்து உந்தித் தந்த வேகத்திலே சென்றதினால், அதனை வீழ்த்தினாய்!'' என்றது வில்.

''நான் நிமிர்ந்தே பாய்ந்ததினாலேதான் அது வீழ்ந்தது'' என்றது அம்பு.

இரண்டுமே வில்லாளியை மறந்து விட்டன.

□ தேசியக் கொடியை எல்லோரும் வணங்கினார்கள். அதனைத் தாங்கி நின்ற கம்பத்தை யாரும் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை.

□ ''தேவா! ஏன் பக்தர்கள் மலர்களால் தங்களை அஞ்சலி செய்கின்றார்கள் ?'' என்றாள் தேவி.

''மலரைக் காட்டிலும் மலிவான பொருள் அவர்களுக்குக் கிடைப்பதில்லை'' என்றான் தேவன்.

□ பத்தாவது அடியில் கல் உடைந்தது ''ஏனைய ஒன்பது அடிகளும் வெறும் சோதா அடிகளே'' எனப் பத்தாவது அடி இறுமாப்புப் பேசிற்று!

□ ''பெண்ணே! ஏன் சதா பேசிக் கொண்டே இருக்கின்றாய்?'' எனக் கேட்டார் துறவி.

''என்னிடமுள்ள ஒரே ஓர் ஆயுதமான நாவைத் துருப்பிடிக்க விடுவதா ?'' என அவள் கேட்டாள்.

□ புண்ணியம் செய்தது சந்தனம்: அஃது சுவாமிப்பணமாகக் கரைந்தது. புண்ணியம் செய்யாதவர்களும் தம்மைப் பக்திமான்களெனக் காட்டிக் கொள்வதற்காக அதனை அள்ளித் தமது மேனியிலே அப்பிக் கொள்கிறார்கள்.

□ ''அவளுடைய கண்ணீர் சோகத்தின் நீண்ட பிரசங்கம்!'' என்றான் கவிஞன்.

''அநுதாபம் வேண்டாம். அதைப் பார்க்கிலும் கணப்பதில் உலர்ந்துவிடக் கூடிய பொருள் வேறு எதுவும் உலகில் இல்லை'' என்றான் அநுபவஸ்தன்.

-- எஸ். பொன்னுத்துரை

''அதோ அந்தச் சுவர்களில் காணப்படும் சித்திரக் காட்சிகளை விளக்கிச் சொல்லுங்கள். அங்கே ஓர் இராஜ குமாரர் இரவில் எழுந்து போகப் பிரயத்தனப்படுவது போல் ஒரு சித்திரம் இருக்கிறதே? அது என்ன? அவர் அருகில் படுத்திருக்கும் பெண்மணி யார்? தொட்டிலில் தூங்கும் குழந்தை யார்? அந்த இராஜகுமாரர் முகத்தில் அவ்வளவு கவலை குடிகொண்ட தோற்றம் ஏன்?'' என்று இளவரசர் கேட்டார்.

''ஐயா! புத்த பகவான் இளம் பிராயத்தில் தங்களைப் போல் இராஜ குலத்தில் பிறந்த இளவரசராக இருந்தார். யசோதரை என்னும் நிகரற்ற அழகு வாய்ந்த மங்கையை மணந்திருந்தார். அவர்களுக்கு ஒரு செல்வப் புதல்வன் பிறந்திருந்தான். தகப்பனார் இராஜ்ய பாரத்தை அவரிடம் ஒப்புவிக்கச் சித்தமா யிருந்தார். அந்தச் சமயத்தில் சித்தார்த்தர் உலகில் மக்கட் குலம் அநுபவிக்கும் துன்பங்களைப் போக்குவ

தற்கு வழி கண்டுபிடிக்க விரும்பினார். இதற்காக அருமை மனைவியையும் செல்வக் குழந்தையையும் இராஜ்யத்தையும் விட்டுப் போகத் தீர்மானித்தார். அவர் நள்ளிரவில் அரண்மனையை விட்டுப் புறப்படும் காட்சிதான் அது. இளவரசே! இந்த வரலாற்றைத் தாங்கள் முன்னம் அறிந்ததில்லையா?''

''ஆம், ஆம்! பலமுறை கேட்டு அறிந்து கொண்டிருக்கிறேன். ஆனால் இந்தச் சித்திரத்தில் பார்க்கும்போது மனத்தில் பதிவது போல் வாயினால் கேட்ட வரலாறு பதியவில்லை. தூங்குகின்ற யசோதரையை எழுப்பி, 'சித்தார்த்தர் உன்னை விட்டுப் போகிறார்; அவரைத் தடுத்து நிறுத்து!' என்று எச்சரிக்கத் தோன்றுகிறது. சரி; அடுத்த சித்திரத்தைப் பற்றிச் சொல்லுங்கள்!''

புத்த பகவானுடைய வரலாற்றைக் குறிப்பிட்ட மற்ற சித்திரங்களையும் ஒவ்வொன்றாக ஆச்சாரிய பிக்ஷு எடுத்து விளக்கி வந்தார். அருள்மொழி வர்மர் புத்த தர்மத்தைத் தழுவினால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்ற ஆசை பிக்ஷுவின் இதய அந்தரங்கத்தில் இருக்கத்தான் இருந்தது. ஆகையால் மிக்க ஆர்வத்துடனே சித்தார்த்தருடைய சரித்திரத்தைச் சொல்லி வந்தார். கடைசியில், சித்தார்த்தர் போதி விருட்சத்தின் அடியில் அமர்ந்து தவம் செய்து ஞான ஒளி பெறும் சித்திரத்துக்கு வந்தார்.

அந்தச் சித்திரத்தைக் குறித்து அவர் சொன்ன பிறகு பொன்னியின் செல்வர், ''குருதேவா! தங்கள் கருத்துக்கு மாறாக நான் ஏதேனும் சொன்னால் தங்களுக்குக் கோபம் வருமா?'' என்று கேட்டார்.

''இளவரசே! நான் ஐம்புலன்களை வென்று மனத்தை அடக்கவும் பயின்றவன். தங்கள் கருத்தைத் தாராளமாகச் சொல்லலாம்'' என்றார் பிக்ஷு.

''போதி விருட்சத்தின் அடியில் வீற்றிருந்தபோது சித்தார்த்தர் ஞான ஒளி பெற்றார் என்பதை நான் நம்பவில்லை.''

ஐம்புலன்களையும் உள்ளத்தையும் அடக்கியவரா யிருந்தபோதிலும் பிக்ஷுவின் முகம் சுருங்கியது.

''இளவரசே! மகா போதி விருட்சத்தின் ஒரு கிளை அசோக வர்த்தனரின் காலத்தில் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டது. அந்தக் கிளை வேர் விட்டு வளர்ந்து ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்றைக்கும் பட்டுப் போகாமல் அநுராதபுரத்தில் விசாலமாகப் படர்ந்து விளங்கி வருகிறது. அந்தப் புனித விருட்சத்தைத் தாங்களே அநுராதபுரத்தில் பார்த்திருப்பீர்கள். பின்னர் 'நம்பவில்லை' என்று ஏன் சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்டார்.

''குருதேவரே! போதி விருட்சமே இல்லை யென்று நான் சொல்லவில்லை. அதனடியில் அமர்ந்து சித்தார்த்தர் தவம் செய்ததையும் மறுக்கவில்லை. அங்கேதான் அவர் ஞான ஒளி பெற்றார் என்பதைத்தான் மறுத்துக் கூறுகிறேன். என்றைய தினம் சித்தார்த்தர் மக்களுடைய துன்பத்தைத் துடைக்க வழி காண்பதற்காகக் கட்டிய மனைவியையும் பெற்ற மகனையும் உரிமையுள்ள இராஜ்யத்தையும் தியாகம் செய்து நள்ளிரவில் புறப்பட்டாரோ, அப்போதே அவர் ஞான ஒளி பெற்றுவிட்டார் என்றுதான் சொல்லுகிறேன். அதைக் காட்டிலும் ஓர் அற்புதமான செயலை நான் எந்த வரலாற்றிலும் கேட்டதில்லை. இராமன் தன் தந்தையின் வாக்கைப் பரிபாலனம் செய்வதற்காக இராஜ்யத்தைத் தியாகம் செய்தார். பரதர் தம் தமையனிடம் கொண்ட பக்தியினால் 'இராஜ்யம் வேண்டாம்' என்றார். அரிச்சந்திர மகாராஜா தாம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக இராஜ்யத்தைத் துறந்தார். சிபிச் சக்கரவர்த்தியும் புறாவுக்கு அடைக்கலம் கொடுத்து விட்ட காரணத்தால் தம் உடலை அறுத்துக் கொடுத்தார். ஆனால் சித்தார்த்தர் யாருக்கும் வாக்குக் கொடுக்கவில்லை; யாரையும் திருப்தி செய்ய விரும்பவில்லை. மனித குலத்தின் துன்பத்தைப் போக்க வழி கண்டுபிடிக்கும் பொருட்டுத் தாமாகவே எல்லாவற்றையும் தியாகம் செய்து விட்டுப் புறப்பட்டார். புத்த பகவான் போதி விருட்சத்தின் அடியில் ஞான ஒளி பெற்ற பிறகு, இதைக் காட்டிலும் அற்புதமான செயல் ஏதேனும் செய்ததுண்டா? ஆகையால் அரண்மனையை விட்டுப் புறப்பட்டபோதே அவர் ஞான ஒளி பெற்று விட்டார் என்று சொல்வது தவறாகுமா?''

இவ்விதம் பொன்னியின் செல்வர் கூறிய மொழிகள் ஆச்சாரிய பிக்ஷுவின் செவிகளில் அமுதத் துளிகளைப் போல் விழுந்தன.

''ஐயா! தாங்கள் கூறுவதில் பெரிதும் உண்மை இருக்கிறது. ஆயினும் போதி விருட்சத்தின் அடியிலேதான் மக்களின் துன்பங்களைப் போக்கும் வழி இன்னதென்பது புத்த பகவானுக்கு உதயமாயிற்று. அதிலிருந்துதான் மக்களுக்குப் பகவான் போதனை செய்யத் தொடங்கினார்.''

''சுவாமி! புத்த பகவானுடைய போதனைகளைக் கேட்டிருக்கிறேன். அப்


அமரர் கல்கி எழுதிய
மோகினித் தீவு
சிறு நாவல்
ஜனவரி 17
பொங்கல் மலரில்
ஆரம்பமாகிறது



''இருநூறு ரூபாய்க்குப் பட்டுப்புடவை வாங்கினால் ஒரு புது காலண்டர் இலவசம் என்றார்கள். இரண்டு காலண்டர் வாங்கினேன்!''

போதனைகளைக் காட்டிலும் அவருடைய தியாகச் செயலிலேதான் அதிகமான போதனை நிறைந்திருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. மன்னிக்க வேணும். நானும் அவருடைய செயலைப் பின்பற்ற விரும்புகிறேன். சற்று முன்னால், என் முந்தையோரின் மூன்றுவிதக் குரல்கள் என் உள்ளத்தில் ஓயாமல் ஒலித்து என்னை வாதனைப்படுத்துவதாகச் சொன்னேன் அல்லவா? அந்தத் தொல்லையிலிருந்து விடுதலை அடைய விரும்புகிறேன். என்னைத் தங்கள் சீடனாக ஏற்றுக்கொள்ளுங்கள்!'' என்றார் இளவரசர்.

''இளவரசே! தங்களை யொத்த சீடனைப் பெறுவதற்கு நான் எவ்வளவோ பாக்கியம் செய்திருக்க வேண்டும். ஆனால் அதற்கு வேண்டிய தகுதியும் எனக்கில்லை; தைரியமும் இல்லை. இலங்கையில் புத்த மகா சங்கம் கூடும்போது தாங்கள் விண்ணப்பித்துக்கொள்ளலாம்'' என்றார் பிக்ஷு.

''தங்கள் தகுதியைப் பற்றி எனக்குச் சந்தேகமில்லை; ஆனால் தைரியத்தைப் பற்றிச் சொன்னீர்களே, அது என்ன?''

''ஆமாம்; தைரியமும் இல்லைதான்! இரண்டு தினங்களாக இந்த நாகைப் பட்டினத்தில் ஒரு வதந்தி பரவிக் கொண்டு வருகிறது. அதை யார் கிளப்பி விட்டார்கள் என்று தெரியவில்லை. தாங்கள் இந்த விஹாரத்தில் இருப்பதாகவும், தங்களைப் புத்த பிக்ஷுவாக்க நாங்கள் முயன்று வருவதாகவும் ஜனங்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்கிறார்களாம். இதனால் அநேகர் கோபம் கொண்டிருக்கிறார்களாம். இந்த விஹாரத்தின்மீது மக்கள் படையெடுத்து வந்து உண்மையை அறிய வேண்டும் என்றும் பேசிக் கொள்கிறார்களாம்....!''

''ஆகா! இது என்ன பைத்தியக்காரத்தனம்? நான் புத்த மதத்தில் சேர்வது பற்றி ஊரில் உள்ளவர்களுக்கு என்ன கவலை? நான் காவித் துணி அணிந்து சந்நியாச ஆசிரமத்தை மேற்கொண்டால் இவர்கள் ஏன் கோபம் கொள்ள வேண்டும்? இத்தனைக்கும் எனக்குக் கல்யாணம்கூட ஆகவில்லையே? மனைவி மக்களை விட்டுப் போகிறேன் என்று கூடக் குற்றம் சுமத்த முடியாதே?'' என்றார் இளவரசர்.

''ஐயா! ஜனங்களுக்குத் தங்கள்மீது கோபம் எதுவும் இல்லை. தங்களை ஏமாற்றிப் புத்த பிக்ஷுவாக்க முயல்வதாக எங்கள் பேரிலேதான் கோபம். வெறும் வதந்தியே இப்படிப்பட்ட கலக்கத்தை உண்டாக்கியிருக்கிறது. உண்மையாகவே நடந்து விட்டால் என்ன ஆகும்? இந்த விஹாரத்தையே ஜனங்கள் தரை மட்டமாக்கி விடுவார்கள். ஏதோ தங்களுடைய தந்தையின் ஆட்சியில் நாங்கள் நிம்மதியாக வாழ்ந்து வருகிறோம். தினந்தோறும்,

'' போதியந் திருநிழற் புனித நிற்பரவுதும்
மேதகு நந்தி புரி மன்னர் சுந்தரச்
சோழர் வண்மையும் வனப்பும்
திண்மையும் உலகிற் சிறந்து வாழ்
கெனவே!''

எனப் பிரார்த்தனை செய்து வருகிறோம். இந்த நல்ல நிலைமையைக் கெடுத்துக் கொள்ள நான் விரும்பவில்லை. அதனால் தான் 'தைரியமில்லை' என்று சொன்னேன்'' என்றார் பிக்ஷு.

அவர் கூறி வாய் மூடுவதற்குள்ளே அந்தப் புத்த விஹாரத்தின் வாசற்புறத்தில் மக்கள் பலரின் குரல்கள் திரண்டு ஒருமித்து எழும் பேரோசை கேட்கத் தொடங்கியது.

பிக்ஷு அதைச் செவி கொடுத்துச் சிறிதுநேரம் கேட்டுவிட்டு, ''இளவரசே! நான் கூறியது உண்மை யென்று நிரூபிக்க மக்களே வந்து விட்டார்கள் போலிருக்கிறது. அதை எப்படிச் சமாளிக்கப் போகிறேனோ, தெரியவில்லை.. புத்த பகவான்தான் வழிகாட்டி யருள வேண்டும்!'' என்றார்.

சூடாமணி விஹாரத்தின் சுற்றுப்புறங்களில் ஆயிரக் கணக்கான மக்களின் கூக்குரல் ஒலி, கணத்துக்குக் கணம் அதிகமாகிக் கொண்டு வந்தது.

(தொடரும்)

சென்னை, மவுண்ட் ரோடு, ஹிக்கின்பாதம் ஸில் குழந்தைகள் புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது. அதைப் பார்த்துவிட்டு வந்த பன்னிரண்டு வயதுச் சிறுமி அலமேலுவைப் பேட்டி கண்டோம். சிறுமி அலமேலு :

குழந்தைகளுக்கான புத்தகக் கண் காட்சியில் யூனிஸெஃப் (UNICEF) வாழ்த்திதழ்களும் விற்கப்படுவது பொருத்தமே. இந்தக் கிறிஸ்துமஸ், புத்தாண்டு வாழ்த்திதழ்களின் விற்பனையில் கிடைக்கும் லாபம் எல்லாம் ஐ.நா. சபையின் குழந்தைகள் நலன் நிதிக்குத்தான் போகிறது. எங்கள் பள்ளியில் ஐ. நா. தினம்



புத்தகக் கண்காட்சி தொடக்க விழாவில் திரு சிவசைலமும் கல்வி அமைச்சரும்

கொண்டாடப்பட்ட போது இதைத் தெரிந்து கொண்டேன்.

ஆறு மணிக்கு ஹிக்கின்பாதம்ஸில் மணி அடித்தது. என் தங்கை பயந்து போனாள். ''கடையை மூடிவிடுவார்களா? நாம் எப்படி வீட்டுக்குப் போவது?'' என்று கவலையுடன் கேட்டாள். எனக்கோ, 'அடடா! அப்படி நிஜமாகவே நடந்து விடக் கூடாதா? நம்மைக் கவனக் குறைவாக இந்தக் கடைக்குள்ளேயே வைத்துப் பூட்டிவிட்டுப் போய்விடக் கூடாதா?' என்று இருந்தது. அத்தனை அழகான, சுவாரசியமான புத்தகங்கள். அவற்றை விட்டுப் பிரியவே மனம் வரவில்லை.



மூன்று வயதுச் சிறுவன் கிருஷ்ணமூர்த்தி சொன்னது :

மாமா பலூன் தந்தா! அங்கே சிங்கம்புத்தகம் இருக்கு. ஆனா கடிக்காது! சமத்துச் சிங்கம். ஜூலே இருக்கே; அது மாதிரி!



குழந்தைகளின் அப்பா ராஜகோபாலன் கூறியது :

குழந்தைகளுக்குத் தமிழ்ப் புத்தகங்களும் ஏராளமாய் இருக்கின்றன. ஆனால் ஏதோ ஒன்றிரண்டு தவிர அவை மேனாட்டு ஆங்கிலப் புத்தகங்களைப் போல் அவ்வளவு கவர்ச்சிகரமாக இல்லாதது பெருங் குறை. உள்ளேயெல்லாம் வண்ணப் படங்கள் அச்சடிக்க முடி


புத்தகக் கண்காட்சியில் புத்தம் புது உள்ளங்கள்

யாது போனாலும் அட்டைப் படங்களாவது கண்ணைக் கவரும்படி இருந்தால்தான் குழந்தைகளுக்கு வாங்க ஆசையாக இருக்கும்.

அன்று கண்காட்சியில் ஏற்பட்ட அநுபவத்தை விட அதை விட்டு வெளியே வந்ததும் எனக்கு நடைபாதையில் ஏற்பட்ட அநுபவம் பிரமாதம்! துணிப்பையைத் தூக்கிக் கொண்டு வந்த ஒருவர், ''ஸ்காட்ச் விஸ்கி இருக்கு வேணுமா ஸார்?'' என்று கேட்டார்! 'அடேயப்பா! மவுண்ட் ரோட்டிலேயே நடைபாதையில் கள்ளக் கடத்தல் விஸ்கி விற்கும் அளவுக்கு மதுவிலக்கு அமுல் படுத்தப்படுகிறதா?' என்று எண்ணிக் கொண்டே அவருக்குப் பெரிய கும்பிடு போட்டு அனுப்பி வைத்தேன்!

அதிருக்கட்டும்; ஜனவரி 25ந் தேதி வரை பத்து சதவீதம் குழந்தைகள் புத்தகங்களில் விலையில் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். ஜப்பானில் அச்சான குழந்தைகளுக்கான சில புத்தகங்கள் மிகத் தரமாய் உள்ளன. இவற்றில் சிலவற்றில் திரி - டி (3-D) படங்களும் உள்ளன. அதாவது நீள அகலத்தை மட்டுமின்றிப் படங்களில் கன பரிமாணத்தைக்கூட உணர முடிகிறது. பர்ஸில் அளவாக 'பட்ஜெட்'படி பணம் போட்டுக் கொண்டு போவது நலம். இல்லாதுபோனால் கண்ணைக் கவரும் வண்ணப் புத்தகங்களைக் கணக்குப் பார்க்காமல் வாங்கிவிட்டுப் பின்னர் தவிப்போம்!

ஏழு வயதுச் சிறுமி லக்ஷ்மியைத் தன் அனுபவத்தை எழுதித் தருமாறு கேட்டோம். அவள் கொடுத்தது :



ராமாயணம்

ராஜாஜி

74. லங்கா தகனம்

பிரம்மாஸ்திரத்தால் கட்டுண்ட ஹனுமான், தான் பெற்ற வரத்தால் அந்த அஸ்திரத்தினின்று விடுதலையடையும் வரையில் ஒன்றும் செய்யாமல் இருக்க வேண்டும் என்று தீர்மானித்து, அரக்கப் பாமரர்கள் திட்டுவதையும் அவமானப்படுத்துவதையும் இம்சிப்பதையும் பொறுமையுடன் தாங்கிக் கொண்டே சென்றான்.

ராவணனுடைய சபையில் அரசன் முன் அவனைக் கொண்டு போய் நிறுத்தினார்கள். தான் பட்ட துன்பமும் அவமானமும் போக ராவணனைக் கண்டதும் சீதைக்கு ராவணன் செய்த தீமையை நினைத்துப் பெருங் கோபம் மேலிட்டது. திவ்விய ஆபரணங்களும் பட்டுப் பீதாம்பரமும் கிரீடமும் பூண்டு கண் கூசும் எழிலுடன் ராவணன் அமர்ந்திருந்தான். தங்கம், ரத்தினம், வைடூரியம், முத்து, பட்டு இவற்றின் பிரகாசம் சபை முழுதும் நிறைந்தது. ராஜ லக்ஷணங்களுடன் விளங்கிய அவன் கறுத்த மேனி தேஜஸ் கொண்ட ஒரு மலை போல் காணப்பட்டது.

''ஆஹா! இந்த மகான் தருமத்திலிருந்து பிறழாமல் சன்மார்க்கத்தில் நின்றிருந்தானாகில் இவன் ஐசுவரியம் எவ்வாறு இருந்திருக்கும்! இந்திரன் முதலியவர்கள் அனைவரும் இவனுக்கு ஈடாக மாட்டார்கள். என்ன வடிவம்! என்ன எழில்! என்ன பலம்! தான் பெற்ற வரங்களை நம்பித் துஷ்ட காரியங்களில் இறங்கிவிட்டு அல்லவோ இவன் தன் பாக்கியத்தையும் மேன்மையையும் இழந்தான்!'' இவ்வாறு கோபமும் வியப்பும் இரக்கமும் கொண்டு ஹனுமான் யோசித்துக் கொண்டிருக்கையில் ராவணன் மந்திரிகளைப் பார்த்து உத்தரவிட்டான்:

''இந்தத் துஷ்டன் யார்? எங்கிருந்து வந்தான்? யார் இவனை அனுப்பியது? இந்த லங்கைக்குள் ஏன் பிரவேசித்தான்? உண்மையைச் சொல்லும்படி கேளுங்கள்!'' என்றான்.

மன்னன் உத்தரவிட்டபடி மந்திரி பிரஹஸ்தன் ஹனுமானைப் பார்த்து,

''குரங்கே! பயப்பட வேண்டாம்! உண்மையைச் சொன்னால் தப்பிப் போவாய். இந்திரன் உன்னை அனுப்பினானா? அல்லது நீ குபேரனுடைய ஆளா? அல்லது வேறு யார் உன்னை ஏவியது? உண்மையைச் சொல்லிவிட்டுத் தப்பித்துக் கொள். நீ ஏன் இந்த வேஷம் போட்டுக் கொண்டு இங்கு வந்திருக்கிறாய்? மறைக்காமல் சொல்!'' என்றான்.

இவ்வாறு பிரஹஸ்தன் நல்ல வார்த்தைகளாகச் சொல்லிக் கேட்டான். ஹனுமான் மறுமொழியாக ராவணனைப் பார்த்துச் சொன்னான்:

''இந்திரனாவது குபேரனாவது என்னை அனுப்பவில்லை. நான் வானரன். ராக்ஷச ராஜனைப் பார்க்க விரும்பி வந்தேன். அதற்காகவே வனத்தை அழித்தேன். என்னைக் கொல்லப் பிறர் தாக்கியபடியால் அவர்களை நான் வதம் செய்தேன். வானர ராஜன் சுக்ரீவனுடைய தூதனாக நான் இங்கே வந்திருக்கிறேன். அரக்கர் மன்னனே! என் அரசன் தங்களைச் சகோதரனாகப் பாவித்து க்ஷேமம் விசாரிக்கிறார். அயோத்தி மன்னன் தசரதனுடைய புகழ் பெற்ற குமாரன் ராமசந்திரனும் வானர ராஜனும் நட்பு செய்து கொண்டிருக்கிறார்கள். சுக்ரீவனுடைய பகைவனான வாலி ராமசந்திரனால் வதம் செய்யப்பட்டான். வானர ராஜ்யப் பதவியைச் சுக்ரீவன் அடைந்திருக்கிறான். அயோத்தியாதிபதியாக வேண்டிய ராமசந்திரன் தந்தை வாக்கை மேற்கொண்டு தண்டகாரண்யத்தில் வனவாசம் செய்து கொண்டிருந்த காலத்தில் அங்கே தனியாக இருந்த அவருடைய தேவியைக் காணாமல் ராமலக்ஷ்மணர்கள் அவளைத் தேடி வந்



தார்கள். சுக்ரீவ ராஜாவின் நட்பை அடைந்து அவன் சகாயத்தைக் கோரினார்கள். வானர ராஜன் தன் ஆட்களைப் பூவுலகம் முழுவதும் தேடிப் பார்க்க அனுப்பினான். லங்கையில் தேட நான் வந்தேன். புண்ணியவதி ஜானகியை இவ்விடம் நான் கண்டேன். ராக்ஷேசுவரனாகிய தங்களுக்குச் சகோதர அரசனுடைய தூதனாகிய நான் வணக்கமாகச் சொல்லுகிறேன். சக்கரவர்த்தித் திருமகனுக்காகவும் சொல்லுகிறேன்.



''சீதா தேவியை அபகரித்துத் தூக்கி வந்தது தருமத்துக்கு விரோதம் என்பது தங்களுக்குத் தெரியும். உம்முடைய குல நாசத்துக்கு இது காரணமாகும். ரகுவீரனையும் வானரர்களையும் பகை செய்து கொண்டு அழிந்து போக வேண்டாம். சீதையை மரியாதையாக ரகுவீரனிடம் ஒப்படைத்துச் சரணடைவீராக. சீதையை, உம்முடைய அழிவுக்காக வந்த காலனாக அறிவீராக. விஷத்தை உணவாக எண்ண வேண்டாம். புத்திமான்கள் தருமத்துக்கு விரோதமான காரியங்களில் அகப்பட்டுக் கொண்டு பெரிய அபாயத்துக்கு ஆளாக மாட்டார்கள்; பிறர் மனைவியை விரும்பும் பாபம் ஒருவனை வேரோடு அழித்துவிடும் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். பாப காரியத்தால் தாங்கள் முன்செய்த தவமெல்லாம் அழிந்து பயனற்றுப் போகும். பிழை செய்து பெரும் பாக்கியத்தைக் கெடுத்துக் கொண்டீர். இப்போது உமக்குள்ள வழி ராமனிடம் சரண் புகுவது ஒன்றே. ராமனைப் பகைத்துக் கொண்டு உம்முடைய நாசத்தைத் தேடிக் கொள்ள வேண்டாம். நீர் பெற்ற வரங்கள் ரகுவீரனுக்கு எதிரில் ஒன்றும் பயன்படாது. யோசித்துப் பார்த்து உண்மை ஆபத்தை அறிந்து கொள்வீராக. வானர ராஜனுடைய தூதனாகிய நான் சொன்னதை மதித்து நல்வழியில் சென்று பிழைப்பீராக. நான் சொன்ன வார்த்தைகள் உம்முடைய சகோதரன் சுக்ரீவனுடைய தூதனால், உம்முடைய தன்மைக்காகச் சொன்ன உண்மை வார்த்தைகள்.''

தைரியமே உருவெடுத்தவனான ஹனுமான் அரக்கனுக்கு விஷம் போல் தோன்றும் இந்த உபதேசத்தை மிகத்

தெளிவான மொழிகளில் செய்தான். அதைக் கேட்ட அரக்கனுக்குக் கோபம் பொங்கிக் கண்கள் சிவந்தன.

ரோஷாவேசத்தில், '' இவனைக் கொன்றுவிட்டு மறு வேலை பார்ப்பீராக'' என்றான்.

தூதனைக் கொல்வது தவறாகும் என்று சபையிலிருந்த விபீஷணன் சொன்னான். ''தூதர்களைக் கொல்வது கூடாது என்று ராஜநீதி அறிந்தவர்கள் அனைவரும் சொல்லி வருவதால் இதைச் செய்ய வேண்டாம். அங்கஹீனம் செய்யலாம், கசையடி கொடுக்கலாம், சூடு போட்டு விடலாம், மரண தண்டனை மட்டும் வேண்டாம்'' என்று விபீஷணன் யோசனை சொன்னான்.

''பாப காரியம் செய்தவனைக் கொல்வதில் என்ன தவறு?'' என்று கேட்டான் ராவணன்.

''அப்படியல்ல, இவன் என்ன குற்றம் செய்தவனாக இருந்தாலும் அது பிறருடைய ஏவலினால் செய்யப்பட்டது. அவர்களை விட்டுவிட்டு வெறும் கருவியாக வந்த ஒரு சாரனையோ தூதனையோ பிடித்துக் கொல்வதில் ஒரு பயனுமில்லை. இவனை யார் அனுப்பினார்களோ அவர்களைத் தண்டிப்பதற்கு வழி தேடுவீராக. அவர்களைத் தண்டிக்க வேண்டுமானால் அவர்கள் இவ்விடம் வருவார்கள். அப்போது அவர்களைச் சரியான முறையில் தண்டிக்கலாம். இவனைக் கொன்று விட்டால் நம் எதிரிகள் இங்கே வருவதற்கு இடமே இராது. இவன் உயிருடன் திரும்பிப் போய்ச் சொன்னால் அவர்கள் வந்து நம்மைத் தாக்குவார்கள். அப்போது அவர்கள் சரியான தண்டனையை நம்முடைய பலத்தால் அடைவார்கள். அற்பமான ஒரு சாரனைக் கொல்வதில் என்ன புகழ்? என்ன பிரயோசனம்? ராஜ தருமத்திலிருந்து தவறினது ஒன்றே நிற்கும்'' என்றான் விபீஷணன் வினயமாக.

இந்த யோசனையை ராவணன் ஒப்புக் கொண்டான். ''சரி, வானரத்துக்கு முக்கியமான லட்சணம் அதன் வால். இவன் வாலைக் கொளுத்தி அடித்துத் துரத்தி விடுங்கள்'' என்றான் ராவணேசுவரன்.

இப்படி அரக்கர் மன்னன் சொன்னதும் வேலைக்காரர்கள் ஹனுமானை வெளியே கொண்டு போனார்கள். வாலுக்குப் பழந் துணிகளைக் கொண்டு நன்றாகச் சுற்றினார்கள். வால் வளர்ந்தது. வளர வளர, கிடைத்த பழந் துணிகளைக் கொண்டு சுற்றி, எண்ணெய் விட்டு, நெருப்பு வைத்து விட்டார்கள். தீ எரிய ஆரம்பித்தது. கயிற்றால் கட்டப்பட்ட ஹனுமானை லங்கையில் தெருக்கள் தோறும் இழுத்துச் சென்றார்கள்.

''இதோ நம் நகரத்துக்கு வந்த திருடன்!'' என்று பெண்கள் குழந்தைகள் எல்லாரும் பார்த்துப் பரிகசித்து சந்தோஷப்படும்படியாக ராக்ஷசர்கள் ஹனுமானை ஊரில் எல்லாத் தெருக்கள் வழியாகவும் பெரும் வாத்திய கோஷங்களுடன் கொண்டு போய்ப் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள்.

அசோக வனத்தில் சீதைக்கு ராக்ஷசிகள் சொன்னார்கள்: ''உன்னோடு பேசிற்றே, அந்தத் திருட்டுக் குரங்கு, அதற்கு என்னவாயிற்று தெரியுமா? வாலுக்கு எண்ணெய்த் துணி சுற்றி நெருப்பு வைத்து விட்டார்கள். வால் எரிந்துகொண்டிருக்கிறது. அவனை இழுத்துக் கொண்டு ஊர்வலம் செய்கிறார்கள்!'' இவ்வாறு சொல்லிச் சீதையைப் பரிகசித்தார்கள்.

சீதை அக்கினி மூட்டி, ''ஹே! அக்கினியே, நான் செய்த புண்ணியம் ஏதேனும் இருந்தால், நான் உண்மைப் பதிவிரதையானால் நீ ஹனுமானுக்குக் குளிர்ந்து போவாயாக'' என்று பிரார்த்தித்தாள்.

ஹனுமானும் எல்லா அவமானத்தையும் அடிகளையும் அக்கிரமங்களையும் பொறுத்துக் கொண்டு தெருத் தெருவாக எல்லா இடங்களையும் பார்த்துக் கொண்டு சென்றான். நகரத்தில் எல்லாத் தெருக்கள் சந்துகளிலிருக்கும் பெண்களும் குழந்தைகளும் வேடிக்கை பார்க்கட்டும் என்று மாருதியை எல்லா இடங்களுக்கும் கொண்டு போனார்கள். அவனும் பேசாமல் நகரத்தின் கோட்டை முதலிய ரகசியங்கள் முற்றிலும் நன்றாகப் பார்த்துக் கொண்டே போனான். ''என் எஜமானனுக்கு இது உதவும்'' என்று பொறுமையாகப் பார்த்துக் கொண்டே சென்றான்.

''இதுவென்ன ஆச்சரியம்! நெருப்பு வைத்திருக்கும் எண்ணெய்த் துணி மட்டும் பற்றி எரிகிறது. என் வாலுக்கோ அந்தத் தீ குளிர்ந்தே இருக்கிறது. ராம காரியத்தில் பஞ்ச பூதங்கள் உதவுகின்றன என்பதற்கு இது அடையாளம்! கடலில் மலை கிளம்பி எனக்கு உபசாரம் செய்யவில்லையா? அப்படியே அக்கினி தேவனும் இப்போது என்னை வருத்தாமல் குளிர்ந்திருக்கிறான் போலிருக்கிறது. அல்லது என் தந்தை வாயுதேவனுடைய நட்பை மதித்து அக்கினி என்னை எரிக்காமல் தணிந்திருக்கிறான் போலிருக்கிறது. ஆயினும் இந்தச் சமயத்தை விட்டுவிடலாகாது. இந்தத் துஷ்டர்களுக்குச் சரியான பயம் உண்டாக்கிப் போவதற்குத் தகுந்த சந்தர்ப்பம் தானாக வந்திருக்கிறது'' என்று யோசிக்கலானான்.

(தொடரும்)

ஆகாயக் கற்கள்

தினந்தோறும் சுமார் ஏழரைக் கோடி துகள்கள் விண்வெளியிலிருந்து பூமியினைச் சுற்றியுள்ள வாயுமண்டலத்துக்குள் நுழைகின்றன. இவற்றில் பெரும்பாலனவை ஒரு நெல் மணி அளவினதாகவே இருக்கும்.

அவை மணிக்கு முப்பதாயிரம் மைல் முதல் லட்சத்து ஐம்பதாயிரம் மைல் வரை வேகம் கொண்டவை. பூமி மட்டத்திலிருந்து அறுபது மைல் உயரத்தில் வாயு மண்டலம் அடர்த்தியாக இன்றி மிகவும் பரவலாகத் தான் இருக்கும். ஆயினும் அந்த மெல்லிய காற்று மண்டலத்துடன் அத்துகள்கள் வேகத்துடன் உராய்வது காரணமாகவே அவை செந்தணலாக அன்றி அதைவிட அதிக உஷ்ணத்தைக் குறிக்கும் வெண் தணலாக மாறி ஒரு விநாடி நேரத்தில் எரிந்து போய்விடுகின்றன. இந்தச் சிறிய எரியும் துகள்களே எரிநட்சத்திரங்களாகும். இவற்றில் வெகுசிலவே-நாளைக்கு ஒன்றோ அல்லது இரண்டோ — பூமியை வந்து அடையும் அளவுக்குப் பெரிதாயிருக்கின்றன. பிரகாசமாயும் புகைந்து கொண்டும் சத்தத்துடனும் விழுகின்றன.

எரிநட்சத்திரம் விழுந்ததும் தொட்டால் சுட்டு விடும்தான். ஆனாலும் அது சூடேறும் நிகழ்ச்சி வெகு துரிதமாக நடந்து முடிந்து விடுவதால் அதன் மையத்தில், விண்வெளியில் உள்ளது போன்ற குளிர்ச்சி இன்னமும் இருக்கத்தான் செய்யும். கொஞ்ச நேரம் விட்டு வைத்திருந்தால் போதும், வெளிப் புறத்திலும் சில்லிட்டுப் போய்க் காற்றிலுள்ள நீராவி, வெண்பனித் துகள்களாக அதன் மேல் படியும்.

எரிநட்சத்திரங்கள் கல்லினாலோ இரும்பினாலோ ஆனவை. கல்லாக உள்ள எரிநட்சத்திரங்களே மிகுதி. ஆனால் அவற்றைப் பூமியில் உள்ள கற்களிலிருந்து இனம் பிரித்துக் காண்பது எளிதாக நடப்பதில்லையாகையால், இரும்பு எரிநட்சத்திரங்களே அதிகமாகக் கண்டுபிடிக்கப்படுகின்றன.

ஆதியில் எரிநட்சத்திரங்களுக்குத் தெய்வீக சக்தி உண்டு என்று கருதப்பட்டதில் வியப்பில்லை. எபிஸியன்ஸ் எனப்படுவோர் டயானுவுக்கு எடுக்கப்பட்ட கோயிலில் ஓர் எரிநட்சத்திரத்தை வைத்து வணங்கினார்கள் என்று விவிலிய நூல் கூறுகிறது. ரோமானியர்கள் ஓர் இரும்பு எரிநட்சத்திரத்தைச் சதா சர்வகாலமும் பன்னிரண்டு மத குருக்கள் காக்க வேண்டும் என்ற ஏற்பாட்டைச் செய்திருந்தனர்.

1492ல் அல்ஸேஸில் ஓர் எரி நட்சத்திரம் விழுந்தது. துருக்கியர் மீது படையெடுக்கக் கிறிஸ்துவர்களுக்கு இறைவன் சம்மதமளித்து விட்டதாக இந்நிகழ்ச்சிக்கு மிகவும் சௌகரியமான ஒரு வியாக்கியானம் கூறப்பட்டது. அன்று முதல் அக்கிராமத்தில் அந்த எரி நட்சத்திரம் மாதா கோயிலில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

ஆதிநாளில் இரும்பு ஒரு மாய மந்திரப் பொருள் என்றும் அது ஆகாயத்திலிருந்து தான் விழும் என்றும் கருதினார்கள். இரும்புக்குப் பல மொழிகளில் உள்ள பெயர்களை ஆராய்ந்தால் இந்த அர்த்தமே தொனிக்கும். இரும்புக் கனியிலிருந்து இரும்பை உருக்கி எடுக்கும் முறை கண்டுபிடிக்கப் படுவதற்கு நீண்ட நாட்கள் முன்பிருந்தே ஆதிவாசிகள் ஆகாயத்திலிருந்து விழுந்த எரிநட்சத்திர இரும்பைப் பயன்படுத்தி ஆயுதங்கள் தயாரித்திருக்கிறார்கள்.

பூமியை அடையும்போது எரிநட்சத்திரம் என்ன அளவினதாய் வேணுமானாலும் இருக்கலாம். மனிதன் கண்டெடுத்துள்ள மிகப் பெரிய எரி நட்சத்திரம் அறுபது டன் எடை உள்ளது.

வியப்பான விஷயம் என்னவெனில், எரிநட்சத்திரம் விழுந்ததால் பெரிய அளவில் உயிர்ச் சேதமோ பொருள் சேதமோ ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் உலகின் பல பாகங்களில் சுமார் இருபது பெரிய குழிகள் உள்ளன. இந்த மாபெரும் குழிகள் ஒவ்வொன்றும் சுமார் பத்து லட்சம் டன் எடையுள்ள ஓர் எரிநட்சத்திரம் விழுந்ததால் ஏற்பட்டது என்று கருதுகிறார்கள். அமெரிக்காவில் அரிஸோனா மாநிலத்தில் உள்ள இத்தகைய ஒரு குழி சுமார் ஒரு மைல் குறுக்களவு உள்ளது. சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்குமுன் ஏற்பட்டது.

1908ல் சைபீரியாவில் விழுந்த எரிநட்சத்திரம் தன்னைச் சுற்றி இருபது மைல் விட்ட அளவுள்ள காட்டை எரித்தது. அதற்கும் மேல் பத்து மைல் தூரத்துக்கு மரங்களைச் சாய்த்தது! ஆனால் அதிசயம் என்னவெனில், இந்த நிகழ்ச்சிகளில் ஒன்றில்கூட விழுந்த எரி நட்சத்திரம் காணப்படவேயில்லை! மோதிய வேகமே அது எரிந்து ஆவியாகப் போதுமானதாக இருந்திருக்கிறது !

எரிநட்சத்திரங்கள்எங்கிருந்துவருகின்றன? பல உடைந்துபோன வால் நட்சத்திரங்களின் துகள்கள். ஆனால் பெரும்பாலான எரி நட்சத்திரங்கள், பூமியைப் போலவே சூரியனைச் சுற்றிவரும் வெடித்துச் சிதறிப்போன ஒரு கிரகத்தின் பகுதிகளே. (மேலும் விவரங்களுக்கு: கல்கி, 1-11-70 'விளங்கும் விஞ்ஞானம்')

— மைக்கேல் ஆர்னால்டு



படம்: அமெரிக்காவில் கண்டெடுக்கப்பட்ட எரி நட்சத்திரங்களுள் மிகப் பெரியது இதுதான். 1902ல் கண்டுபிடிக்கப்பட்ட இந்த இரும்பு எரிநட்சத்திரத்தின் எடை பன்னிரண்டு டன்.


சிதம்பர ரகசியம்
கதை :
சித்திரம் :
23
சிதம்பரத்தின் திடீர் விஜயம் பொம்மையா அன்ட் கம்பெனியைச் சங்கடத்தில் ஆழ்த்துகிறது.
வணக்கம் ஜமீன்தார்வாள்;
பொம்மையா! இவர் இன்ஸ்பெக்டர்;
சொல்லிட்டேன்!
இன்ஸ்பெக்டர் ஸார்!
என்ன அநியாயம்!
இது அசல் போலீஸ் தான், சந்தேகமில்லே! வசமா மாட்டிக்கிட்டோம்!
இது வாழ்க்கை, தம்பி சினிமா இல்லே!



சிங்காரசாமி, இன்ஸ்பெக்டரையும் அவரோடு கூடவும் விவரம் சொல்லி அனுப்புவது போலவே போலீஸ் 'வான்'னுக்கு ஏற்பாடு செய்திருக்க அது சில நிமிடங்களில் வந்து சேர்கிறது.
சென்று வருகிறோம், ரங்கதுரை!
போய் வருகிறோம்! நடராஜனைக் கண்டால் சிங்காரத்தைக் காணச்சொல்லுங்கள்!
உங்க வாயாலே 'போய் வருகிறோம்'னு சொல்லாதீங்க! போனதே போதும்! தயவு செய்து திரும்பி வர வேண்டாம்!
அப்படியே வந்தாலும் இன்னும் கொஞ்சம் சாமர்த்தியமா நடந்துக்கிடுங்க!
சற்று நேரத்துக்குப் பிறகு வரவேற்பு அறையில்...
ரங்கதுரை! உன்னை இன்றைக்குத் தான் முதல் தடவையா பார்க்கிறேன். என் தம்பி தியாகு மாதிரியே இருக்கே. தங்கையையும் அழைச்சுண்டு வந்திருக்கியாமே? எங்கே அவள்?
ஹி ஹி! ஹி! இவளே போயிருக்கா, வந்துடுவா.
வந்தாச்சு; அண்ணா இதோ வரேன்!
பெரியப்பா! எப்போ உங்களைப் பார்ப்போம்னு ஏங்கிப் போயிட்டோம். நமஸ்காரம் பண்ணறேன்!
ரங்கதுரை! மோகனா உன்னை விட ரொம்ப வயசு சின்னவளா இருப்பாளா?
சரியா ஐந்து வயசு வித்தியாசம் பெரியப்பா! ரொம்ப சூடிகை!
அப்படின்னா நீ, தியாகுவோட பிள்ளையே இல்லே! அவனுக்கு ஒரே பிள்ளைதான். அந்தக் குழந்தை பிறக்கிறதுக்கு இரண்டு மாசம் முன்னாலேயே தியாகு செத்துப் போயிட்டான்! பிரசவத்தின் போதே தாயாரும் பிராணனை விட்டுட்டா. ஆக உனக்குத் தங்கை எப்படி இருக்க முடியும்?
நீங்க ரெண்டு பேரும் போலி; பங்களாவைப் பண்ணுங்க காலி!
பெரியப்பா! மன்னிச்சுருங்க. நான் அசல்! இவள் மட்டும் தான் போலி! என் குடுமி இவளிடம் சிக்கியிருக்கு! இவள் ஆட்டி வைக்கிற மாதிரி ஆடறேன்!
உடன் பிறந்த தங்கை; உள்ளத்திலே காதலி! இது ஒன்னும் புதுசு இல்லீயே? எனக்கு ஆரம்பத்திலேயே தெரியும். அதை மறைச்சு நாடகமாடிக் கிட்டிருந்தேன், எஜமான்!
சரி, என் மருமகளும் வந்திருக்காள்னு சொன்னியே, கேப்டு!

தியாகராயநகரில் உள்ள வேளாங்கண்ணிப் பள்ளியின் நிர்வாகி திரு கே. பி. ஜி. பணிக்கருக்கு நெடு நாட்களாகவே பிராணி வளர்ப்பில் தீவிர ஈடுபாடு உண்டு. ஆறு ஜோடி முயல்கள், ஒரு மயில், ஐந்து மான்கள், இரு நாய்கள் — இவ்வளவு பிராணிகளையும் வளர்த்துவரும் இவர் கூறுகின்றார்: ''எனக்குக் குழந்தைகள் இல்லை. என் பள்ளியில் பயிலும் குழந்தைகள் (ஆயிரத்துக்கு மேல்) எல்லாருமே என் சொந்தக் குழந்தைகள்மாதிரிதான். இந்தப் பள்ளியை நிறுவியதற்கு முன்னரே எனக்குப் பிராணி வளர்ப்பில் ஈடுபாடு உண்டு. என்னிடமுள்ள முயல்கள், நாய்கள், மான்கள் ஆகியவற்றிடம் கூட என் குழந்தைகள் போல் பாவித்து அன்பு செலுத்துகிறேன். ஏன், நானே ஒரு குழந்தைதான்!''— நீண்ட பெரிய மீசையுடன் ஆஜானுபாகுவாகத் தோற்றம் அளிக்கும் பணிக்கர் குழந்தை உள்ளம் படைத்தவர்.

கடப்பையிலிருந்து ஒரு ஜோடி முயல்கள் வாங்கி வந்தாராம் சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு. பெண் முயல் இதுவரை 39 குட்டிகள் ஈன்றதாம். அதாவது மூன்றேகால் டஜன்! 'இந்த முயலுக்கு மூணே கால்' என்கிறார் பணிக்கர். அவ்வப்பொழுது குட்டிகளைப் பல்வேறு பள்ளிகளுக்கு அன்பளிப்பாக வழங்கி விடுகிறார்.

முயலுக்கு உணவு: புல், சமைத்த சாதம், ஊற வைத்த கடலை, முட்டைக் கோஸ். கல்யாண முருங்கை இலை முயலுக்குப் பாதம் ஹல்வா மாதிரி! மிகவும் விரும்பிப் புசிக்குமாம். உறுதியான பற்கள் உண்டு. ஒரு தேங்காய் மூடியைக் கொடுத்தால் துளிக்கூட மிச்சம் வைக்காமல் பற்களால் சுரண்டித் தின்று விடுமாம்.

முயலுக்கு மூன்றே கால்!



''இவை குளிப்பதுண்டா? அல்லது நீங்கள் குளிப்பாட்டுகிறீர்களா?''

''நாம் முயல்களைக் குளிப்பாட்ட வேண்டிய அவசியமே இல்லை. அன்றாடம் அது தன் நாவினால் உடல் முழுவதையும் நக்கிச் சுத்தம் செய்து கொண்டு விடுகிறது. வெகு சுத்தமான பிராணி. இவ்வளவு அடர்த்தியாக ரோமம் இருந்த போதிலும் இவற்றின் சருமத்தில் பேன்களோ உண்ணியோ தங்க அது இடமளிப்பதே யில்லை. ஆடு, மாடு, நாய்கள் இவற்றின் உடலில் உண்ணி, பேன் முதலியன அவ்வப்பொழுது தலைகாட்டும். ஆனால் முயலின் உடலில் அவை ஒருநாளும் தங்காது.''

''அப்படியானால் முயலுக்கு நோய் ஏதும் வருவதேயில்லையா?''

''வரும். காதுக்குக் கீழ்ப்புறம் வீக்கம் தென்படுவதுண்டு. அவ்வீக்கம் கண்டால் முயல் பிழைப்பதில்லை. முன்பு ஓரிரு தடவை அம்மாதிரி வீக்கம் கண்டபோது கால்நடை மருத்துவரை அழைத்து வந்து காண்பித்தேன். அவர் ஊசிகள் போட்டார். பலனில்லை. முயல் இறந்து விட்டது. இந்த வீக்கம் காண்பதுதான் முயலுக்கு ஏற்படும் முடிவு என்று எண்ணுகிறேன். அதைக் குணப்படுத்தவே முடிவதில்லை'' என்கிறார் திரு பணிக்கர்.

இல்லங்களில் வளர் செல்லங்கள்

''உங்கள் முயலுக்கு உங்களை அடையாளம் தெரிகிறதா?''

''நன்றாகத் தெரியும். என்றாவது ஒருநாள் அவற்றுக்கு உணவு அளிக்க மறந்துவிட்டால் அவை சத்திய வண்ணம் என் காலருகே வந்து குழுமிக்கொள்ளும். யஜமானரை அவற்றுக்கு நன்றாக இனம் விளங்கிக் கொள்ள முடியும். அவற்றுக்கு நல்ல மோப்ப சக்தியும் உண்டு. முயல்கள் சுத்த சைவம். ஒரு நிகழ்ச்சியைக் கூறுகிறேன். ஒரு நாள் முயல்கள் புல் தின்னவே இல்லை. நல்ல புல் தான். வழக்கமாகக் கொண்டு வரும் அதே ஆள்தான் அன்றும் புல் கொண்டு வந்தான். அவனிடம் துருவித் துருவி விசாரித்ததில், அந்தப் புல் கட்டின்மீது தனக்கென வாங்கிய மீன்களை அவன் வைத்திருந்தானாம். புல்லை இங்கு கொண்டு வந்து போட்டு விட்டு மீனை எடுத்துச் சென்று விட்டான். அந்த மீன் வாடையே முயலுக்குப் பிடிக்கவில்லை. எவ்வளவோ முயன்றும் முயல்கள் அந்தப் புல்லைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. அப்புறம் வேறு புல் கொண்டு வந்து போட்டேன்'' என்கிறார் திரு பணிக்கர்.



—பேட்டி: 'பாணன்'

அத்தியாயம் 25

பாஸ்கரன் ஒவ்வொரு அடியையும் மிக ஜாக்கிரதையாகவே எடுத்து வைத்தான். லட்சியம் ஒன்றே குறியாக இருந்தான். எதற்கும் அவன் அவசரப்பட்டுப் பயன் இல்லை. ஆயினும் அவன் அதைரியமோ, அவநம்பிக்கையோ படவில்லை. தன்னம்பிக்கையும் பொறுமையுமே அவனுடைய மூலதனங்கள். திறமை இருந்தும் வழிமுறைகள் அடிப்படையிலிருந்து தெரிந்திருந்தும் துரிதமான முன்னேற்றம் சாத்தியமானதாக இல்லை.

இப்படி அவன் ஒருவன்தானா? அவனைப் போல் எத்தனையோ பேர்! முயற்சியும் உழைப்பும் இருந்தால் அமெரிக்கா போன்ற நாடுகளில் முன்னேற வழியுண்டு. ஜப்பான், ஜெர்மனியெல்லாம் அப்படித்தான் முன்னேறியும் இருக்கின்றன. இங்கே ஒவ்வொரு கட்டத்திலும் அரசின் தயவும் அதற்குச் சிபாரிசும் செல்வாக்கும் அல்லவா கூடவே வேண்டியிருக்கின்றன? நேற்று ஒரு கொள்கை, இன்று ஒரு கொள்கை, நாளை, வேறு என்ன கொள்கையோ என்ற நிச்சயமற்ற நிலையில் ஒவ்வோர் அடியையும் எச்சரிக்கையாகத்தானே எடுத்து வைக்க வேண்டியிருக்கிறது?

வெறும் ஒர்க்-ஷாப்பாகத் தொடங்கிய அவனுடைய தொழிற்சாலையில் இப்பொழுது சில உறுப்புக்களைச் செய்யத் தொடங்கினார்கள். இங்கே கிடைக்காதவற்றையும் செய்கிற முயற்சி ஒரு பக்கத்தில் நடந்து வந்தது. படித்து விட்டு வேலை தேடி வந்த இளைஞர்கள் சிலரையும் அவன் சேர்த்துக் கொண்டான். மிகக் குறுகிய காலத்திலேயே கணிசமான முன்னேற்றம் தெரிந்தது. அதே சமயத்தில் அவன் மகேசன் அண்ட் மகேசுவரன் கம்பெனியிலும் தொழில் நுட்பப் பொறியியல் ஆலோசனைகளைச் சொல்லி வந்தான். சொந்த முறையில் தாட்சிண்யத்துக்காக வைத்தியநாதன் அழைத்தால் பியர்ஸன் இந்தியாவுக்கும் போய் ஆலோசனை கூறிவிட்டு வருவதுண்டு. ஆயிரம், இரண்டா



யிரம் என்று கிடைக்கிற வருமானத்தை யெல்லாம் அப்படியே அவன் தொழிற் சாலையில் முதலீடு செய்து வந்தான். யந்தி ரங்களில் சிலவற்றை ரொக்கத்துக்கும் கடனிலும் வாங்கிப் போட்டான். குப் பையிலிருந்தும் கூளத்திலிருந்தும் அவன் விந்தைகளை விளையாட்டாகவே புரிந்து கொண்டிருந்தான். சொன்னல் நம்பக் கூட முடியாதபடி இருந்தது. வெளி நாட்டிலிருந்து வந்தவை போல் மெருகும் தோற்றமும் கொண்டிருக்கும்படி அமைப் பதில் கவனம் செலுத்தினன். அவன் கூடவே வேலை செய்பவர்களுக்கு அவன்



எங்கோ உச்சாணிக் கொம்பில் இருப்பது போலத் தோன்றினன்.

ஆனல் அவன் உள்ளத்தில் சரா சரி மனிதனுடைய உணர்ச்சிகள் அத்தனையும் நிறைந்துதான் இருந் தன. ஏப்ரல் மாதம் முடிந்ததுமே கோடையின் வெம்மையைச் சாக் காக வைத்துக் கொண்டு பத்துப் பதினைந்து நாட்கள் ஒய்வு எடுத் துக் கொள்பவன் போல அண்ணு வைப் பார்க்க வீரசோழபுரத்துக்கு வந்து சேர்ந்தான்.

அரசங்குளம் அநேகமாக வற்றிக் கிடந்தது. வேலி ஓரத்துச் செடிகள் எல்லாம் உயர்ந்திருந் தனவே தவிர, தழைத்திருக்க வில்லை. ஆனல் இதில் எல்லாம் அவன் கண்கள் பதியவில்லை. அவன் கண்கள் பார்க்க விரும்பிய தெல் லாம் யாமினியின் எழில் வடிவம் ஒன்றைத்தான். அவள் கல்லூரி யில் இறுதிப் பரீட்சையை எழுதி விட்டு, ஊருக்கு வந்து விட்டாள்

காணிக்கை

ஆர்வி

என்பது அவனுக்கு முன்கூட்டியே தெரியும். அவன் வீரசோழபுரத் துக்கு வரப்போகிற விஷயம் அவ ளுக்கும் தெரிந்திருக்கும். அண்ணு வுக்கு அவன் முன்பே எழுதியிருந் தான். மன்னி அதை யாமினிக்குச் சொல்லாமலா இருந்திருப்பாள்? அவளிடம் போய் இதைச் சொல்ல வேண்டும் என்று அவசியம் இல்லை. யாமினி வந்து நாசூக்காக விசாரித் திருந்தால், மன்னி நிச்சயம் சொல்லி யிருப்பாள். யாமினி இந்த மன்னியைப் பார்க்க வராமலும், விசாரித்து விஷயத் தைத் தெரிந்து கொள்ளாமலுமா இருந்திருப்பாள்? சந்தேகமே வேண்டியதில்லை. நிச்சயம் வந் திருப்பாள். மன்னியின் மூலமாகத் தெரிந்தும் இருக்கும். 'எப்போது பரீட்சை முடியப் போகிறது?' என்றுதானே இவன் சென்னையி லும் அவள் திருச்சியிலுமாக நாட் களை எண்ணிக் கொண்டிருந் திருக்கிறார்கள்!

வீரசோழபுரத்துக்குப் போய் விட்டால் இந்த மாதிரி அடிக்கடி கடிதம் எழுதவோ பதில் எதிர்பார்க்கவோ முடியாது என்று யாமினி கடைசிக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தாள். 'சின்ன ஊர்; அதையும் தவிர அத்தை, யார், என்ன விஷயம் என்று நுணுக்கமாக விசாரிப்பாள். மழுப்ப முடியாது; சந்தேகப்படுவாள். முகத்தைப் பார்த்தே எதையும் யூகித்து விடக் கூடியவள். அதனால் அநாவசியப் பேச்சுக்கும் வாக்குவாதத்துக்கும் இடம் ஏற்படும். முனுக்கென்றால், சின்ன ஊரா, விஷயம் புடைபுடைத்துப் போகும். ஏன் வீண் வம்பு! நேரில்தான் பார்த்துக்கொள்ளப் போகிறோமே? — என்று எழுதி, கடைசி வரியைக் கோடிட்டும் காட்டியிருந்தாள்.

கற்பனை யிருந்தால் கோடிட்டுக் காட்டிய வரிக்கு அர்த்தத்தைப் பெருக்கிக்கொள்ளட்டுமே என்று நினைக்கிறாள் போலிருக்கிறது. அது எப்படி இருந்தாலும் சுவாரசியமாக இருந்தது என்னவோ உண்மை.

பாஸ்கரன் வண்டியை எடுத்துக் கொண்டுதான் வந்திருந்தான். அவன் வந்ததிலிருந்து வீட்டில் ஒரே கலகலப்புத்தான். மன்னியும் குழந்தைகளும் அவனைச் சூழ்ந்து உட்கார்ந்து கொண்டு வேடிக்கையும் விளையாட்டுமாக இருந்தார்கள். அண்ணா பட்டாபிக்கு இன்னும் பள்ளியில் லீவு விடவில்லை. ஜன்னலை ஒட்டிய வெளித் தாழ்வாரத்தில் கட்டிலையும் நாற்காலியையும் போட்டுக் கொண்டு, அடிக்கு ஒரு தடவை வெளி வாசல் படலையும் வேலியை ஒட்டிச் சென்ற மணற்பாங்கான சாலையையும் ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்தான் பாஸ்கரன்.

அவளைக் காணாத கண்கள் சோர்ந்தன. வேலி வளைவுக்குள்தான் மரங்களும் செடிகளும் சேர்ந்து குளிர்ச்சியைத் தந்தன. வீடுகளே அக்கம் பக்கத்தில் இல்லாத அந்த மணல் வீதி வெறிச்சிட்டு வெம்மை வீசிக் கிடந்தது.

''நல்ல வெயில்; இந்தப் பொடி மணல்லே நடந்து வந்தால் மண்டை வெடிக்கப் போயிடும்!'' என்று யாமினி வராததற்கும் சேர்த்துச் சமாதானமாகச் சொன்னான் அவன்.

''அண்ணாவுக்காகச் சொல்றியா? அவர் இப்ப வரமாட்டார். வெயில்லே வரவேண்டாம்னுதான் யாருகிட்டேயாவது காப்பியைக் கூடக் கொடுத்தனுப்பிச்சுடறது. யாராவது சைக்கிள்ளே வந்து வாங்கிண்டு போவான்'' என்றாள் மன்னி.

''பேச்சுத் துணைக்கு யாராவது வரணும்னுச் சொல்றேன். இந்த வெய்யில்லே எப்படி வரமுடியும்?''

''பேசறதுக்கு யார் வரப் போறா? எனக்கும்தான் நேரம் எங்கே இருக்கு? மத்தியானத்திலே சித்த நாழி வாசலைப் பார்த்தாப்பலே தலையைச் சாய்ப்பேன். எழுந்திருந்தாத்தான் அடுப்பு மூட்டறதும் காப்பி போடறதும் வேலை சரியாயிருக்குமே!''

யாமினியைப் பற்றிக் கேட்க வேண்டும் என்று மனசு பொங்கியது. ஆனால் அதைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டான். கன்னியாகுமரியில் தன்னைச் சந்தித்ததையெல்லாம் அவள் மன்னியிடம் சொல்லி யிருப்பாளோ, மாட்டாளோ என்று சந்தேகமாய் இருந்தது. சொல்லி யிருந்தால் எவ்வளவு தூரம் வரையில் சொல்லி யிருப்பாளோ? காரிலேயே திருவனந்தபுரம் வரையிலே வந்தது, அங்கே தங்கிக் கோயிலுக்கெல்லாம் போனது, குற்றாலத்தில் அருவி ஸ்நானம் செய்தது, அப்புறம் அங்கிருந்து திருச்சிக்கே கொண்டுபோய் விட்டது — இதையெல்லாமா அவள் சொல்லியிருக்கப் போகிறாள்? எப்படிச் சொல்ல முடியும்? அவளையும் அவனையும் பற்றி மன்னி என்ன நினைப்பாள் முதலில்? அப்படிச் சொல்லி யிருந்தால் இத்தனை நேரம் மன்னி அதைப் பற்றிக் கேட்டிருப்பாளே! ஆகவே அந்தப் பேச்சை எடுக்காமல் இருப்பதே நல்லது என்று வாயைக் கெட்டியாக அவன் மூடிக் கொண்டான்.

''மாமாவுக்கு இப்ப எப்படி இருக்கு உடம்பு?''

''இந்த மூட்டுக்குப் பிழைச்சுட்டார். நர்ஸிங் ஹோமிலிருந்து வீட்டுக்கு வந்தாச்சு. இனிமேல்தான் என்ன செய்யப் போறார்னு தெரியல்லே!''

''அப்படின்னா புரியலியே.''


''இப்ப உடம்புக்கு வந்ததுக்கே ஷாக்தான் காரணம்னு பேசிக்கிறாங்க. மறுபடியும் அப்படி ஒரு ஷாக் வராமே இருக்கணுமே!''

''எதனாலே ஷாக்?''

''எல்லாம் அந்த அஜிதாவாலேதான். அஜிதா அப்படி என்ன என்ன செய்திருப்பான்னு தெரியல்லே. என்னவா இருந்தாலும் அப்பாவுக்கு உடம்புன்னதும் ஒரு தடவை வந்துவிட்டுப் போயிருக்கலாம். பிளேனிலே வரப்போறா; போகப்போறா. என்ன பெரிய கஷ்டம்? வரவேயில்லே. அப்புறமாவது டிரங்க்-போன்லேவிசாரிச்சிருக்கலாம் இல்லையா? அதுவும் செய்யல்லே. அம்மாவுக்கே இப்படியும் ஒரு பெண் இருப்பாளான்னு சின்னு ஆயிடுத்து. அவள்கிட்டே அம்மா



டோக்கியோவில் உள்ள 'டேன்' என்பவர் தம்முடைய காரைக் கொண்டு 'ஸ்டண்டு'கள் செய்கிறார். படத்தில் காணப்படுகின்ற (படம் 1, 2) மாதிரி சாய்வான பாதையை அமைத்து அதன் மூலம் தம் காரை அந்தரத்தில் செலுத்தி அங்கு பல வித்தைகள் செய்கிறார். அதில் முக்கியமானதாக இது கருதப்படுகிறது. 58 வயதாகியும், தம்முடைய இருபத்தைந்து வருட அனுபவத்தில் பதினெட்டு தடவையே அபாயத்தில் சிக்கியுள்ளேன் என்று கூறுகிறார். - ''என்பூ'' ''டிட்பிட்ஸ்''



வுக்கு ஒரு நல்ல அபிப்பிராயம் இருந்தது. இப்ப அது போயிருக்கும்னு நினைக்கிறேன்.''

''அதானே சொல்றேன். உங்க அண்ணாவே புறப்பட்டு வரதுக்கு இருந்தார். நீ எழுதினதைப் பார்த்துட்டுத்தான் பேசாமல் இருந்தார். பெத்த பொண்ணு வந்து எட்டிப் பார்க்காட்டாலும் நீ சொல்றப்பலே போனிலேயாவது விசாரிக்க வேண்டாமோ? எப்பவுமே அதுக்கு அவள் அம்மாவைப்போல அலட்சியமும் ராங்கியும் உண்டு. இப்ப ரொம்பப் பெரிய எடமாப் போய்ச் சேர்ந்திருக்காளா, அப்பாகூடச் சொந்தமாப் படவில்லே போலிருக்கு!''

''என்னமோ தெரியலே!''

''நல்ல காலம்! உன் தலையிலே கட்டி வைக்காமே போனான். வச்சிருந்தால் என்ன ஆகியிருக்குமோ? தெரிஞ்சுதான் புத்திசாலித்தனமா வந்து பார்த்துக்கலாம்னு மழுப்பிட்டே போலிருக்கு!''

''இப்ப நான் அப்படியும் சொல்லிக்கலாம். ஆனால் அப்ப நான் அடியோட வேண்டாங்கலே. படிப்புக்குத் தடையா வேண்டாம்னுதான் சொன்னேன்.''

''எப்படியானால் என்ன? எல்லாம் நல்லதுக்குத்தான்னு வை! உனக்குன்னு ஒருத்தி தன்னாலே வந்துசேருவாள். நான் எதிர்பார்க்கிறதெல்லாம் அவள் கொஞ்சம் சீக்கிரமா வரணும்னுதான்!''

மன்னி பேசி முடிப்பதற்குள் படல் திறக்கும் ஓசை கேட்டு இருவருமே அந்தப் பக்கம் பார்த்தார்கள். பாஸ்கரனுக்கு நெஞ்சு படபடத்தது. யாமினி தான் வெட்கமும் நாணமும் மேலிட, முகம் குப்பென்று சிவக்க, அங்கே நின்று கொண்டிருந்தாள். மன்னி கடைசியாகச் சொன்னது அவள் காதில் விழுந்து விட்டது. தன்னைக் குறித்துத் தான் ஏதோ பேச்சு நடக்கிறது என்று நினைத்த அவள் அடுத்த அடி எடுத்து வைக்க முடியாமல் அங்கேயே திகைத்து நின்று விட்டாள்.

அத்தியாயம் 26

அழகே பூத்திருப்பது போல் அவள் வந்து நிற்பதைப் பார்த்து, பாஸ்கரனுக்கு ஆனந்தத்தாலும் வியப்பினாலும் மூச்சுத் திணறியது. வைத்த கண்ணை வாங்காமல் பார்வையாலேயே அவளுடைய எழில் வடிவைப் பருகிக் கொண்டிருந்தான்.

யாமினி சற்று மெலிந்திருந்தாள். ஆனால் இன்னும் சற்றுக் கவர்ச்சியாக இருந்தாள். நெஞ்சில் பதிந்திருந்த உருவைவிட நேரில் இன்னும் அழகாக இருந்தாள்.

''என்னடியம்மா அப்படியே திகைச்சு நின்னுட்டே? சும்மா வரலாம், வா!'' என்று அவளைக் கூப்பிட்டாள் மன்னி.

கூச்சமும் குறுகுறுப்பும் மூத்த அவள் மெல்ல நடந்து வந்தாள். வரும்போதே ஒரு தடவை கடைக் கண் பார்வையை

அவன் மீது ஒட்டினுள். மின்வெட்டுத் தாக்கியது போலிருந்தது அவனுக்கு.

''பார்த்தியா எங்க மச்சினர் எப் படியிருக்கார்னு ?''

அவள் சொன்னதுக்காகப் பார்ப்பது போல அவனைப் பார்த்து விட்டு மன்னி யின் பக்கம் திரும்பிக் கொண்டாள் யாமினி. அந்த ஒரு நொடியில் அவள் உள்ளத்திலிருந்த பூரிப்பெல்லாம் கண் வழியே பாய்வதை உணர்ந்து கொண் டான் பாஸ்கரன்.

''கன்னியாகுமரியிலே பார்த்தேன்னு சொன்னே, பேசினதாச் சொன்னே. இப்ப என்ன வந்தது உனக்கு? உள்ளூ ருக்கு வந்தால் பேசக் கூடாதுன்னு ஏதாவது உண்டோ? வந்ததைப்பத்திக் கூடக் கேக்காமே நிக்கறியே !''

பாஸ்கரனுக்கு இது இன்னேர் அதிர்ச்சியைக் கொடுத்தது. கன்னியா குமரியில் பார்த்ததை மட்டும்தான் சொல்லியிருக்கிருளா, அதற்கு மேலும் சொல்லியிருப்பாளா என்று கேட்டுக் கொண்டான். அதைவிட அதிர்ச்சி, மன்னி இதைப் பற்றி இவ்வளவு நேர மும் ஒன்றுமே கேட்காமல் இருந்தது. அவனுக்குச் சொல்கிருனே என்று பார்த் திருந்தால் இன்னும் அது மோசம்தான்!

''ஊர்க் கதையெல்லாம் பேசிக் கொண்டிருந்ததிலே இதைப் பத்திக் கேக்க மறந்துட்டேன். அவனும் சொல் லல்லே. இப்ப மறந்திருக்கட்டும்; முந்தி யும் எழுதல்லே!'' என்று சமயம் பார்த் துக் குற்றம் சாட்டி வைத்தாள் மன்னி.

''அப்பவும் மறந்துட்டேன், மன்னி!''

''மறந்துட்டியாவது? இரு, இதோ வந்து பேசிக்கிறேன், உங்கிட்டே !'' என்று மன்னி உள்ளே எழுந்துபோனுள்.

இருவரும் ஒருவரையொருவர் பார்த் துக் கொண்டார்கள்.

''ஒன்றுமே தெரியாத சாது, பாவம் ! மன்னிகிட்டே அவ்வளவுதான் சொன்னியா, அதுக்கு மேலேயும் சொல்லியிருக்கியா?'' என்று அடிக் குரலில் கேட்டான் பாஸ்கரன்.

அந்தச் 'சாது' வாயையே திறக் காமல், மன்னி வருவதையே எதிர் பார்த்திருப்பது போல இருந்தது.

''ஸ்ஸூ.... உன்னைத்தான் !''

அவன் அவசரப்படுத்திஞன். அவள் பொருட்படுத்தவேயில்லை.

''பேசமாட்டியா ?''

''உடம்பெல்லாம் இளைச்சுக் கறுத் துப் போயிருக்கு !''

''இருந்தால் இருக்கட்டும்; கேட்ட துக்குப் பதில் சொல்லு.''

அவள் தலையை ஆட்டிஞள். அதற்கு என்ன அர்த்தமோ தெரியவில்லை. அவ னுக்குத் தவிப்பாக இருந்தது.

மன்னி இரண்டு பேருக்கும் காப்பி கொண்டு வந்து கொடுத்து விட்டு, ''அவள் என்னமோ கூச்சப்படறுள் போலிருக்கு. என்ன கேக்கணுமோ என்னைக் கேளேன், சொல்றேன்!'' என் ருள் பாஸ்கரனைப் பார்த்து.

பாஸ்கரனுக்கு அவமானம் பிடுங்கித் தின்றது.

''கன்னியாகுமரியிலேருந்து நீ அவளை அழைச்சிண்டு வந்து காரிலேயே கொண்டு வந்து விட்டிருக்கே, காலேஜுக்கு. அதுக்குள்ளே பிரின்ஸி பாலும் வார்டனும் பயந்துபோய் அவள் அப்பாவுக்குத் தந்தியடிச்சு வரவழைச் சிருக்கா; அப்புறம் என்னமோ சமா தானம் பண்ணித் திருப்பியனுப்பிச் சிருக்கா. இவ்வளவு தூரம் ரகளையா யிருக்கு. நீ மறந்து போயிட்டேன்னு சொல்றியே. நீ மறந்தாலும் ஊர் ஜனங்க வம்புபேசறதுக்கு மறக்கல்லே.''

இது அவனுக்கு மண்டையில் ஓங்கி அடித்தது போல் இருந்தது. யாமினி இப்படி எல்லாவற்றையும் சொல்லியிருக் கிருளே என்று கோபம் வந்தது.

''நீ எழுதல்லியேன்னு நான் குத்த மாச் சொல்லல்லே. உனக்கு அப்புறம் நடந்ததெல்லாம் தெரியாது; அதனுலே எழுதல்லே. அதுக்கு முன்னுலே நடந் ததை யெல்லாம்கூட எழுதாத வரை யிலே நல்லதாப் போச்சுன்னு நினைச் சுக்கோ. எழுதியிருந்தால் உங்க அண்ணு வுக்கு வருத்தமா இருந்திருக்கும். ஊரிலே கிசுமுசுன்னு வம்பளக்கிறது உங்க அண்ணு வரைக்கும் எட்டல்லே. ஊரிலேகூட யாமினியைக் கல்லூரியிலே ரெண்டு நாளாக் காணல்லேன்னுதான் தெரியுமே தவிர, நடந்ததெல்லாம் தெரியாது. நான்தான் யாமினியை ரகசியமாக் கேட்டேன். எனக்குத்தான் என்ன நடந்ததுன்னு தெரியும். வேறே ஒரு பிராணிக்குத் தெரியாது. அது வரையிலே நல்ல காலம்னு வச்சுக்கோ.''

பாஸ்கரன் இதற்கு என்னவோ பதில் சொல்ல நினைத்தான். ஆனுல் பேச்சு வந்தால்தானே ?

''நீ ஒண்ணும் சொல்ல வேண்டாம். எனக்கு எல்லாம் தெரியும். தெரிஞ்சு தான் அண்ணுகிட்டே நானே முந்திக் கிண்டு ஜாடையாச் சொல்லி வச்சேன். கடைசியிலே எப்படியோ விஷயம் தெரிஞ்சு அவர் மனசு கஷ்டப்படக் கூடாது பார், அதுக்காக நீங்க ரெண்டு பேரும் கன்னியாகுமரியிலே சந்திச்ச தாக மட்டும் சொல்லி வச்சேன். யாமினிக்குப் பஸ் தவறிப் போச்சுன்னு கல்லூரியிலே கொண்டு விட்டதாகவும் சொல்லி வச்சிருக்கேன். அவருக்கு

உன்னையும்தெரியும். அவர்கிட்டே படிச்ச யாமினியையும் தெரியும். அதனுலே, 'நீ வாயை மூடிண்டு இரு. யாராவது அது இதுன்னு சொல்ல வரட்டும்; நான் பேசிக்கிறேன் அதுக்கு மேலே. பாஸ்கரன் வந்தாக்கூட இதைப் போய் அவனிடம் கேட்டு வைக்காதே. மனசு கஷ்டப்படப் போருன்'னு சொல்லிட்டுப் போயிட்டார்!'' என்ருள் மன்னி.

பாஸ்கரன் குனிந்த தலை நிமிராமல் உட்கார்ந்திருந்தான். மன்னிக்கு இதெல்லாம் தெரிந்தது வரையில் நல்லதாயிற்று என்று தெம்பு ஏற்பட்டது.

''போனது போகட்டும். இப்ப ஒண்ணும் தலை போயிடல்லே. இனிமேயாவது வம்புப் பேச்சு வரது மாதிரி வச்சுக்க வேண்டாம். அதைத்தான் நான் சொல்வேன்.''

''இதுக்கு ஒரு முடிவு பண்றதுக்குத்தான் மன்னி, இப்ப நான் முக்கியமா வந்திருக்கேன்'' என்ருன் பாஸ்கரன்.

''அது தெரிஞ்சுது.... நீ வெயிலைப் பத்திச் சொன்னப்பவே நீ யாரை எதிர்பார்க்கறேன்னு நான் தெரிஞ்சுண்டேன். தெரியாதது மாதிரி கடைசி வரையிலே இருந்துடலாம்னுதான் பார்த்தேன். பேச்சு வந்தது சொல்லிட்டேன்!''

பெற்ற தாய்க்கு மேல் தன்னிடம் பாசமும் பரிவும் வைத்திருக்கிற இந்த மன்னியின் பாதங்களில் விழுந்து வணங்க வேண்டும் போல் இருந்தது பாஸ்கரனுக்கு.

''நீ இருக்கிற போது உன்னை மீறி எதுவும் நடக்காது'' என்ருன் அவன்.

''நான் இருந்து என்ன செய்வேன்? 'எண்ணித் துணிக கருமம்'னு படிச்சதில்லையா, அது நினைவிலே இருக்கணும். ரெண்டுபேருக்குமேதான் சொல்றேன்!''

''நான் எண்ணித்தான் துணிஞ்சிருக்கேன். அதனுலே அங்கே சொல்லு!'' என்று யாமினியைச் சுட்டிக்காட்டிச் சொன்னுன் பாஸ்கரன்.

''எனக்கும் தெரியும்; நானும் படிச்சிருக்கேன்'' என்ருள் யாமினி.

(தொடரும்)

விளையாட்டுக்களில் வெற்றிபெற...

அசுரப் பயிற்சி எதற்கு?

''பருமனுன ஆட்கள் விளையாட்டுக்களில் கலந்து கொள்ள முடியவில்லையே என்று கலங்க வேண்டாம். பருமனுன ஆட்களும் நீச்சல் பயிற்சியில் வெற்றியாளராகத் திகழலாம். அவர்கள் உடல் நீரில் அமிழ்ந்திருக்கும் போது இலேசாகி விடுகிறது. அந்த சமயம் ஒல்லியானவர்களை விட இவர்கள் விரைவாக நீந்திச் செல்ல உடல் வாகு ஒத்தாசை செய்யும்!'' என்று டாக்டர் ரோகர் பானிஸ்டர் விளையாட்டுக் கலைஞர்களுக்கு விளக்கினுர். இவர் 1954ம் ஆண்டில் நான்கு நிமிஷங்களுக்குள் ஒரு மைலை மின்னல் வேகத்தில் கடந்து உலக ரிகார்டைக் கண்டவர்!

''விளையாட்டுக் கலைஞர்கள் வெற்றிகள் காணப் புது வழிகள் ஏதாவது உண்டா?''

''செக்கோஸ்லோவேகிய நாட்டு சாம்பியன் ஓட்டக்காரர் ஜெட்டோபேக் ஒரு மனித ரயில் என்ஜின். அவர் உலகப் பந்தயத்தில் பீட்டரோடு ஓடிக்கொண்டிருந்தார். ஓடும்போதே அவர், ''இதுவரை உங்க நாட்டுக்காரர் முதல் பரிசு பெற்றது கிடையாது!'' என்று சொல்லிக் கொண்டே ஓடினுர். இது பீட்டரைக் குழப்பி விட்டது. ஒருவித தாழ்வு மனப்பான்மை பீட்டரை ஆட்கொள்ளவே ஜெட்டோபேக் தான் இறுதியில் வென்ருர்! மனே தத்துவமும் வெற்றிக்குத் துணை!''


''ஓட்டக்காரர்கள் எவ்வாறு பயிற்சியை மேற்கொள்ள வேணும்?''

''குழந்தைகள் ஓடி ஆடுவதைப் பார்த்திருக்கிறீர்களா? அவர்கள் சிறிது நேரம் ஓடுவார்கள், ஆடுவார்கள்; கொஞ்சம் ஓய்வு. அவர்களிடமிருந்து ஓட்டக்காரர்கள் படிப்பினை பெறலாம். ஒரேடியாக ஓடிப் பயிற்சி செய்யலாகாது. நீண்ட தூர ஓட்டத்தில் சற்று தூரம் ஓடிய பிறகு ஓட்டக்காரர்கள் சற்று நிதானிக்க வேணும். காற்றிலுள்ள பிராண வாயுவை எவ்வளவுக்கெவ்வளவு உடலுக்கு ஏற்றுக் கொள்கிறீர்களோ, அவ்வளவுக் கவ்வளவு உடல் உங்களுக்கு ஓட வளைந்து கொடுக்கும். செக்கோஸ்லேவேகிய சாம்பியன் ஜெட்டோபேக் தம் மனைவியையும் தூக்கி வைத்துக் கொண்டு ஓடிப் பயிற்சி செய்வார்! அவரது மனைவி வேல் எறியும் (Javelin Throw) கலையில் சாம்பியன்! ஜெட்டோபேக் மாதிரி எல்லாரும் அசுர சாதனை செய்ய வேண்டாம்!''

நாற்பத்திலொரு வயதாகும் ஆங்கிலேய ஓட்டக்காரர் ரோகர் பானிஸ்டர் மணமாகி நான்கு குழந்தைகளுக்குத் தந்தை. அவர் இன்னும் இளமையோடு திகழ்கிருர். நரம்புச் சிகிச்சையில் வல்லுநர். (Neurologist) டாக்டர் நோயாளிகளுக்கு மருந்து சொல்வது போல், இரட்டைக் கலைகளில் வல்லுநரான இவர் விஞ்ஞான முறைப்படி சித்திர விளக்கங்களோடு விளையாட்டுக் கலைஞர்கள் வெற்றி பெற பிரிட்டிஷ் கௌன்சிலில் பல வழிகளை விளக்கிருர்.

''விளையாட்டுக் கலைஞர்கள் ஒரே ஆட்டமே குறியென்று இராமல் மற்றப் பொழுது போக்குகளிலும் ஈடுபடவேண்டும். இல்லா விட்டால் விளையாட்டு கசந்து விடும்!'' என்ருர் டாக்டர் பானிஸ்டர்.

-- குண்டுமணி




நீங்கள்
வழங்கும் தேநீர்
உங்கள் விருப்பத்தை
பிரதிபலிக்கச்
செய்யட்டும்!
Brooke Bond
Super Dust Tea
Super Dust
ப்ரூக் பாண்ட்
சூப்பர் டஸ்ட்
செழுமையான டிகாக்ஷன்
மேன்மையான சுவை
ப்ரூக் பாண்ட் சூப்பர் டஸ்ட் — மிக நேர்த்தியான டீ
BB 6072

போராட்டங்கள்

23. சிவராமன் எங்கே?

தலைவர் மாஸேதுங்கைக் கண்டதும் எல்லாரும் எழுந்து மரியாதையாக நின்றார்கள். அவர் வந்த பிறகு கூட்டத்தில் கலகலப்பு மிகுந்தது. அவரவரும் தங்களுக்கிடையில் பேசிக் கொண்டதுடன் தலைவர் மாஸே துங்குடன் ஒரு சில வார்த்தைகளாவது பேச ஆவலுடன் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அத்தகைய ஓர் அரிய வாய்ப்பு அதிர்ஷ்டவசமாகச் சிவராமனுக்குக் கிடைத்தது. இங்குமங்குமாக அந்தப் பெரிய அறையில் நகர்ந்து பலருடன் அளவளாவிக் கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டிருந்த அவன் திடுதிப்பென்று தான் தலைவர் மாஸேதுங்கின் எதிரே நிற்பதையும், அவர் தன்னைக் கவனிப்பதையும் உணர்ந்தான்.

சிவராமனுக்கு உள்ளூறச் சிறிது நடுக்கமே ஏற்பட்டது. முதலில் என்ன பேச வேண்டும் என்பதே தெரியாமல் குழம்பினான். அன்னியனான அவனை உற்றுப் பார்த்தார் தலைவர். சிவராமன் பின்னாலேயே வந்து கொண்டிருந்த சின்போ சட்டென்று சிவராமனை அவருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். தலைவர், புன்னகையுடன் தம் கைகளை நீட்டினார். சிவராமனும் வலக்கரத்தை நீட்டினான். அவருடைய பிடிக்குள் அவனுடைய கரம் சிக்குண்டபோது அவனுடைய உடல் சிலிர்த்தது.

சில விநாடிகள்தான் நீடித்தது இந்தச் சந்திப்பு. மாஸேதுங்கின் கவனத்தை வேறு பல தலைவர்களும் அவர்கள் கூற வந்த கருத்துக்களும் கவர்ந்தன.

சிவராமன் அங்கு குழுமியிருந்த வேறு பல சீனருடன் பேசினான். ஆனால் அவன் மனம் எதிலும் லயிக்கவில்லை. ஏதோ மேகக் கூட்டங்களுக்கிடையில் மிதப்பது போல் அவனுக்கு ஒரு பெருமித உணர்ச்சி! தலைவர் மாஸேதுங்கின் கரத்தையல்லவா, குலுக்கி விட்டான்!

மறுநாள் காலையில் சிவராமனை விமான நிலையத்துக்கு அழைத்துச் செல்



லச் சின்போ அவனுடைய ஹோட்டல் அறைக்கு வந்தார்.

''தலைவர் மா அவர்கள், உங்களுக்கு நல்லாசி கூறுகிறார். உங்கள் மூலமாக உங்கள் நாட்டுக்கு நற்செய்தி அனுப்புகிறார்'' என்றார் சின்போ. பிறகு கைப் பைக்குள்ளிருந்து ஒரு சிறு தபால் உறையை எடுத்துச் சிவராமனிடம் நீட்டினார்.

''உங்களுக்குப் பொறுப்பு வாய்ந்த வேலை இருக்கிறது'' என்றார். தபாலை வாங்கிக் கொண்டதும் அதை முன்னும் பின்னும் பார்த்தான் சிவராமன். உறையில் விலாசம் இல்லை!

''யாருக்கு?'' என்று வியப்புடன் கேட்டான்.

''உங்கள் தலைவர் வேதமூர்த்தியிடம் ஒப்படைத்துவிட வேண்டும். இது மிகவும் இரகசியம். உங்களைத் தலைவர் மா அவர்கள் மனப்பூர்வமாக நம்புவதாலேயே இந்தப் பொறுப்பை உங்களிடம் ஒப்படைக்கிறார்'' என்றார் சின்போ.

சிவராமன் பெருமையால் பூரித்தான். ''தலைவருடைய நம்பிக்கைக்குக் குந்தகமின்றி நடந்து கொள்வேன், தோழரே! இதை எங்கள் தலைவரிடம் பத்திரமாக ஒப்படைத்து விடுவேன்'' என்று உறுதி கூறினான் சிவராமன்.

''வழியில் ஏதாவது சங்கடம் நேர்ந்தால் இதை உடனே எரித்துவிட வேண்டும். மிக மிக முக்கியமான இரகசியங்கள் இதில் அடங்கியுள்ளன'' என்றார் சின்போ.

பீகிங் விமான நிலையத்திலிருந்து இந்தியாவுக்குப் புறப்பட்டபோது சிவராமன் மிகவும் களைப்புற்றிருந்தான். உடலைவிட அவனுடைய உள்ளந்தான் களைப்படைந் திருந்தது. அவனுடைய சுற்றுப் பயணம்வெற்றியடைந்திருந்தாலும், அவனுடைய மனம், ஏமாற்றமடைந் திருந்தது. ஆழம் மிகுந்த சுனையென்று நினைத்து நீரில் நீந்துவதற்காக உற்சாகத்துடன் தலைகீழாகப் பாய்ந்தவனுக்கு, அந்தச் சுனையின் ஆழம் முழங்கால் அளவுதான் என்பது புலனாகும் போது



ர.சு.நல்லபெருமாள்

ஒரே சலவையில் 3 வழிகளில் செயல் புரிந்து...



டெட் துணிகளை அதிவெண்மையாக்குகிறது

— மற்ற எந்த பவுடரையும்விட.

இதோ, எப்படி என்று பாருங்கள்:

1. **டெட்** டிலுள்ள தனிப்பட்ட சக்திவாய்ந்த பொருள் அதி விரைவாகத் துணியில் ஊடுருவிச் சென்று, மறைந்துள்ள அழுக்கைக்கூட நொடியில் விரட்டி அடிக்கிறது. துணிகள் வெண்மையாகின்றன.
2. **டெட்** அழுக்கை வெளிக்கொணர்ந்த பிறகு, அது மீண்டும் படியாமல் தடுக்கிறது. துணிகள் அதிக சுத்தமாகின்றன; சுத்தமாகவே நீடித்து இருக்கின்றன.
3. **டெட்** துணிகளை அதிவெண்மையாக்குகிறது. துணிகள் முன்னைவிட அதிவெண்மையுடன் பளிச்சிடுகின்றன. (நீலம் அல்லது வெண்மைச் சாதனம் சேர்க்கவேண்டிய அவசியமில்லை.)

இன்றே டெட் வாங்குங்கள்! ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ், பம்பாய்.

SHILPI HPMA 38A/70 TAM

ஏற்படும்அதிர்ச்சியும், வலியும், வேதனையும்தான், சிவராமனுக்கு இந்தியா வந்து இறங்கியபோது இருந்தன.

புது தில்லி விமான நிலையத்தை விட்டு அவன் வெளியே வந்ததும், அவனுக்காக நிலையத்தின் முன்வாசலில் வேதமூர்த்தி காத்திருந்ததைக் கண்டதும் அவனுடைய சோர்வெல்லாம் மறைந்து விட்டன. உற்சாகத்துடன் வேதமூர்த்தியை நோக்கி ஓடினான். அவரும் விரைந்து வந்து அவனைத் தழுவிக் கொண்டார். பிறந்த நாட்டு மண்ணின் ஸ்பரிசமும், தலைவரின் அணைப்பும் சிவராமனுக்கு இதமா யிருந்தன.

* * *

'பாரத மணி'க் காரியாலயத்தில் புது இயந்திரம் நிறுவப்படுவதை மேற்பார்வை இட்டுக் கொண்டிருந்தான், சாமிநாதன். பக்கத்து அறையில் டெலிபிரிண்டரிலிருந்து செய்திகளைச் சேகரித்துக் கொண்டிருந்த பிரேமா, அச்சு இயந்திரம் நிறுவப்படும் அறைக்குள் வந்தாள். சாமிநாதனின் பக்கத்தில் வந்து நின்றாள்.

''ஏன் சார் ! புது மிஷின் வாங்குவதால் ஏதாவதுபிரயோசனம் உண்டா?'' என்று அலட்சியமாகக் கேட்டுவிட்டு அவனைக் கூர்ந்து பார்த்தாள் பிரேமா.

காரியாலயத்தில் காலையில் உதவி ஆசிரியர்கள் வேலைக்கு வருவதில்லையாதலால் அந்த நேரத்தில் அவனோடு வம்புச் சண்டை இழுத்துப் பொழுதைக் கழிக்கலாம் என்று நினைத்துத்தான் பிரேமா அங்கே வந்திருக்கிறாள் என்று நினைத்த சாமிநாதன், அவளுக்குப் பதில் சொல்லாமல் இயந்திரத்தை நிறுவுவதில் ஈடுபட்டிருந்த எஞ்சினீயர்களைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஐம்பதினாயிரம்!'' என்று விரல்கள் ஐந்தையும் ஆட்டிக் காட்டிக் கூறினான், சாமிநாதன். '' அதுவும் முதல் தவணையாக !''

''அடேயப்பா....! ஆனால், வட்டியாவது கட்டுமா?'' என்று கேட்டாள் பிரேமா. ''அத்தனையும் கடனுக்குத்தானே ?''

''இந்தாம்மா, உனக்கு வேலை டைப் மிஷினிலும், டெலிபிரிண்டர் மிஷினிலுந்தான். வரவு செலவு கணக்குப் பார்க்க வேறு ஆள் இருக்கிறார்கள்.''

'' கணக்குப் பார்க்க வேறு ஆள் இருந்து என்ன செய்ய? நம்முடைய சம்பளத்தை நாம்தானே கணக்குப் பார்க்க வேண்டியிருக்கிறது !''

''ஏன்... உன்னுடைய சம்பளத்தைத்தான் நேற்றே வாங்கிக் கொண்டாயே?''

''இரண்டாந்தேதி கிடைக்க வேண்டிய சம்பளம், பன்னிரண்டாந் தேதி கிடைத்திருக்கிறது.... ஏன்? உங்களுடைய வரவுசெலவு கணக்கில் இது புலப்படவில்லையோ ?''

''உனக்கு மாத்திரம் பாரபட்சமாக இங்கே நடந்து விடவில்லையே...? எல்லோருக்குமே இதே நிலைதான். புது மிஷின் வேலை தொடங்கி விட்டால் முதல் தேதியிலேயே சம்பளம் வாங்கலாம்.''

''எனக்கு நம்பிக்கை இல்லை. புது மிஷின் இல்லாததாலா இப்போது இந்தப் பணக் கஷ்டம்? 'பாரதமணி'யின் விற்பனைதான் படுத்து விட்டதே!'' என்றாள் பிரேமா, அலட்சியமாக. அவளை உற்றுப்பார்த்தான் சாமிநாதன். அவனுள் கோபம் தலைதூக்கியது.

''சார்! நான் அநேகமாக அடுத்த மாதம் விலகினாலும் விலகிவிடுவேன்'' என்றாள் பிரேமா.

சாமிநாதன் திடுக்கிட்டான். நிமிர்ந்து உட்கார்ந்தான். வியப்புடன் அவளைப் பார்த்தான்.

''ஏன்...? கலியாணம் நிச்சயமாகி விட்டதா ?'' என்று கேட்டான்.

''ஊஹூம்... வேறு இடத்துக்கு வேலைக்குப் போகிறேன்.''

''இங்கே கொடுக்கிற நூற்றைம்பது ரூபாய் போதவில்லையோ?''

'' 'காலைக்குரலி'ல் நூறு ரூபாய் அதிகமாகத் தருகிறார்கள்.''

''சீ... அது ஒரு பத்திரிகையா....?'' என்றான் வெறுப்புடன்.

''பத்திரிகை எப்படி இருந்தால் என்ன சார் ? நமக்குச் சம்பளம்தானே முக்கியம். இங்கே உள்ளதைவிட அதிகமாக நூறு ரூபாய் தருகிறார்கள்.''

இதைக் கேட்டுச் சாமிநாதன் வெறுப்பால் முகத்தைச் சுளித்தான்.

''அடுத்த மாதம் அங்கே போவது என்று முடிவு செய்துவிட்டேன்... நீங்களும் அங்கே வந்தால் உங்களுக்கு இருநூறு ரூபாய் அதிகச் சம்பளம் கிடைக்கும்'' என்றாள் பிரேமா.

''எனக்கு இந்தச் சம்பளமே போதும்'' என்றான் சாமிநாதன்; முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு. அவளோடு இனி பேசிப் பயனில்லை என்பதை உணர்ந்த பிரேமா, அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

நண்பகலில் சாமிநாதன் வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்த போது அவனுடைய சிந்தனை முழுவதும் பிரேமா காலையில் கூறியதைப் பற்றியே சுழன்று கொண்டிருந்தது.

'பாரதமணி'யின் பொருளாதார நிலை பற்றி அவன் சற்று உணர்ந்திருந்



மேற்கு ஜெர்மனியில் உள்ள பல்வேறு தொழிற்சாலைகளில் சிறிதும் பெரிதுமாக ஆண்டுதோறும் இருபது லட்சம் விபத்துக்கள் நிகழ்கின்றனவாம்! இவற்றைத் தடுக்கும் நோக்கத்துடன் தொழிற்சாலைகளில் ''விஷம்!'', 'ஸ்விட்சை போடாதே!', 'பாதுகாப்புப் பெல்ட் அணிந்து கொள்ளவும்!', 'தீப்பற்றிக் கொள்ளும் தன்மையது!' என்றெல்லாம் எச்சரிக்கைப் பலகைகள் அங்கங்கே அமைக்கப்பட்டுள்ளன. இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் இந்த அறிவிப்புகள் அனைத்தும் எழுத்துக்களால் அமைந்தவையன்று. கார் ஓட்டுபவர்களுக்குச் சாலைகளில் சித்திரங்கள் மூலம் அறிவிப்புப் பலகைகள் காணப்படுவதே போன்று சித்திரமாக வரைந்த அறிவிப்புகள் இவை. ஏன்? ஜெர்மன் மொழியில் இந்த எச்சரிக்கைகளை விடுத்தால் என்ன? தொழிலாளிகளுக்குப் படிக்கத் தெரியாதா என்ன?

மேற்கு ஜெர்மனியில் பதினேழு லட்சம் பேர் விருந்தினர் - தொழிலாளிகளாம்! பிற நாடுகளிலிருந்து வந்துள்ள இவர்களுக்கு ஜெர்மன் மொழி தெரியாத காரணத்தாலேயே இப்படி அறிவிப்புப் பலகைகள் வைக்க நேருகிறது. இதிலிருந்து நமக்குத் தெரிய வரும் இன்னொரு விஷயம்: சுதந்திரப் பொருளாதார முறையில் தம் நாட்டவருக்கு மட்டுமின்றி, அயல் நாட்டவருக்கும் கூட வேலை வாய்ப்புக்கள் தரும் அளவுக்குத் தொழில் வளம் பெருகுகிறது!

தகவல்: பா. ருக்மிணி
ஆதாரம்: ஜெர்மன் இன்டர்நேஷனல்

தான். இரண்டு மாதங்களாகச் சம்பளம்கூடத் தாமதமாகத்தான் கிடைக்கிறது. புது இயந்திரம் நிறுவப்பட்ட பிறகு 'பாரதமணி'யின் விற்பனை கூடும் என்பது நிச்சயமில்லை. 'பாரதமணி'க்குப் போட்டியாகக் 'காலைக்குரல்' இருக்கும் வரை 'பாரதமணி', தலை தூக்க முடியாது. 'காலைக்குர'லை எதிர்த்துப் போராட வேண்டுமானால் ஒன்று, தமிழ் நாட்டு மக்களின் தரம் உயர வேண்டும்; அல்லது, 'பாரதமணி', 'காலைக்குரலி'ன் தரத்துக்குத் தாழ்ந்து மக்களின் மனத்தைக் கவர வேண்டும். மக்களின் தரம் உயர்வது என்பது இன்னும் ஓரிரு தலைமுறைகளுக்கு எதிர்பார்க்க முடியாத ஒரு விஷயம். ஆனால் 'பாரதமணி'யின் தரத்தைக் குறைக்கலாம். சாமிநாதனுக்கு மாத்திரம் அதிகாரம் அளித்தால் இன்னும் மூன்று மாதங்களில் 'காலைக் குரலி'ன் விற்பனையையும் மிஞ்சிவிடும்படி செய்து விடுவான். ஆனால் முரளியின் பிடிவாதம்தான் குறுக்கே நிற்கிறதே.

மத்தியானம் சாப்பிட்டு விட்டுக் காரியாலயத்துக்குச் சாமிநாதன் புறப்பட்ட போது, இருவர் அவனைப் பார்க்க வந்தனர்.

''நீங்கள்தானே 'பாரதமணி' நிருபர் மிஸ்டர் சாமிநாதன்?'' என்று ஒருவர் கேட்டார்.

''ஆமாம்.... நீங்கள்.....?''

'' 'காலைக் குரலி'லிருந்து வருகிறோம். நான் மானேஜர். இவர் ஒரு உதவி ஆசிரியர்!''

இதைக் கேட்டதும் சாமிநாதன் பரபரப்பு அடைந்தான். வந்தவர்களை வராந்தாவில் கிடந்த சோபாவில் அமரச் செய்து தானும் ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டான்.

''மிஸ்டர் ஆதிமூலம் எங்களை அனுப்பினார்'' என்றார் ஒருவர்.

கேள்வியைக் கண்களில் தேக்கிப் புருவங்களை உயர்த்தினான் சாமிநாதன்.

''உங்களுடைய திறமையிலும், எழுத்திலும் மிஸ்டர் ஆதிமூலத்துக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு.... 'காலைக் குரலி'ல் நீங்கள் பணி புரிந்தால்...!'' என்றார், 'காலைக் குரல்' மானேஜர்.

''இப்போது நான் 'பாரத மணி'யில் இருக்கிறேன்'' என்றான் சாமிநாதன் வெடுக்கென்று. அவனுடைய குரலில் கோபம் இலேசாகத் தொனித்தது.

''அது தெரியும். தெரிந்துதானே மிஸ்டர் ஆதிமூலம் எங்களை அனுப்பியிருக்கிறார். 'காலைக்குரலை' இன்னும் விஸ்தரிக்கத் திட்டம் போடப்பட்டிருக்கிறது'' என்றார் மானேஜர்.

''அதற்கு நான் என்ன செய்ய வேண்டும் ?''

''உங்களைப் போன்ற திறமைசாலிகளைத்தான் தேடிக் கொண்டிருக்கிறோம். நீங்கள் எங்கள் பத்திரிகையில் பணி புரிந்தால்......''

''திறமைசாலிகளுக்கும் 'காலைக்குர'லுக்கும் என்ன சம்பந்தம்? 'பாரதமணி' மாதிரி ஒரு தரம் வாய்ந்த தேசியப் பத்திரிகையை நடத்தத்தான் திறமை தேவைப்படுமே தவிர, விபசாரிகளைப் பற்றி எழுதவும், சினிமாச் செய்திகளைச் சேகரித்துப் போடவும் யாரை வேண்டுமானாலும் வேலைக்கு அமர்த்திக் கொள்ளலாமே!'' என்றான் சாமிநாதன்.

'காலைக்குரல்' ஆசாமிகளுக்குக் கோபம் வந்தது. ஆனால் அதை அடக்கிக் கொண்டு அவர்கள் மீண்டும் பேசினார்கள்.

''உங்கள்பத்திரிகையில் இருப்பவர்கள் மூன்று பேர் 'காலைக்குரலு'க்கு வரச் சம்மதித்து விட்டார்கள். நீங்கள்


150 ML
HEWLETT'S MIXTURE

எங்கள் அங்கீகாரம் பெற்ற சந்தா வசூலிப்பவரிடம் உள்ளூர் அங்கத்தினர்கள் நேரிடையாக சந்தா செலுத்தலாம். வெளியூர் சேமிப்புச் சீட்டுகள் M. O. மூலம் சேர்த்துக் கொள்ளப்படும்.

வருவதாயிருந்தால் மாதம் ஐந்நூறு ரூபாய் சம்பளம் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்'' என்றார் ஒருவர்.

இதைக் கேட்டுச் சாமிநாதன் திடுக்கிட்டான். 'பாரதமணி' மாதம் இருநூற்றைம்பது கொடுக்கத் திணறும்போது, 'காலைக்குரல்' ஐந்நூறு ரூபாய் தர முன்வரும் விந்தையை எண்ணி மலைத்தான்.

அவனோடு வேலை பார்ப்பவர்களில் மூன்று பேர் 'காலைக்குரலு'க்குப் போகச் சம்மதித்து விட்டதை அறிந்து மனம் குழம்பினான். இப்படி எல்லோரும் ஒவ்வொருவராகக் 'காலைக் குரலு'க்குப் போய்விட்டால், 'பாரதமணி'யின் கதி?

ஒரு கணம் முரளியின் முகம் நினைவில் வந்து படர்ந்தது. திடீரென்று ஒரு சந்தேகம் சாமிநாதனுக்குத் தோன்றியது. தோன்றியதை வெளிப்படையாகக் கேட்டும் விட்டான்.

''நீங்கள் உண்மையிலேயே 'காலைக் குரலை' விஸ்தரிக்கிறீர்களா? அல்லது 'பாரத மணி'யைக் கவிழ்க்கிறீர்களா?''

இதைக் கேட்டதும் 'காலைக்குரல்' மானேஜர் இலேசாகச் சிரித்தார். சாமிநாதனை உற்றுப் பார்த்தார்.

''இரண்டும் ஒன்றுதான்'' என்றார், சிரித்துக் கொண்டே. சாமிநாதன் கோபத்துடன் அவரை முறைத்துப் பார்த்தான். மானேஜர், நிமிர்ந்து உட்கார்ந்தார். மிக முக்கியமான விஷயம் பற்றிப் பேசப்போகிறார் என்பதற்கான அறிகுறி அவருடைய முகத்தில் தெரிந்தது.

''மிஸ்டர் சாமிநாதன்! இது ஒரு வியாபாரம். நாங்கள் இங்கே மக்கள் தரத்தையோ, பண்பாட்டையோ சீராக்க வரவில்லை. இது முழுக்க முழுக்க ஒரு வியாபாரந்தான். வியாபாரத்தில் லாபந்தான் முக்கியம். மக்கள் எங்கள் சரக்கைத்தான் விரும்புகிறார்கள். உங்களிடம் ஒளிவு மறைவில்லாமல் பேசுகிறேன். உங்களுக்கு நல்ல வருங்காலம் இருக்கிறது. 'காலைக் குரலு'க்கு நீங்கள் வரச் சம்மதித்தால், ஐந்நூறு ரூபாய் சம்பளம் தர ஏற்பாடு செய்கிறேன். 'பாரதமணி'யை எப்படியும் இன்னும் ஓர் ஆண்டுக்குள் ஒழித்து விடுவோம். அதுவும் உங்கள் முரளி, எவனோ தூக்குப் போட்டுக் கொண்டு செத்ததற்கு எங்கள் பத்திரிகையைத் தாக்கி எழுதியபிறகு, 'பாரதமணி'யை ஒழித்து விடுவது என்று தீர்மானித்து விட்டோம். நீங்கள் இப்போதே அதை விட்டு விலகி விடுவதுதான் நல்லது'' என்றார் மானேஜர்.

சாமிநாதன் திகைப்புடன் அவர் கூறியதையே கேட்டுக் கொண்டிருந்தான். அவனுள் பயம் சூழ்ந்தது. 'பாரதமணி'க்கு எதிராக நடக்கும் சதியைப் புரிந்து கொண்டான். ஆதிமூலத்தின் பணம், அவனுடைய மனக் கண் முன்னால் பேய்க் கூத்து ஆடி, பலி கேட்பது போலிருந்தது. தரம் கெட்ட ஒரு பத்திரிகை அதிபரின் பணத்துக்குத் தரமுள்ள ஒரு பத்திரிகை பலியாகி விடும்படி தமிழ் நாட்டு மக்கள் விட்டு விடுவார்களா?

சாமிநாதனின் நெஞ்சு வலித்தது. ஒன்றும் பதில் கூறாமல் தரையையே பார்த்துக் கொண்டிருந்தான். மானேஜர் பேசினார்:

''ஆல்ரைட், மிஸ்டர் சாமிநாதன், உங்களுக்கு மாதம் அறுநூறு ரூபாய் தருகிறோம். இந்த நல்ல சந்தர்ப்பம் மறுபடியும் கிட்டாது. நழுவவிடாதீர்கள்.''

குனிந்த தலையை நிமிர்த்தி மானேஜரைப் பார்த்தான் சாமிநாதன்.

''என்னுடைய விஷயத்தில் பணம் பிரச்னையல்ல. நீங்கள் ஆறாயிரம் தருவதாக இருந்தாலும் 'பாரதமணி'யை விட்டு நான் வர இயலாது. நான் வேலை தேடித் தவித்த போது என்னை முரளிதான் ஆதரித்தார். இப்போது அவருக்கு நான் தேவைப்படும்போது அவரோடு இருப்பதுதான் என்னுடைய கடமை'' என்று அழுத்தமாகக் கூறிக் கொண்டே நூற்



கண்ணியம் எங்கே?

மதுரை விமான நிலையம். பிரபல ஹாலிவுட் திரைப்படநடிகர் பிரெடெரிக் மார்ச் அமர்ந்திருந்தார். அவரைச் சுற்றிப் பலர் நின்று கொண்டிருந்தனர், விடை கொடுக்க.

''போலிசார் உங்களிடம் இப்படி நடந்து கொண்டிருக்கக் கூடாது. நாட்டின் மரியாதையைக் குலைத்து விட்டார்கள்!'' என்று அவருக்கு ஆறுதல் அளிப்பவர்கள் போல் கூறிக் கொண்டிருந்தார்கள்.

அப்படி அவர் செய்த காரியம் என்ன?

தேக்கடி சென்று தமிழ் நாட்டுக்குள் நுழைந்தவரின் கையில் அரை பாட்டில் அயல்நாட்டு மது இருந்து விட்டது. சோதித்த 'ஏட் ஐயா' அவரைக் குற்றவாளி என்று நிர்மானித்தார். அதற்காக முப்பத்தைந்து மைல் அவரை அலைக்கழித்தார்.

பிறகு அயல்நாட்டவர், அதோடு நம் நாட்டு விருந்தாளி என்பதற்காக அவர் விடுவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட்டு, ''தவறு என்னுடையதுதான். எந்த நாட்டவரு இருந்தாலும் இன்னொரு நாட்டுக்குள் நுழையும்பொழுது அந்த நாட்டின் சட்டதிட்டங்களைத் தெரிந்துகொண்டு நடப்பது தான் அவன் கடமை. நான் இழைத்த தவறுக்குப் பெரிய மனதோடு, என்னைக் குற்றவாளி இல்லை என்று விட்டு விட்டார்களே, அவர்களுடைய கண்ணியத்தை நினைக்கும்பொழுது எனக்குத் தலைகுனியத் தோன்றுகிறது!'' என்றார் பிரெடெரிக் மார்ச் பெருந்தன்மையுடன். - ரா. வி.

(லிப்கோ புத்தக வெளியீட்டு விழாவில் துப்பறியும் துறை அதிகாரி டயஸ் கூறியது.)

காலியிலிருந்து எழுந்தான் சாமிநாதன். மற்ற இருவரும் ஏமாற்றத்துடன் எழுந்து நின்றனர்.

சாமிநாதன் ஒரு கும்பிடு போட்டு விட்டு, ஸ்கூட்டரில் ஏறி, 'பாரத மணி'க் காரியாலயத்தை நோக்கி விரைந்தான்.

முரளியின் அறைக்குள் சாமிநாதன் நுழைந்தபோது முரளி, ரொம்பப் பரபரப்புடன் காணப்பட்டான். ''தேர்தலையும் அதில் தங்கள் கட்சி வெற்றி பெற வேண்டும் என்பதையுமே முக்கியமாகக் கருதி வோட்டுக்காக இந்த அரசு செய்திருக்கிற அசட்டுத்தனத்தைப் பார்த்தாயா?''

''என்ன நடந்து விட்டது?'' என்று கேட்டான் சாமிநாதன்.

''காளிநாதன் மில்லில் நடந்த இரண்டு கொலைகளுக்கும், தீ வைப்புக்கும் இந்த அரசாங்கம் 'பாரதமணி'யில் வெளியான புகைப் படங்களைக் கொண்டு குற்றவாளிகளைக் கண்டு பிடித்து வழக்கும் தொடுத்தது. இப்போது கட்சிப் பேரைச் சொல்லிக் கொண்டு பத்துப்பேர் வழக்கை வாபஸ் பெறக் கிளர்ச்சிசெய்து கல்லெறிந்ததும், இரண்டுபேர் உண்ணாவிரதம் இருப்பதாகக் கூறியதும் அரசாங்கம், வழக்கை வாபஸ் பெற்றுவிட்டது! பத்துக் காவாலிகள் கற்களையும் திவட்டியையும் வைத்துக்கொண்டு ஒரு கட்சிக் கொடியை ஏந்தி ஆர்ப்பாட்டம் செய்து விட்டால், எதையும் சாதித்துவிட முடியும் என்னும் நிலை ஏற்பட்ட பிறகு, ஆட்சி என்பது மந்திரி சபையிடமா அல்லது அந்தப் பத்துக் காவாலிகளிடமா?'' என்று பொரிந்து தள்ளினான் முரளி.

''இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்?''

''காளிநாதன் மில் டைரக்டர்களுக்கு ஒரு கடிதம் 'டைப்' அடிக்க வேண்டும். மில்லில் நடந்த கொலை பற்றிய வழக்கை மில் டைரக்டர்கள் நடத்த வேண்டும். அரசாங்கம் வழக்குத் தொடரத் தவறினால், தனிப்பட்டவர்கள் வழக்குத் தொடர உரிமை இருக்கிறது. இதுபற்றிக் காளிநாதன் மில்லுக்கு எழுதலாம்....'' என்றான் முரளி.

''அரசாங்கமே இந்த வழக்கை வாபஸ் வாங்கிவிட்ட பிறகு, நமக்கு என்ன சார்? வலிய ஒரு வழக்கைத் தொடுத்துக் கம்யூனிஸ்ட் கட்சியின் பகையைச் சம்பாதிப்பானேன்....?'' என்றான் சாமிநாதன்.

''மந்திரி சபை இன்று இருக்கும். நாளை போகும். ஆனால் ஊரில் சட்டமும், ஒழுங்கும் என்றும் இருக்க வேண்டியவை'' என்றான் முரளி, மிகுந்த கோபத்துடன்.

முரளி அன்று முழுவதும் மனக் குழப்பத்தில் ஆழ்ந்திருந்தான். உலகக் கம்யூனிஸ்ட் கட்சி மகாநாட்டுக்குச் சென்ற சிவராமன், கிட்டத்தட்ட ஒரு வருஷமாகியும் ஊர் திரும்பாததை எண்ணி மிகுந்த கவலைக்குள்ளானான். இரண்டு முறை அவனிடமிருந்து எங்கிருந்தோ கடிதங்கள் மட்டும் வந்தன. தன்னுடைய தாயாரைக் கவனித்துக் கொள்ளும்படி முரளிக்கு எழுதியிருந்தான். கட்சியின் விஷயமாகச் சிவராமன் தலைமறைவாக இருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டான் முரளி.

அரசாங்கத்தால் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்படாமல் இருக்கும்போது ஏன் இந்தத் தலைமறைவு....?

தலைமறைவாக இருப்பதற்கு இரண்டு காரணங்கள்தான் உண்டு. ஒன்று—கட்சியை அரசாங்கம் தடை செய்திருக்க வேண்டும். அல்லது சதி வேலை நடைபெற வேண்டும். ஜனநாயக நாட்டில் இப்படியொரு கட்சி வளர்ச்சி அடைகிறதே என்னும் கவலை, முரளியைப் பற்றிக் கொண்டது. (தொடரும்)



வெள்ளி வீணை

—கஜமுகன்—



இசை மன்றத்திலிருந்து வீடு திரும்பும் போது இரவு பதினோரு மணியாகிவிட்டது. எத்தனை நேரமானாலும் விழித்திருக்கும் மனைவி, அழைப்பு மணியைப் பல்முறை ஒலிக்கச் செய்தும் கதவைத் திறக்காதது சற்று வியப்பை அளித்தது.

''வீணா!'' என்று குரல் கொடுத்துக் கதவைத் தட்டினேன். மணி அலறலுக்குப் பதில் கொடுக்காதவள் என் குரல் ஒலிக்குப் பதில் கொடுத்தாள்.

''வந்து விட்டேன்'' என்று வேகமாக நடந்து வரும் அடி ஓசை கேட்டது.

''இத்தனை நேரம் ஏன்? சாப்பாடு உண்டா?...?''

''இனிமேல் சாப்பாடா? அதுதான் ஆகி விட்டதே!''

''எங்கே?'' மனைவியின் குரலில் ஓர் ஐயப்பாடு தோன்றியது.

''வயிற்றுச் சாப்பாட்டைப் பற்றி யார் சொன்னார்கள்? செவிக்கு உணவு நிறைவாய் அமுதமாய்க் கிடைத்தது. அதை அசை போட்டுக் கொண்டிருந்தாலே போதும்.''

''அவ்வளவு அற்புதமான கச்சேரியா?''

''கந்தர்வ கானம்தான். உனக்குப் பெயர் தான் வீணா. வீணையைக் கண்டால்தான் உனக்குப் பரம வைரியைக் கண்டது போல் ஆகிவிடுவாயே!''

''பெயர் விமரிசனம் வேண்டாம். நீங்களே கேட்டு ரசியுங்கள். அந்த வீணாதாரி யாரோ? எந்தப் பெரிய மனுஷன் வீட்டுப் பெண்ணோ? அப்படி இருந்தால்தானே உங்கள் இசை மன்றத்தில் மேடை கொடுப்பார்கள்?''

''என்ன வீணா இப்படியெல்லாம் கேட்கிறாய்?''

''உண்மையைத்தானே கேட்கிறேன்? என் குழந்தை கருணை உயிரைக் கொடுத்து வீணை கற்றுக் கொண்டாள். அவளுக்கு உங்கள் மன்றத்தில் மேடை கொடுக்கவில்லை. வீணையை முறித்துப் போட்டாயிற்று. அதன் பிறகு யார் வீணை வாசித்தால் என்ன, எக்கேடு கெட்டால் என்ன? அந்த சரஸ்வதி தேவியே இறங்கி வந்து வாசித்தாலும் எனக்கு நாராசமாகத்தான் இருக்கும்.''

அவளுடைய மௌனகத்தை நினைத்து வருந்தினேன். நான் உடுப்புக்களை மாற்றிக் கொண்டு படுக்க ஆயத்தமானேன். வீணா ஒரு தம்ளரில் பாலைக் கொண்டு வந்து நீட்டினாள். மழமழவென்று தந்தம் போன்ற அந்த வளைக் கரங்களைப் பற்றி அவளைச் சற்று நேரம் உற்று நோக்கினேன். அடேயப்பா! அந்தக் கண்களில்தான் என்ன மயக்கம்! என்ன மோகனக் கவர்ச்சி! நாற்பத்தைந்து வயதைத் தாண்டியும் அன்று போல் மெருகழியாத



ஒரு தோற்றம். உடலிலே வாட்டமில்லாத ஒரு பூரிப்பு! கருகருவென்று நரை காணுக் கேசம். ரவிவர்மா சித்திரம் போன்ற இவளை மனைவியாக அடைந்ததற்கு என்ன பாக்யம் செய்திருக்க வேண்டும்?

பாலைச் சாப்பிட்டுவிட்டுத் தம்ளரை அவளிடம் நீட்டினேன். அவள் அதை வாங்கி வைத்துவிட்டு என் அருகில் அமர்ந்தாள்.

''வீணு, நான் ஏதோ சொல்ல வந்தேன். பேச்சு திசை திரும்பி விட்டது.''

''இன்னும் என்ன புதிதாக வைத்திருக்கிறீர்கள்?''

''இன்று வீணை வாசித்தாளே ஒரு பெண். அவளை நாளை நம்முடைய வீட்டுக்கு அழைத்திருக்கிறேன்....''

''இதற்குத்தானு இவ்வளவு முகஸ்துதியும் வர்ணனையும்? அதை முதலிலேயே சொல்லியிருக்கலாமே? நீங்கள் சொன்னதை நான் தட்டியதுண்டா?''

விளக்கு அணைந்தது. தூக்கம் என்னைத் தழுவ மறுத்தது. அந்தப் பெண் வாசித்த பைரவி, கல்யாணி, தோடி, வஸந்தா, பௌளி ராகங்கள் ஒவ்வொன்ருக என் காதுகளில் ஒலிக்கத் தொடங்கின. என் சிந்தனைகள் இருபத்தைந்து வருஷங்களுக்கு முந்திய நிகழ்ச்சிகளை இழுத்து வரத் தொடங்கின. வீணு அமைதியாக உறங்கத் தொடங்கி விட்டாள்.

எனக்கு அப்போது வயது இருபத்தைந்து. பெற்றோர்களுக்கு ஒரே பிள்ளை. எம். ஏ. பட்டம் வாங்கியவுடன் ஒரு கம்பெனியில் நல்ல வேலையும் கிடைத்து விட்டது. இளம் வயதிலிருந்தே சங்கீதத்தில் அளவு கடந்த ஈடுபாடு உண்டு. எந்தக் கச்சேரியானலும் சரி, என்னை அங்கு பார்க்கலாம்.

இப்படி இசை மோகம் கொண்டு அலைந்த எனக்குச் சங்கீதத்தில் தேர்ச்சி பெற்ற ஒரு பெண்ணை மணம் செய்விக்க வேண்டும் என்று என் பெற்ருேர்கள் வரன் தேடினர்கள். நானும் அதையே விரும்பினேன்.

ஒரு நாள் மாலை என் நண்பன் ஒருவன் வீட்டுக்குப் போயிருந்தேன். என் நண்பனுக்குத் தெரிந்த வீணை வித்வான் ஒருவர் வீணை வாசிக்கப் போவதாக அவன் சொல்லியிருந்தான். நண்பன் பெரிய வீட்டுப் பிள்ளை. கலை உலகுடன் தொடர்பு உடையவன். அதனுல் அவன் வீட்டில் அடிக்கடி இம்மாதிரிக் கச்சேரிகள் நடப்பதுண்டு. அன்றும் அதேபோல் ஏற்பாடு செய்திருந்தான். முப்பது நாற்பது பேர் வந்திருந்தார்கள். வைணிகர் இளவயதினர்தான். முப்பது வயதுக்கு மேல் போகாது. ஆள் கம்பீரமாக அழகாக இருந்தார். அதுபோல் அவர் வீணை மீட்டலும் சுநாதத்துடன் ஒலித்தது. அற்புதமாக வாசித்தார். அதை விட அவர் பக்கத்தில் அமர்ந்து தாளம் போட்டுக் கொண்டிருந்த ஐந்து வயதுச் சிறுமிதான் எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்தாள். லயம் பிசகாமல் அவள் போட்ட தாளத்தைக் கண்டு அனைவரும் வியந்தனர்.

''குழந்தை யார்?'' என்ற வினா ஒவ்வொருவர் மனத்திலும் எழுந்தது.

''வைணிகருடைய மகள்தான். தாயார் தவறிவிட்டாள். அவருக்கு மகள்தான் உலகம்'' என்று என் நண்பன் என்னிடம் சொல்லிக்கொண்டிருந்தபோது. ''அடடா!''என்று பெண் குரல் ஒன்று பரிவு பொங்க ஒலிக்கவே, திரும்பிப் பார்த்தேன். என் கண்களை அகற்ற முடியவில்லை. ஒளிமயமான அந்த வடிவம் என் புலன்களை ஸ்தம்பிக்க வைத்து விட்டது! இப்படி ஓர் அழகா என்று மெய்சிலிர்த்துப் போனேன்.

அதன் பிறகு கச்சேரியில் என் மனம் லயிக்கவில்லை. அந்தப் பெண் என் இதய வீணையை மீட்டத் தொடங்கிவிட்டபோது நான் எங்கே கவனம் செலுத்த முடியும்? நான் அவளை அடிக்கடி பார்த்துக் கொண்டே இருந்தேன். அவளோ வீணை வாசிப்பையும், அந்தச் சிறுமியையும் இமை கொட்டாமல் பார்த்துப் பரவசத்தில் ஆழ்ந்திருந்தாள்.

ஒவ்வொரு கீர்த்தனம் முடிந்ததும் அவள் மகிழ்ச்சியுடன் கர ஒலி எழுப்பியது அவளுக்கு இசையில் அளவு கடந்த ஈடுபாடு இருக்கும் போல் தோன்றியது. 'இத்தனை நாட்களாக நான் தேடி வந்த இலட்சியப் பெண் இவள் தானோ?' என்ற கேள்வி என் மனத்தில் எழுந்தது.

கச்சேரி முடிந்தது. வீணை வித்வானை எல்லோரும் பாராட்டினார்கள். அவள் அந்தப் பெண்ணைத் தட்டிக்கொடுத்துக் கொஞ்சினாள்.

நான் வைணிகரிடம் ''எங்கள் வீட்டுக்கு ஒரு நாள் குழந்தையுடன் வரவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டேன். உடனே என் நண்பன் என்னை அறிமுகம் செய்து வைத்தான். ''இவன் ஒரு பரம ரஸிகன். சங்கீதம் உயிர்மூச்சு. கல்யாணம் ஆகவில்லை. சங்கீதம் தெரிந்தவளைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன் என்று பிடிவாதமாக இருக்கிறான். உங்களுக்கு யாராவது வரன் தெரிந்தால் சொல்லுங்கள்'' என்று வேண்டாத விவரங்களை அவன் சொன்னபோது அவனை முறைத்துப் பார்த்தேன்.

''கோபித்துக் கொள்ளாதே. வீணைஸாரிடம் பலர் கற்றுக் கொள்கிறார்கள். உனக்குச் சரியான இடமாக முடித்துக் கொடுப்பார்!'' என்று நண்பன் அதே பேச்சை மேலும் தொடரவே, எனக்கு அந்த இடத்தை விட்டு நகர்ந்தால் போதும் போலாகிவிட்டது. அந்தப் பெண்ணைப் பார்த்த பிறகு வேறு முகம் எதையும் என் மனம் சிந்தித்துப் பார்க்க மறுத்து விட்டது. அந்தப் பெண்ணோ என்னை லட்சியம் செய்ததாகத் தெரியவில்லை. அவளை என் நண்பன் அறிமுகம் செய்து வைக்க மாட்டானா என்று இருந்தது.

''வீணை ஸார், நீங்கள் எப்போது வருகிறீர்கள்?'' என்று அவரைக் கேட்டேன்.

''எனக்கென்ன, எப்போது வேண்டுமானாலும் வருவேன். அடுத்த வெள்ளிக் கிழமை இரவு உங்கள் வீட்டில் சாப்பாட்டையும் கச்சேரியையும் வைத்துக் கொள்வோமே!''

''ஓ! ரொம்ப சந்தோஷம். கட்டாயம் வந்துவிடுங்கள்...''

''நான் வரலாமா?'' என்று அந்தப் பெண் எங்கேயோ இருந்தவள் திடீரென்று அருகில் வந்து கேட்டாள்.

நான் ஒரு வினாடி பிரமித்து நின்றேன். ''தாராளமாக வரலாம்.''

''நல்ல ஆளப்பா நீ. இவளை யார் என்று தெரியாமலேயே கூப்பிடுகிறாயே!''

''நீ அறிமுகம் செய்து வைத்தால்தானே தெரியும்?''

''இவள் எங்கள் பள்ளிக்கூடத்தில் ஆசிரியை. பி.ஏ., பி.டி. ஊருக்கு வந்து ஆறு மாதங்கள் ஆகின்றன. பெயர் வீணா.''

''குரலுக்கேற்ற பெயர்'' என்று மனத்துக்குள் பாராட்டினேன்.

வெள்ளிக் கிழமை வந்தது. வீணை வித்வான் பாப்பா, வீணா, என் நண்பன் நால்வரும் வந்தார்கள். என் தாயும், தந்தையும் அவர்களை இன்முகத்துடன் வரவேற்று உபசரித்தார்கள். வீணாவை அவர்களுக்குப் பார்த்தவுடனேயே பிடித்து விட்டது. அவளிடம் அவர்கள் தங்கள் மனத்தைப் பறிகொடுத்து விட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். வீணாவும் அவர்களுடன் ஒட்டிப் பழகினாள்.

வீணை வித்வான் அன்று என் வீட்டில் செய்த கச்சேரியைப் பல வருடங்கள் ஆனாலும் மறக்க முடியவில்லை. இரவு நேரம் ஏறிக் கொண்டே போயிற்று. உலகே நாதப் பிரும்மத்தில் லயித்து அமைதி நிலவியது. பாப்பாவின் கண்களில் உறக்கத்தின் சாயையே தென்படவில்லை. வீணாவோ இந்த உலகில் இல்லை. இரண்டு மணி அடித்தது. அவர் மங்களம் வாசித்தார். நான் அவர் காலில் விழுந்து நமஸ்கரித்தேன்.

''நீங்கள் சாதாரண மனிதர் அல்ல. கந்தர்வ புருஷர்'' என்றேன், கண்களில் ஆனந்த பாஷ்பம் பொங்க. அவர் பரபரப்புடன் என்னைத் தூக்கி நிறுத்தினார்.

''அப்படியெல்லாம் புகழாதீர்கள். என்றோ ஒரு நாள்தான் எனக்கு இப்படி ஆவேசம் வரும். அதுவும் என் மனைவியை நினைத்துக் கொண்டு விட்டால் அவளை மறப்பதற்கு என்னை மறந்து வாசிக்கத் தொடங்குவேன்.'' அவர் பெருமூச்சு விட்டார்.

அந்த வெள்ளிக் கிழமைக்குப் பிறகு அவரை அடிக்கடி பார்த்து வருவேன். ஆனால் வீணாவைப் பார்க்க முடியவில்லை. அவள் என் வீட்டுக்கோ, நண்பன் வீட்டுக்கோ வரவில்லை. வித்வான் வீட்டுக்கு மட்டும் வந்து போவதாக அறிந்தேன். அது என் மனத்தில் ஒரு நெருடலை ஏற்படுத்தியது. அவளுக்கு வைணிகரிடம் ஒரு பிடிப்பு ஏற்பட்டிருப்பது போலத் தோன்றியது. என் மனம் நிராசையால் தவித்தது. ஒரு வேதனை மனத்தை அழுத்தியது. அந்த அழகுக்கு ஈடு இல்லையே என்று ஏங்கினேன்.

என் தாய் தகப்பனார் என் கல்யாணத்துக்கு வற்புறுத்தத் தொடங்கி விட்டார்கள். நான் ஒருவாறு மனத்தைத் திறந்து வீணாவைப் பற்றிச் சொன்னபோது அவர்கள் பரம சந்தோஷம் அடைந்தார்கள். அவளைப் பார்த்துப் பேசுவதாகச் சொன்னார்கள்.



B. Dattaram-GSF-5

ஆனால் வீணாவை அவர்கள் பார்க்க முடியவில்லை. திடீரென்று வேலையை விட்டு அவள் ஊருக்குப் போய் விட்டாளாம். என் நண்பனைக் கேட்டேன். அவனுக்கு விவரம் தெரியவில்லை. அவர்களது பெற்றோர்களது விலாசமாவது தெரியுமா என்று கேட்டேன். அவர்கள் வடக்கே இருந்தார்கள். இன்ன ஊர் என்று தெரியவில்லை.

நான் மனம் உடைந்து வீணை வித்வானிடம் போனேன். என் முக வாட்டத்தையும் உடல் நலிவையும் கண்டு அவர் திடுக்குறவில்லை. ''நண்பரே, கவலைப் படாதீர்கள். வீணா உங்களுக்குக் கிடைப்பாள்!'' என்றார். நான் வியப்பால் விழிகள் விரிய அவரை நோக்கினேன். அவர் தொடர்ந்தார்.'' அவள் என்மீது கோபித்துக் கொண்டு ஓடிவிட்டாள். இன்னும் ஆறே மாதங்களில் உங்கள் திருமணத்தை நான் நடத்தி வைக்கிறேன். அன்று உங்கள் வீட்டில் விருந்து வைத்தபோது நீங்கள் அவளிடம் காட்டிய பரிவும், பாசமும் என் கண்களுக்குத் தப்பவில்லை. நண்பரே. நீங்கள் இருவரும் பொருத்தமான ஜோடி என்று அன்றே முடிவு செய்து விட்டேன். உங்கள் பெற்றோரும் அவளிடம் ஈடுபாடு கொண்டதைக் கவனித்தேன். ஆனால் அந்தப் பைத்தியக்காரப் பெண்ணுக்குத் தன் மனம் தனக்கே தெரியவில்லை. என் பெண் பாப்பாவைப் பார்த்துப் பரிதாபப்பட்டு என் வீட்டில் விளக்கேற்ற முன்வந்தாள். என் மனைவி இடத்துக்கு வேறு யாரும் வர முடியாது. என் பாப்பா எனக்கு வாரிசாக என் குடும்பக் கீர்த்தியை ஒளிர வைக்க வேண்டும். அதற்கு இன்னொரு மனைவி தடையாக இருப்பாள். என் குடும்பம் இனிப் பெருகக் கூடாது. இசையும் பாப்பாவும்தான் என் குடும்பம். இதை வீணாவிடம் சொன்னேன். குமுறிக் குமுறி அழுதாள். அவளுக்கு எவ்வளவோ ஆறுதல் கூறினேன். 'அம்மா! உனக்கு என் மீது பிறந்த அன்பு இந்தக் குழந்தையின் திக்கற்ற நிலையைக் கண்டு கழிவிரக்கம் கொண்டு தோன்றியது. அது நீடிக்காது. கொஞ்ச நாட்களில் கைத்துவிடும். என்றும் பசுமையாக உன் அன்பைப் போற்றும் ஒருவன் இருக்கிறான். அவனை மணந்துகொள்' என்று உங்களைச் சிபாரிசு செய்தேன். அவளுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்திலும் கோபத்திலும் என்னைத் தாறுமாறாகப் பேசிவிட்டுப் போய்விட்டாள். ஊரையும் விட்டுப் போய் விட்டாளாம்! நீங்கள் வேதனைப்படாதீர்கள். அவள் என்னை விரும்பியதற்கு அர்த்தம் கிடையாது. ஏதோ ஒரு லட்சிய வெறி. ஆசிரியை அல்லவா? குழந்தைகளுக்குத் தியாக மனப்பான்மையைப் போதிப்பவள் தானும் ஏதாவது தியாகம் செய்ய வேண்டும் என்று தன் அன்பை இந்தக் குழந்தையிடம் தியாகம் செய்ய நினைத்திருக்கிறாள். அவ்வளவுதான்!''



''நேற்று இதை உன்னிடம் ஒப்படைத்தபோது 356 முடி இருந்தது. இப்ப இரண்டு குறைகிறதே! யார் எடுத்தது?''

வீணாவின் உள்ளக்கிடக்கையை அவர் அப்படியே படம் பிடித்துக் காட்டினார். வேறொருவராயிருந்தால் இப்படிக் காலடியில் விழுந்த சௌந்தரிய தேவதையை உதறித் தள்ளுவார்களா? வைணிகர் இசையின் மீதும், மறைந்த மனைவியின் மீதும் குழந்தையின் வருங்காலத்தின் மீதும் கொண்டிருந்த பற்றை என்னென்று சொல்வது?

வீணா ஊரை விட்டுப் போய் மூன்று மாதங்கள் இருக்கும். ஒரு நாள் வீணை வித்வான் முக மலர்ச்சியுடன் வீட்டுக்கு ஓடி வந்தார்.

''நான் என்ன சொன்னேன்? இதோ பாருங்கள். வீணா கடிதம் எழுதியிருக்கிறாள். புறப்படுங்கள். கல்யாணத்தை நிச்சயம் செய்யலாம்'' என்றார். கடிதத்தை வாங்கிப் படித்தேன்.

மதிப்பு மிக்க பேரன்புடையீர்,

என்னை மன்னித்து அருளுங்கள். மூன்று மாதங்களாகச் சிந்தித்தேன். உங்கள் வார்த்தைகள் மெய்யென உணர்ந்தேன். உங்கள் அன்புக் கட்டளைப்படியே உங்கள் ரஸிக நண்பருக்கு மாலையிடுகிறேன். நீங்களே எனக்கு எல்லாமாக இருந்து இல்லற வாழ்வில் அடியெடுத்து வைக்க உதவ வேண்டும். ஏனெனில் என் பெற்றோர்கள் இறையடி சேர்ந்து விட்டார்கள்....

தங்கள், வீணா.

வைணிகரின் ஆசியுடன் வீணாவைக் கரம் பிடித்தேன்.

எங்கள் திருமணம் சிறப்பாக நடந்தது. வீணை வித்வான் தமது பேரன்புக்கு அடையாளமாக அழகு மிகுந்த சிறியதொரு வெள்ளி வீணையைத் திருமணப் பரிசாக வழங்கினார். அது இன்றும் எங்கள் பூஜா கிருஹத்தை அலங்கரிக்கிறது.

எங்கள் மண வாழ்வில் ஒரு குறைவுமில்லை. வீணையும் நாதமுமாக வாழ்ந்தோம். கருணா பிறந்தாள். வாழ்வு மேலும் பரிமளித்தது. அவள் எங்கள் வாழ்வுக்கு மேலும் மணம் ஊட்டினாள்.

கருணா வளர்ந்தாள்; படித்தாள்; ஆடினாள், ஓடினாள். ஒரே ஒரு கலை மட்டும் அவளை அண்ட மறுத்தது. அதுதான் சங்கீதம். வாய்ப்பாட்டு சொல்லி வைத்தோம். வரவில்லை. வயலின் சொல்லி வைத்தோம். ஊஹூம்!

வீணையை எப்படியாவது புகட்டிவிடவேண்டும் என்று வீணாவுக்கு ஒரு வெறி பிறந்தது. அது ஓர் ஆவேசமாகமாறியது. ஒரு சபதத்தை நிறைவேற்றி வைக்க முற்படுபவள் போல் பெண்ணை முடுக்கினாள். தாயின் கட்டாயத்துக்குப் பயந்து கருணாவும் வாத்தியத்தை ஏனோ தானோ என்று கையாண்டு தராபுரா என்று வாசிக்கத் தொடங்கினாள். வீணாவுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. தன் பெண்ணை

மேடை ஏற்றும் நாளை வெகு விரைவில் எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள்.

நான் இந்த விவகாரத்தில் தலையிட்டுத் தாம்பத்தியச் சுருதியைக் கலைக்க விரும்பவில்லை. வருத்தமாயிருந்தாலும் கருணாவுக்குச் சங்கீதம் வராது என்று அன்றே முடிவு கட்டிவிட்டேன். வீணாவின் வீண் முயற்சிகளைப் பார்த்துப் பரிதாபப்படுவதுடன் நிறுத்திக்கொண்டேன். பாவம் வீணா, தன் பிடிவாதத்தை விடவில்லை. கச்சேரி பண்ணும் அளவுக்குக் கருணாவைத் தயார் செய்துவிட்டாள். இனி மேடை பிடிக்க வேண்டுமே! இசை மன்றக் காரியதரிசி, இரண்டு மூன்று உறுப்பினர்கள் ஆகியோரைக் கூப்பிட்டு, டிபன் காப்பி எல்லாம் கொடுத்து உபசரித்தாள். அவர்கள் முன்னிலையில் கருணாவை வாசித்துக் காட்டச் சொன்னாள். பாவம், தாயின் உற்சாகம் மகளிடம் ஒரு துளியாவது இருந்தால்தானே? வந்தவர்கள் முகம் வேப்பங்காய் தின்றவர்கள் போல் கசந்து வழிந்தது.

''இன்னும் கொஞ்ச நாட்கள் சாதகம் செய், அம்மா!'' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்கள்.

வீணா எரிமலையாக வெடித்தாள்.

''சீ! இசை மன்றமாம்! அன்னக்காவடிகள். வீணையும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம். முறித்துப் போடடி அதை!'' என்று வீணையை உடைத்தெறிந்தாள்.

அன்றிலிருந்து அவள் எந்தக் கச்சேரிக்கும் வருவதில்லை. எந்த சங்கீதத்தையும் கேட்பதில்லை. ஆனால் என்னை மட்டும் தடுக்க மாட்டாள். நான் சங்கீதத்தைப் பற்றிப் பேச்செடுத்தால் ஏடாகூடமாகப் பேசுவாள்.

கருணாவுக்குச் சங்கீதத்திலிருந்து விடுதலை கிடைத்ததில் பரம திருப்தி. அதற்கு மாற்றாக வீணாவின் கவனம், அவளைக் குழந்தைகுழந்தை என்று பரிவுகாட்டி உபசரிப்பதில் திரும்பியது. இந்தத் தாய்ன்பால் கருணா திணறித் திக்குமுக்காடிப் போனாள். எம். ஏ. படித்து நாலும் தெரிந்த பெண்ணை வீட்டில் எத்தனை நாட்கள் வைத்துக் கொள்வது? அவளுக்கு நல்ல வரனைத் தேடி மணம் செய்து வைத்தேன்.

கருணா போனபிறகாவது அவள் என்னுடன் கச்சேரிக்கு வருவாள் என்று நினைத்தேன்; மறுத்துவிட்டாள்.

''உங்களுக்குத்தான் சங்கீதம் சாப்பாடு. நீங்களேபோய் ரஸியுங்கள்'' என்று கூறினாள்.

''அன்று என்னவோ வைணிகரின் வாசிப்பை அப்படி ரசித்தாயே!''

''நான் வீணையையா ரசித்தேன்? அந்தச் சின்னஞ்சிறு குழந்தையல்லவா என் மனத்தை ஈர்த்தது? தாய்மை உணர்வல்லவா என்னை இழுத்தது. அந்த அறிவாளி என் மனத்தைப் படம் பிடித்து விட்டார். நீங்களோ நான் பெரிய ரஸிகை, உங்கள் லட்சியப் பெண் என்று ஏமாந்தீர்கள்.''

''நான் ஒன்றும் ஏமாறவில்லை. உன் அழகு என் லட்சியத்தைக் கைவிட வைத்தது. இசை எவ்வளவோ இடத்தில் கிடைக்கும். இந்த அழகும் குணமும் கிடைக்காதே என்றுதான் உன்னை நாடிப் பெற்றேன். உன்னோடு நடத்திய இத்தனை வருஷ வாழ்விலும் எனக்கு எந்தக் குறையும் கிடையாது வீணா. அந்த வைணிகர் நமக்குக் கொடுத்தாரே வெள்ளி வீணை, அதன் பொருள் என்ன தெரியுமா? அது நீதான் வீணா. அதை இசைக்க முடியுமா? ஆனால் பார்ப்பதற்கு எவ்வளவு அழகாக இருக்கிறது. அதுபோல் நீயும் அழகாய் இருக்கிறாய். உன்னை ரஸிக்கிறேன். போதுமே!'' என்று கூறி அவளை மேலே பேசவொட்டாமல் செய்தேன்.

மறுநாள் விருந்தினரை உபசரிக்க வீணா தயாரானாள். ''யார் வருகிறார்கள்? சொல்ல மாட்டீர்களா?'' என்று துளைத்து எடுத்தாள். நான் வாய் திறக்க மறுத்து விட்டேன்.

பத்து மணி அளவில் டாக்ஸி ஒன்று வந்து நின்றது. வயதான ஒருவரும், ஒரு பெண்ணும் வந்து இறங்கினார்கள். வீணா உள்ளே காரியமாக இருந்தாள். வந்தவர்களை உள்ளே அழைத்துச் சென்று அமரச் செய்தேன்.

''வீணா!''

''இதோ வருகிறேன்'' என்று ஈரக் கையை இடுப்பில் செருகியிருந்த துணியில் துடைத்துக் கொண்டே வந்தாள். அறையில் அமர்ந்திருந்தவர்களைப் பார்த்தாளோ இல்லையோ, அப்படியே விக்கித்து நின்றுவிட்டாள். ''நீங்களா?''

''நானேதான் வீணா. இருபத்து ஐந்து வருடங்கள் எங்கேயோ சுற்றிவிட்டு உன்னிடமே வந்து விட்டேன். உன் பாப்பாவைத் தெரியவில்லை. பாவம், மகமாயி அவள் கண்களை எடுத்துக் கொண்டு விட்டாள். ஆனால் என் லட்சியம் நிறைவேறிவிட்டது. அவளைப் போல் வீணை வாசிப்பவர்கள் இப்போது எவரும் இல்லை... வீணா! நீ அப்படியே இருக்கிறாய்... மாறவே இல்லை... நீ வெள்ளி வீணைதானம்மா!''

நான் நேற்றிரவு கேட்டது பாப்பாவின் கச்சேரிதான். வீணை வித்வான் கண் போன தன் பெண்ணுக்குத் துணையாக நாடு நகரமெல்லாம் சுற்றி வருகிறார். வீணாவிடம் அவர்களைத் திடீரென்று காட்டி வியப்பில் ஆழ்த்த முடிவு செய்தேன்.

வீணா பாப்பாவை அணைத்துக்கொண்டு கண்ணீர் வடித்தாள்.


''ஸார்! என் மகள் கருணா கணவன் வீட்டுக்குப் போய்விட்டாளே என்று ஏங்கிக் கொண்டிருந்தேன். ஆதி நாளில் மகளாக வரிக்கத் துடித்த பாப்பாவைத் தெய்வம் என்னிடம் கொண்டு வந்து சேர்த்து விட்டது. அவள் என்னிடமே இருக்கட்டும் ஸார்! அன்று உங்கள் பேச்சை நான் தட்டவில்லை. கண் இழந்த இந்தக் குழந்தைக்கு இனி நான் கண்ணாக இருந்து வழி காட்டுகிறேன் ஸார்.''

நானும் அதை ஆமோதித்தேன். ''நீங்களும் பாப்பாவும் இனி என் குடும்பத்தினர்'' என்று அவரை என்னுடன் இருக்கும்படி வற்புறுத்தினேன்.

வீணாவுக்குக் கருணா மீண்டும் கிடைத்து விட்டது போன்ற மகிழ்ச்சி. அன்று பாப்பாவை வளர்க்க ஆசைப்பட்ட தாய்மை உணர்வு அவள் நெஞ்சத்தில் இன்னும் மடியவில்லை.


நானும் வீணாவும் அன்றிரவு தனிமையில் இருக்கும்போது கேட்டேன்: ''வீணா, இந்த வீட்டில் வெகு நாளைக்குப் பிறகு வீணை ஒலித்ததே, எப்படி நீ பொறுத்துக் கொண்டாய்?''

''வெள்ளி வீணை நாதமொலிக்கும் மர வீணையாக மாறிவிட்டது'' என்று கூறி என் மார்பில் முகத்தைப் புதைத்து விம்மினாள்.


PORTLAND
CEMENT
ACC
நிலையான உறுதி
66-ஏ, ராஷ்ட்ரபதி ரோடு, செகந்திராபாத்.
எஸிஸி
தி அஸோஸியேடட் ஸிமெண்ட் கம்பெனீஸ் லிமிடெட்.
தி சிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆஃப் இந்தியா லிமிடெட்.


இவர்கள் அண்ணனும் தம்பியுமா? இல்லை, அப்பாவும் பிள்ளையும்!
உங்களைத் திகைக்கவைத்தது
கிரஸ்ட் பெர்மனண்ட ஹேர் டை
என்னும் முடிச் சாயமே.
CREST
Permanent
HAIR DYE
BLACK

எல்லாப் பத்திரிகைகளிலும் செய்திகள் நிறைந்திருக்கும். அதன் கூடவே விளம்பரங்களும் தோன்றும். ஆனால் 'லண்டன் வீக்லி அட்வர்டைஸர்' என்னும் பத்திரிகையில் முழுக்க முழுக்க இடம் பெற்றிருப்பவை விளம்பரங்கள் மட்டும்தாம்! இதைச் 'செய்தியற்ற செய்திப் பத்திரிகை' என்று வேடிக்கையாகக் குறிப்பிடுகிறார்கள்!



தகவல்: கேவியெம்

ஆதாரம்: டைம் அண்டு டைட்

டெலிவிஷன் வந்த பிறகு சினிமாவுக்கு இருந்த 'மவுசு' குறைந்துவிட்டது மேனாடுகளிலே. ஆகவே அமெரிக்காவில் பல இடங்களிலும், ''வாழ்வில் அதிக இன்பம் பெறுங்கள்; திரைப் படம் பார்க்கவெளியே செல்லுங்கள்'' என்ற வார்த்தைகள் எழுதப் பெற்றிருப்பதைக் காணலாம். திரைப் படப் பத்திரிகைகளும் இந்த மந்திரத்தைத் தவறாமல் ஓதிக்கொண்டிருக்கின்றன.

- பி. வி. ஹரி

அப்பா அம்மாவுக்கு ரகசியமாகக் கிறிஸ்துமஸ் பரிசு வாங்குவதற்காகக் குழந்தைகளுக்கு ஒரு ரகசியக் கடை அமெரிக்காவில் இருக்கிறது. பெரியவர்கள் உள்ளே அனுமதிப்பது கிடையாது. குழந்தைகள் தேர்ந்தெடுக்கும் பொருட்களை ஒரு பையில் போட்டு அழகாக 'பாக்' செய்து கொடுத்து விடுவார்கள். வெளியே காத்துக் கொண்டிருக்கும் பெற்றோர்கள் குழந்தைகளை அழைத்துப் போய் விடுவார்கள்.



- மிகலினஸ் வீக் - முத்து

***

இஸ்ரேல் நாட்டில் இருக்கும் யூதர்களின் தொகை 25 லட்சம். ஆனால் அமெரிக்காவில் 55 லட்சம் யூதர்களும் ரஷ்யாவில் 30 லட்சம் யூதர்களும் இருக்கிறார்கள். உலகத்தில் எந்தப் பாகத்தில் இருந்தாலும் சரி, யூதர்கள் இஸ்ரேல் நாட்டின் பிரஜைகளும் கூட என்று இஸ்ரேல் கருதுகிறது. ஆனால் பல யூதர்கள் இதை விரும்பவில்லை.




'டிட்பிட்ஸ்' - நாஜக்

பள்ளிக்கூட மாணவர்களுக்கு அவர்களுடைய வகுப்பு அறையிலேயே கார் ஓட்டக் கற்றுக் கொடுக்க முடியுமா?

முடியும் என்கிறது பாப்புலர் மெக்கானிக்ஸ் என்கிற பத்திரிகை.



வகுப்பு அறையில் ஒவ்வோர் ஆசனத்துக்கு முன்னாலும் ஸ்டீயரிங் வீல், பிரேக், க்ளட்ச், ஆக்ஸிலேட்டர், கியர் ஷிப்டு முதலானவை இருக்கின்றன. இவற்றையும் கற்றுக் கொடுப்பவரின் எதிரில் உள்ள மின்விசைச் சாதனத்தையும் கம்பிகள் இணைக்கின்றன. கற்றுக் கொடுப்பவர் தெருவின் நிலவரத்தைக் கூறி வரும் போது மாணவர்கள் அதற்கேற்ப வண்டி ஓட்டுகிறார்கள். தம் எதிரே உள்ள மின் சாதனத்தின் உதவியால் மாணவருடைய திறமையை அறியவும், தக்க சமயத்தில் திருத்தவும் உபாத்தியாயரால் முடிகிறது.



தகவல்: 'ரோஜினி'

கார்ன் ப்ராடக்ட்ஸ்
தேர்ந்தெடுத்த
பரிசு-பெற்ற
பக்குவ
முறை
★



திருமதி இலென் பிரவுன்


காபி கஸ்டர்டு

(அனுப்பியவர் : திருமதி இலென் பிரவுன்,
1, கெல்லி லேன், வேப்பேரி, சென்னை-7)

தயாரிக்க உதவுவது

பிரவுன் & போல்ஸன்

கஸ்டர்டு பவுடர்



பக்குவ முறை :

3 டேபிள்ஸ்பூன் (தலைதட்டிய அளவு) **பிரவுன் & போல்ஸன்** கஸ்டர்டு பவுடர்
½ லிட்டர் பால்
4 டேபிள்ஸ்பூன் சர்க்கரை
3 டீஸ்பூன் இன்ஸ்டென்ட் காபி பவுடர்
2 டேபிள்ஸ்பூன் இறுகிய பால் அல்லது பாலேடு
25 கிராம் வெண்ணெ

1. பிரவுன் & போல்ஸன் கஸ்டர்டு பவுடரை சிறிது பாலுடன் நன்கு கலந்துகொள்ளவும்.


2. இந்த பாலேடு போன்ற கலவையில் மிஞ்சிய பாலையும் விட்டு நன்றாகக் கரைக்கவும்.

3. அடுப்பில் வைத்து சூடாக்கி, கஸ்டர்டு கொதிக்கும் வரை. கிளறவும். 3 நிமிடங்கள் வரை கொதிக்க விடவும். பிறகு சர்க்கரை சேர்க்கவும்.

4. இன்ஸ்டென்ட் காப்பி பவுடரை இறுகிய பாலில் மென்மையாகும்படி கலக்கவும். அத்துடன் கஸ்டர்டு சேர்க்கவும். பிறகு நன்றாக கலக்கவும். வெண்ணெயைக் கூட்டவும்.

5. தனித்தனி கிண்ணங்களில் ஊற்றி குளிர வைக்கவும்.

மென்மையிலும் வளமையிலும் மேலானது **பிரவுன் & போல்ஸன்** கஸ்டர்டு பவுடர். எப்போதும் கைவசம் வைத்திருந்தீர்களானால், ஃபிரினி, ஐஸ் க்ரீம், ட்ரைபிள் போன்ற விதவிதமான பழத் தின்பண்டங்களையும் புட்டிங்குகளையும் எளிதில் தயாரிக்க உதவும். ஜெல்லி அல்லது பழ சாலாடுடனோ...தேன் கலந்த உலர் பழங்கள் மீது ஊற்றியோ சாப்பிட்டால் சுவையாக இருக்கும். அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்தோடு பக்குவப்படுத்தப்பட்டதால், கஸ்டர்டு பவுடர்களிலேயே மிகச் சிறந்தது **பிரவுன் & போல்ஸன்.**



முட்டை கலவாதது

இலவசம்! புதிய பக்குவ முறை நூல் நெ. 3. இன்றே ஒரு பிரதிக்கு எழுதுங்கள். தயவு செய்து எனக்கு ஒரு பக்குவ முறை செட்டை ஆங்கிலம் / இந்தி / வங்காளி / தமிழ்/தெலுங்கு/மலையாளம்/ குஜராத்தி/ மராத்தி/ கன்னட மொழியில் இலவசமாக அனுப்ப வேண்டுகிறேன்.

பெயர் ....

முகவரி ....

இக் கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்புக : பப்ளிஸிடி டிபார்ட்மென்ட்,
கார்ன் ப்ராடக்ட்ஸ் கம்பெனி (இந்தியா) பிரை. லிட்.
ஸ்ரீநிவாஸ் ஹவுஸ், வாட்பி ரோடு, பம்பாய்-1. (பி.ஆர்). K-3

இதுபோல் இன்னும் பலவகையான தின்பண்டங்களைத் தயார் செய்து உங்கள் குடும்பத்தினரை மகிழ்விக்கலாம். பின்வரும் இதழ்களைக் கவனித்து வாருங்கள்

கார்ன் பிராடக்ட்ஸ் கோ.(இந்தியா) பிரைவேட் லிட்.

ஸ்ரீநிவாஸ் ஹவுஸ், வாட்பி ரோடு, பம்பாய்—1. (பி ஆர்).

மொத்த விற்பனை ஏஜெண்டுகள்: பாரி & கம்பெனி, டேர் ஹவுஸ், சென்னை-1, மற்றும் அவர்களது கிளைகள்.

"போட்டோ எடுக்கப் போறளாம்... சாயங்காலம் அவள் தயாராக இருக்கணுமாம்!"

பிள்ளைகள் இருவரும் வந்து சொல்லி விட்டுப் போனார்கள்.

அவளுக்குச் சிரிப்பு வருகிறது; சிந்தனை எங்கோ செல்கிறது.

"கோமு! நீயும் நானுமாச் சேர்ந்து ஒரு போட்டோ புடிச்சுக்கலாம் வரியா?"

ராமநாதனின் ஆசை பொங்கும் குரல் மெல்ல அவள் காதருகே ஒலிக்கிறது.

"ஊஹூம்! நான் மாட்டேன்!"

"ஏன் கோமு?"

"......"

"சொல்ல மாட்டியா...?"

"......"

"சொல்லாட்டா விடமாட்டேன்!..."

அவள் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்கிறான் அவன்.

"கையை விடுங்கோ!.... அப்போதான் சொல்லுவேன்!" சிறு குழந்தையைப் போல் சிணுங்குகிறாள் அவள்.

"சரி, சொல்லு!..."

கரமலர்களை விட்டுவிட்டு, முகமலரையே ஆர்வத்துடன் நோக்குகிறான் அவன்.

"நேக்கு...நேக்கு..வெட்கமா யிருக்கு!"—

ஹூம்! அந்தக் கன்றுவியை யெல்லாம் காதால் கேட்பதும், கண்ணால் காண்பதும் போதாதா? இன்னும் வாயாலே வேறே சொல்லணுமா?... ஐயே...

அப்புறம் அவனுக்குப் போட்டோ எடுத்துக்கொள்ளும் ஆசையேதான் போய்விட்டதோ அல்லது அவள் மேல்தான் கோபமோ, அவளை அவன் அதற்காகக் கூப்பிடவேயில்லை.

இப்போது நினைச்சுப் பார்த்தால் அவளுக்கு அழுகை குமுறிண்டு வர்றது; வேதனை அரிச்சு எடுக்கிறது.

கட்டுக் குடுமியும், கடுக்கனுமாய், சரிகை வேட்டி பளிச்சிட, சட்டை மேல் அங்கவஸ்திரம் விசிறி மடிப்பாய் மார்பிலும் தோளிலும் புரள அவரும்...

தாயும் தாய்நாடும்



சட்டெனக் கண்களைப் பொத்திக்கொண்டு விரல் இடுக்குகள் வழியே அவனைப் பார்க்கிறாள், அவள்.

கலகலவென்ற சிரிப்புடன் அவள் பட்டுக் கன்னத்தைச் செல்லமாகத் தட்டுகிறான், அவன். "அசடு... எங்க கூட வந்து நிக்க வெட்கமா?... அசடு..." உண்மைதான். அசடாக இருந்ததால்தான், அப்போது அந்த வாய்ப்பைக் 'கோட்டை' விட்டுவிட்டாள், அவள்!

அதற்கப்புறமும் அவன் எத்தனையோ முறை அவளைக் கேட்டிருக்கிறான். அவளுக்கு ஏனோ துணிவு வரவில்லை.

"நன்னாயிருக்கு! புருஷனும் பெண்டாட்டியும் சேர்ந்து போட்டோ புடிச்சுண்டா நாலு பேர் நாலு சொல்ல மாட்டாளோ?"

இது அந்த நாளில் அவளுடைய பயம்.

அன்றைக்கு அவள் சொன்ன பதிலை நினைக்கையில் இன்றைக்கு அவளுக்குச் சிரிப்புத்தான் வருகிறது.

"...புருஷனும் பெண்டாட்டியுமாச் சேர்ந்து போட்டோ புடிச்சுண்டா நாலு பேர் நாலு சொல்வாளே" என்று பயந்த காலம் போய் இப்போது பெண்கள்...

இந்தக் கலிகாலத்திலே என்னவெல்லாம் நடக்கின்றன!

அருகே—

மடிசார் வைச்சுக் கட்டிய புடவையில் ஒட்டியாணம் பளிச்சிட, பட்டு ரவிக்கையில் மின்னும் நாகவொத்துடன், மூக்கு நத்தும் புல்லாக்குமாய் முகத்துக்கே அழகு தரும் குங்குமப் பொட்டுடன் நிகழ்ந்த அவளும்...

போட்டோ புடிச்சிண்டிருந்தால் நன்னாத்தான் இருந்திருக்கும்.

ஏன் நன்னாயிருக்காது?

பார்க்கப் போனால் இந்தக் காலத்திலே, இடிச்சுண்டு நிக்கறதுகளே அரைக்கை ரவிக்கையும், கரையில்லாத புடவையுமா...

இதைவிட அது நன்னாத்தான் இருக்கும்.

ஆனால்...

அந்த வாய்ப்பைத்தான் அவள் இழந்துவிட்டாளே! மணலில் சிந்திய பாலாக மறைந்துவிட்ட வாழ்க்கையில் அந்தப் பாக்கியம் இனி அவளுக்கு ஏது?

கோமுவின் நெஞ்சைப் பெருமூச்சு உழுகிறது. ஹூம்!...இப்போது...இந்தக் கோலத்தில் அவளுக்குப் போட்டோ வேறு வேணுமா?

அவளுக்கு வேண்டாம்!... ஆனால் அவளுடைய பிள்ளைகளுக்கு வேண்டுமாம். அதுவும் ஆளுக்கு ஒண்ணு வேணுமாம்!

அவள் வேண்டாம் .... அவளுடைய போட்டோ வேணும்;

எப்படி இருக்கு கதை?

ஆமாம். போட்டோவை இரண்டாக்கலாம். அவள்? அவள் ஒன்றுதானே?

ஆம் — அவள் என்றைக்கும் ஒன்றுதான். இருவரும் அவள் கண்கள்தாம்.... இரண்டு கண்களில் எது உயர்ந்தது?

இனி, அப்படி அவளை அவர்கள் இருக்க விடுவார்களா?

''இங்கே வா... அங்கே இரு...'' என்று சுவரில் அடித்த பந்தாக இழுத்து அடிப்பார்கள் போலிருக்கே!

அதற்கெல்லாம் அவள் இடம் தரப் போவதில்லை. அவர்கள் தம் விருப்பப்படி ஆட்டுவிப்பதற்கு அவள் ஒன்றும் அசேதனப் பொருளில்லை.

அவள் கையிலும் 'நாலு காசு' இருக்கிறது. காசியோ, ராமேசுவரமோ, கன்யாகுமரியோ



ஊர் ஊராகச் சுற்றிக் கொண்டு, போகிற வழிக்குப் புண்ணியம் தேடிக் கொண்டு, 'கிருஷ்ணா ராமா' என்று கிடந்துவிட்டுப் போகிறாள்!

நல்ல வேளையாக அவளுக்கென்று காசு, பணம் வைத்துப் போனாரே, அவர்!

பணம்!

அதுதான் மனுஷாளை என்ன பாடு படுத்துகிறது? அது நம்மோட தேவைகளைப் பூர்த்தி செய்வதாக நினைப்பது பைத்தியக்காரத்தனம். அது நம்மோட தேவைகளைப் பெருக்கவே செய்கிறது!

இல்லாவிடில் எவரோ தேடிய சொத்துக்களுக்கு எவரோ அடித்துக் கொள்வார்களா? ஆம். பாட்டன், அப்பன் தேடி வைச்ச சொத்துக்குப் பேரப் பிள்ளைகள் காரசாரமாய் அடித்துக் கொள்கிறார்கள்! அதுமட்டுமா? தாயைக்கூடப் பேரம் பேச முனைந்து விடுகிறார்கள். ''நீ ஆறு மாசம் வைத்துக் கொள்... என்னிடம் ஆறு மாசம் இருக்கட்டும்'' என்று!

ஆ! அந்த நிலை அவளுக்கு வரக்கூடாது! அப்படி வரும்படி அவள் விடமாட்டாள்!

நாளைக்கே புறப்பட்டு விடவேண்டும்!... இனிமே நாலு நாள் தாமதித்தாலும் கூடப் 'பங்கீட்டுக்கு' அவளும் ஆளாக நேரிடலாம்!

ஆம்! உன்னை பாகப் பிரிவினைதான் நடந்து கொண்டிருந்தது!

ஐயிரு திங்கள் சுமந்து அங்கமெல்லாம் நொந்தது போதாதென்று, அவள் பெற்றெடுத்த செல்வங்கள் இருவரும் இப்போது அவள் கண் எதிரிலேயே, ''எனக்கு அது வேண்டும்; உனக்கு இவ்வளவுதான்!....'' என்று அடித்துக் கொண்டு, அவளுடைய 'அக'த்தையும் நோகச் செய்து கொண்டிருக்கிறார்கள்!

அவர்களுடைய சிறு வயதிலே... அவளுடைய நினைவு முழுக்கிலிருந்து ஒரு சம்பவம் மேடு எடுத்துக் கொண்டு எழுகிறது.

ஒரு நாள்....

அப்பாவுடன் அவர் நண்பர் ஒருவருடைய வீட்டுக்குச் சென்றிருந்த சந்தருக்கு அவர்கள் வீட்டில் ஏதோ இனிப்புப் பண்டம் கொடுத்திருந்தார்கள். அவர்கள் எவ்வளவோ கட்டாயப்படுத்தியும் அவன் அதனை அங்கே சாப்பிடவில்லை. 'அண்ணாவுக்கு' என்று பத்திரப்படுத்தி, அதைச் சட்டைப் பையில் வைத்துக் கொண்டு விட்டானும்!

''உன் அண்ணாவுக்கு வேறே தரேண்டா அம்பி!...'' என்று நண்பருடைய மனைவி வேறே ஒன்று கொடுத்ததைக்கூட ஏற்காமல், தன் பங்கையே பத்திரமாய்க் கொண்டு வந்து சேகருடன் சேர்ந்து சாப்பிட்ட பின்தான் திருப்தியடைந்தான்!

குழந்தை சந்தருடைய சகோதர பாசத்தையும், பண்பையும், நண்பர் வீட்டார் பாராட்டி வியந்து பேசாத நாளேயில்லை.

சேகர் மட்டும் என்ன?... தனக்கு ஒரு மிட்டாய் கிடைத்தால் கூட அதை அப்படியே கொண்டு வந்து சந்தருக்குக் கொடுத்து விட்டு அவன் தந்ததைத்தான் தான் தின்பான்.

அப்படிப்பட்டவர்கள்தாம் இன்று... ஊர் கூடி மத்தியஸ்தம் செய்யும்படி, ஏன்—ஊரே சிரிக்கும்படி — அவர்கள் தத்தம் சுய உழைப்பால் தேடாத சொத்துக்களுக்கு உரிமையுடன் சண்டை போடுகிறார்கள்!

நிலம் நீச்சு, வீடு வாசல், நகை நட்டு, பாத்திரம் பண்டம் — ஏன் — மரம் மட்டை எல்லாவற்றையும் பிரித்தாயிற்று! பெரியவ

னுடைய பக்கத்தில் மாமரம் சேர்ந்துவிட்ட தாம்! சின்னவனுக்குக் கோபம், ஆதங்கம்.

''...என்ன செய்யறது? 'மரம் இங்கே, மலர்... காய் அங்கே' என்று செய்ய இப்போ புராணக் கண்ணன் எங்கேயும் இல்லையே? உனக்குச் சாமர்த்தியம் இருந்தால் மந்திரத் தாலே மாங்காயை விழ வைச்சுக்கோ!...''— பெரியவன் எகத்தாளமாக இரைந்துகொண் டிருக்கிறான். கூடியிருந்த கூட்டம் 'கொல்' லென்று சிரிப்பொலி எழுப்புகிறது.

அவள் நெஞ்சில் வேதனை கடைகிறது. அழியும் செல்வங்களுக்கு மதிப்பளித்து, அம ரத்துவம் கொண்ட அன்பை அழித்துக் கொள் கிறார்களே!... பைத்தியக்காரர்கள்!

ஏன்தான் அவள் கணவரும் மூதாதைய ரும் செல்வத்தைத் தேடி வைத்தார்களோ? அதனால்தானே அவர்களுடைய 'செல்வங்க' ளிடையே பாசமும் நேசமும் 'செல்வோம், செல்வோம்' என விடைபெற்றுக்கொண்டிருக் கின்றன!... கஞ்சியிலே இன்பம் காணும் நிலை யில் வைத்திருந்தால் கொஞ்சமும் சஞ்சலத் துக்கும் சச்சரவுக்கும் இடமிராது அல்லவா?

உள்ளே நடப்பது ஒவ்வொன்றையும் கண்டு அவள் உள்ளம் ஊமையாய் அழுகிறது.

''பாட்டி!... இந்த உம்மாச்சி படத்தை நேக்குத் தா பாட்டி...''

தளர் நடை நடந்து மழலை பேசியபடி அவள் பூஜை செய்யும் அம்மன் படத்தைக் கேட்கிறாள் பேத்தி — சேகரின் மகள்.

''வைச்சுக்கோயேன்!...''

''சித்தப்பா கேக்கறா பாட்டி!...''

பிஞ்சு மனத்திலும் பிரிவினையைப் புகுத்தி, பாட்டியிடம் சிபாரிசுக்கு வேறே அனுப்பி யிருக்கிறார்கள்!

''...சித்தப்பா பாவம் இல்லியா? அவ னுக்கு இதைக் கொடுப்பமா?''

குழந்தை ஒரு விநாடி சிந்திக்கிறது. தன் னுடைய சிற்றப்பனை நோக்கிச் சில விநாடிகள் பார்வையைச் செலுத்துகிறது. மறு விநாடி, ''சரி பாட்டி!... சித்தப்பாக்கே தந்துடறேன்....'' என்று உள்ளே ஓடுகிறது.

அவளுக்கு உடலெங்கும் வியர்வை பொடிக் கிறது. கண் எதிரே, பிரத்தியட்ச தெய்வங்க ளாய் உலவிடும் கள்ளமறியாக்குழந்தைகள்...

உள்ளத்தையே அவர்களுக்காகக் கொடுத்து உயர் நிலைக்குக் கொண்டு வந்த பெற்ற தாயார்...

ஆனால்...

அவள் பூசித்து வந்த படத்துக்கும் பிரி வினை... இதுதான் உலகமோ?

ஒருவழியாக 'எல்லாம்' முடிந்துவிட்டது போலும், ஊர்க்காரர்கள் திரும்பிப் போகி றார்கள்; அவளிடமும் விடை பெற்றுப் போகி றார்கள்; மௌனமாய்த் தலையசைத்து விடை கொடுத்து அவர்களை அனுப்பி வைத்த அவ ளுடைய அருகில் இரு பிள்ளைகளும் வந்து அமருகிறார்கள்.

''என்ன சந்தர்?... எல்லாம் முடிஞ்சுதா?''

''ஆச்சு, அம்மா!...''

''ஏண்டா சேகர்? ஞாபகமா எல்லாத்தை யும் பிரிச்சுண்டுட்டேளா?...''

''ஓ....!''

''ஒண்ணையும் மறக்கலையே?...''

''இல்லேம்மா!....''

''நன்னா யோசனை பண்ணிப் பார்த்தேளா, ரெண்டு பேரும்?...''

சில விநாடிகள் அண்ணனும் தம்பியும் அரைக் கண் மூடிச் சிந்திக்கிறார்கள்.

''ஏதாவது விட்டுப் போயிருக்குமோ?....''

''அநேகமா எல்லாம் பங்கிட்டாச்சு. அப் படி ஏதாவது விட்டுப் போயிருந்தா எங்கே ஓடிப் போயிடப் போறது?''

அவள் பெருமூச்செறிகிறாள். அவர்களை- விட்டு ஓட (ஓட்ட) நினைக்கும் அவளைப் பற்றி இனி ஏன் நினைக்கப் போகிறார்கள்?

''முக்கியமான ஒண்ணை மறந்துட்டே ளேடா ரெண்டு பேரும்...'' என்று அவர்களை நோக்கிக் கூறியவள், ''ஆனா அதை யாருக் குன்னு கொடுக்கிறது?'' என்று தனக்குத் தானே கூறிக்கொண்டு பெருமூச்செறிகிறாள். அவள் உடலெங்கும் வியர்வை பொடிக்க உள்ளிருந்து பொங்கிய துயரம் தொண் டையை அடைக்கிறது.

தாயை நேருக்கு நேர் சந்திக்க முடியாமல் தனயன்கள் இருவரும் எழுகிறார்கள். ஒரு கணம் இவர்கள் பார்வையும் பட்சமாய், அவள் மீது படிகின்றன. மறுகணம் மௌன மாய் அங்கிருந்து நழுவுகிறார்கள்.

திக்பிரமை பிடித்தவள்போல் செயலற்று அமர்ந்திருக்கிறாள் அவள்.

எப்படியோ போகிறார்கள்! இனி அவளும் ஆசாபாசங்களை உதறிவிட வேண்டியதுதான்.

'மடிசஞ்சி'யை உதறிக்கொண்டு, மனத்தில் ஒருவித வைராக்கியத்தை வரவழைத்துக் கொண்டு மெல்ல எழுந்த அவளுடைய கால் களைக் கட்டிக் கொள்கிறாள் உள்ளே யிருந்து ஓடிவந்த பேரக் குழந்தை.

''பாட்டி....பாட்டி!''

செப்பு இதழ்கள் துடிதுடிக்க, குழந்தையின் விழியோரங்களில் நீர்மணிகள் சரம் கோக் கின்றன.

''என்னடா, ராஜா!...''

''சித்தப்பாவும் அப்பாவும் இனிமேல் தனித் தனியா இருக்கப் போறாளாம்... நீ யார்கிட்ட இருப்பே பாட்டி?... நீ எங்கே இருப்பே?... அங்கேதான் நானும் இருப்பேன்!...''

குழந்தையின் பிரச்னைக்கு — இல்லை, இல்லை, அவள் வாழ்வுப் பிரச்னைக்கு — உத்தரம் சொல்லத் தடுமாறியபடி, உடல் நடுங்க நின் றிருக்கும் அவளிடம் கூறுவது போல், உள்ளே யிருந்து வந்த சேகர் சொல்கிறான் குழந்தை யிடம்.

''பாட்டி... யார்கிட்டேயும் இருக்கப் போறது இல்லே!...''

ஓ! அவளுடைய திட்டத்தைக் கூட இவர்கள் புரிந்து கொண்டு விட்டார்களா! பொல்லாதவர்கள்.

''என்னடா சொல்றே?....''

''உன் திட்டம் எங்களுக்குப் புரிஞ்சு போச்சு!...ஆனா அதுக்கு நான் அனுமதிக்க மாட்டேன்...''

''ஏண்டா?....''

''ஆமாம்... நேத்தி ராத்திரி முழுதும் நீ தூங்காம தவிச்சதை...''

சேகர் கூறுகையிலேயே சந்தரும் வந்து அவ னுடன் சேர்ந்து கொள்ளுகிறான்.

''.....இனிமே ஒவ்வொரு ராத்திரியும் அப்படித் தவிக்கப் போகிறதை...''

பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு

பிரைவேட் லிமிடெட்

(ஸ்தாபிதம்: 1947)

"வீணு விகார்" — 17-A, :பிளாங் ரோடு,

ஷண்முகானந்தா ஹாலுக்கு அடுத்தது

சயான் (கிழக்கு) பம்பாய்-22, D. D.

டெலிபோன்: 471455

தபால் பெட்டி 6759 : : தந்தி: "GROWRICH"

உன்னத சேவையில் 25-வது ஆண்டு ஆரம்பம்

எங்கள் சந்தாதாரர்கள் அனைவருக்கும் புது வருட வாழ்த்துக்கள்!

ஏலம் கேட்ட பிறகு டிவிடெண்டு அடையும் வசதியுள்ள கீழ்க்கண்ட

1971 ஜனவரி புதிய குருப்புகள்

குறுகிய காலம்: 25 மாதங்கள்			நீண்ட காலம்: 40 மாதங்கள்		
சேருவதற்கு கடைசி தேதி: 9-1-1971			சேருவதற்கு கடைசி தேதி: 30-1-1971		
முதல் ஏலத் தேதி: 10-1-1971			முதல் ஏலத் தேதி: 31-1-1971		
வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
	ரூ.	ரூ.		ரூ.	ரூ.
B	100/-	2,500/-	E	500/-	20,000/-
C	50/-	1,250/-	F	250/-	10,000/-
F	25/-	625/-	G	125/-	5,000/-
G	20/-	500/-			

நீண்ட காலம்; 50 மாதங்கள் — ஏலம் எடுக்காத சீட்டுதாரர்களுக்கு மட்டும் டிவிடெண்டு உண்டு

வகுப்பு	தவணை ரூ.	சீட்டுத் தொகை ரூ.
LTA	100/-	5,000/-
LTB	50/-	2,500/-
LTD	20/-	1,000/-

வேலை நேரம்: காலை 8 மணி முதல் 10-30 வரை :: மாலை 4 மணி முதல் 7-30 வரை

வார விடுமுறை: திங்கட்கிழமை

தலைமை அலுவலகம் & பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:

"பாலுஸேரி பில்டிங்ஸ்"

3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, தபால் பெட்டி: 414, சென்னை-5

கிளைகள்: பெங்களூர் - கல்கத்தா - புது டெல்லி

இலவச பிரகடனத்திற்கு எழுதுங்கள்

சீட்டுகள் ஒதுக்குதல் கம்பெனியின் உரிமையைப் பொறுத்தது

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை

VSN—BBC - KALKI 1000-'71



heros'-BE-59 TAM

''நாங்க சகிச்சுண்டு இருக்க முடியாது!... நீ எங்களோட இருக்கப் போறதில்லே..... நாங்கதான் எப்போதும் போல் உன்னோடயே இருக்கப் போறோம்...''

அவள் வியப்பும் மகிழ்வுமாய் மைந்தர்களை நோக்குகிறாள்.

''எங்களை மன்னிச்சுடும்மா!... உன்னுடைய உணர்ச்சிகளை மதிக்காம, அற்பப் பொருளுக்கு ஆசைப்பட்டு அடிச்சுண்டு பிரிவினை செய்ய...''

இருவரும் ஏதேதோ பேசியபடி குரல் தழுதழுக்க அவள் பாதங்களைப் பற்றிக் கொள்கிறார்கள். தன் காலில் விழப்போன இரு 'கண்களை'யும் கைகளால் தழுவிக் கொள்கிறாள் அவள்.

ஆம்! அவள் 'கண்களு'க்கு ஏற்பட்டிருந்த 'காமாலை'யைத்தான் அன்பு என்னும் ஔடதம் போக்கி விட்டதே!

அடுத்த நாள்...

''அம்மா! போட்டோவுக்கு தயாராயிட்டியா?'' என்றவாறே சேகரும், ''சீக்கிரம் கிளம்பு அம்மா!... டேய் பாலு! பாட்டிக்கு மூக்குக் கண்ணாடியும், விபூதியும் கொண்டுவந்து கொடுடா...'' என்றபடியே சந்தரும் வந்ததும் அவள் திகைத்துத் திடுக்கிடுகின்றாள்.

வேதாளங்கள் மறுபடியும் முருங்கையில் ஏறி விட்டனவா என்ன?...

விபூதிச் சம்புடத்துடன் சிறுவன் ஓடி வந்ததும், ''இப்போ நாம் எல்லோருமாச் சேர்ந்து ஒரே குடும்பமாப் போட்டோ புடிச்சுக்கப் புறப்படறோம்.... சரிதானேம்மா?'' என்கிறான் சேகர்.


அவள் மேனி விதிர்க்கிறது.

'இந்தக் கோலத்தில் போட்டோ ஒரு கேடா?' என்று அவள் இப்போது அலுத்துக் கொள்ளவில்லை. இந்த வாய்ப்பை இழந்து விட இப்போது அவளுடைய செல்வங்களும் அசடு அல்ல!



காரிகைக் கெட்டாக் கவிதையின் வடிவாய்த்
தாரகை ஒன்று தரணியைப் புதிதாய்க்
காணவே விழைந்து கணக்கிலா ஆண்டுகள்
வானமாம் வெளிதனில் பயணமாய் வந்து
மணியொளிக் கரங்களால் வையகம் தழுவி
உணர்விழந் இன்பமாம் ஊற்றினில் திளைத்து.
''காதலி, உன்றனைக் கண்ணுறப் பலயுகம்
சோதனை யனைத்தையும் துடைத்தே வந்துளேன்''
என்றதும் உலகம் இளகிக் குழைந்து
தென்றலில் சிலிர்க்கும் மலரென நின்றது—
சொல்லடங் காததோர் சுகமதை பெற்று
மெல்லவே ஆடின வானமாம் வீதியில்,
நள்ளிர வதனில் நடந்த இவ் விந்தையைத்
தெள்ளிய உணர்வுடைப் புள்ளினம் கண்டன
ஆண்டுகள் பலவாய் அவ்வொளிக் கைகளும்
நீண்டே உலகினைத் தழுவிட நினைந்தே
வருவதைப் போலவே பருவமாம் மாரியில்
பறவையின் இனங்கள் தொலைநெடும் பயணம்
நாடுகள் மலைகள் நலமுடன் கடந்து
ஏடுகள் பயிற்றிடா இனிய நற் பண்புடன்
ஒலிபல மிழற்றி ஒங்குநல் லன்பினால்
வலசையாய் வந்து வேடந் தங்கலில்
வாழ்ந்திடும் திரும்பிடும் — மானிடன் அறிந்துப்
தாழ்வுறும் பலப்பல தருக்கமே பேசிப்
பேதலித் துலகினைப் பிரிவுகள் செய்தே
வாதனைப் படுவான் தானே வளர்ச்சியின்
சிகரமென் றறைவான் சிறுநெறி உழல்வான்
அகம்விரி வடையான் ஆஹா மானுடம்!

— பெ. தூரன்



பத்து வயதுச் சிறுமிதான்; ஆனாலும் வயதுக்கு மீறின புத்தியும் மான அவமான உணர்ச்சியும் இருந்தன. அதனால் அவளுக்கு மனத் துன்பம் அதிகமாகி விட்டது; எப்போது பார்த்தாலும் யோசனையில் மூழ்கி இருப்பாள்.

அந்தச் சிறுமியின் பெயர் தாரா.

அவளுடைய தந்தை சூரசேனர்; ஒரு காலத்தில் ஒரு பெரிய ராச்சியத்தின் மன்னராக விளங்கினார். டோங்க் ஆறு தொடங்கிப் பநாஸ் ஆற்றங்கரை வரை உள்ள பரந்த பிரதேசம் அவருடைய ஆளுகையின் கீழ் இருந்தது.

தில்லி பாதுஷா அந்த ராச்சியத்தை வலுவில் தாக்கினான். நாட்டின் பெரும் பகுதியைக் கவர்ந்து கொண்டான்.

ஆப்கானிஸ்தானத்து லீலா படையெடுத்தான்; டோங்க் பகுதியைப் பறித்துக் கொண்டான்.

நாடு சுருங்கி விட்டது. மூதாதையர் விட்டுச் சென்ற ஆஸ்தியைச் சூரசேனரால் காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை. அவருக்கு வீரம் இல்லை என்பது காரணமல்ல; கொள்ளைக்காரர்களைப் போல் திடீரென்று தாக்குவதும், வெள்ளமாய்ப் படை கொண்டு வருவதுமாய் இருந்த பகைவர்களோடு எவ்வளவு காலம்தான் போராட முடியும்?

சூரசேனருக்கு இதே கவலை. எஞ்சியிருந்த நாட்டை மிகவும் திறமையாக அவர் ஆண்டு வந்தார்; மக்களின் நலனுக்காகப் பல நல்ல காரியங்களைச் செய்தார்; நாட்டில் வளமை இருந்தது. ஆயினும் அவருக்குத் தோல்வியின் அவமானம் எந்த நேரமும் உறுத்திக் கொண்டே இருந்தது. இந்த அவமான உணர்ச்சி அவரைச் சின்னவனாக்கி விட்டது. இப்போது பிஜநௌர் மட்டும் அவருடைய ஆட்சியில் இருந்தது. அங்கு அரண்மனைக்குள்ளேயே தம்மை அடைத்துக் கொண்டு விசனத்துக்கு இரை போட்டுக் கொண்டிருந்தார்.

தந்தையாரின் துயரம்தான் பெண்ணையும் தொத்திக் கொண்டது. தங்கள் குலத்துக்கே பெரிய இழிவு ஏற்பட்டு விட்டதாய் அவளுக்குத் தோன்றியது. தன் வயதுச் சிறுமிகளுடன் கூடி அவள் விளையாடுவதில்லை; நகைகளிலும் நாட்டமில்லை. பகைவனை வெல்ல முடியாது என்று சூரசேனர் சோர்ந்து விட்டார். ஆனால் மகளோ ஆப்கானியரைப் பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்று உறுதியாக இருந்தாள்.

அவள் ஆண்களைப் போல் உடுத்தாள். ஆயுதப் பயிற்சி பெற்றாள். மல்யுத்தம் பயின்றாள். குதிரைச் சவாரி செய்தாள். எவ்வளவு முரட்டுப் புரவியாக இருந்தாலும் அவளால் அடக்க முடியும். ஓடும் பரி மீது இருந்தவாறே கணை எய்யவும், வேல் எறியவும், வாள் வீசவும் வல்லமை பெற்றாள். யானை ஏற்றத்தையும் அவள் விட்டு வைக்கவில்லை. அந்தப் பெரிய விலங்கைப் போரில் மிக ஜாக்கிரதையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அவளுக்குத் தெரியும்.

ஆயுதப் பயிற்சியைத் தவிர படை நடத்திச் செல்லும் வித்தையையும் அவள் மிகவும் கவனமாகப் பயின்றாள்.

ஒரு க்ஷத்திரியப்பெண் தெரிந்துகொள்ள வேண்டியவற்றை யெல்லாம் அவள் கற்றுக் கொண்டாள். எட்டுப் படிப்பில் அவளுக்கு நாட்டம் இல்லை. ஆனால் ஒரு பெண்ணுக்குத் தேவையான கடமை உணர்ச்சியும், ஒழுக்க உணர்ச்சியும் அவளுக்கு இருந்தன.

இந்தப் பயிற்சிகளால் பெண்மையின் வனப்பும், ஆண்மையின் கம்பீரமும் திகழ அவள் கவர்ச்சிகரமான கன்னிகையாக வளர்ந்து கொண்டிருந்தாள். நல்ல உயரமும், உயரத்துக்கேற்ற உடல் கட்டுமாக விளங்கினாள். கரும் பட்டுப் போல் மின்னிய அளகபாரம் முதுகின் தண்டு வழியாக முழங்கால் வரை இறங்கி அவளுடையபின் அழகை எடுப்பாகக் காட்டியது. உடல் வலிமை மிக்கவளே என்றாலும் அவள் பூமி அதிர நடப்பதில்லை. தன் கனத்தைத் தன்னுள் அடக்கிக் கொண்டவள் போல் மென்மையாகவும், பெண் புரவிபோல்கம்பீரமாகவும் அவள் அடி வைத்து நடக்கும் அழகைப் பார்த்துப் பல இளவரசர்கள் அவளிடம் மனத்தைப் பறி கொடுத்தார்கள். அவளுடைய கண்களில் பெண்மையின் வேட்கையும் ஏக்கமும் இருந்தன. ஆனால்



'நெருங்காதே, அபாயம்!' என்ற எச்சரிக்கையும் இருந்தது. ஆகையால் இளைஞர்கள் அவளை ஏறெடுத்துப் பார்க்கவும் அஞ்சினார்கள்.

தாராவுக்கு வயது பதினேந்து. ஒருவனை மணந்து இல்லறம் நுகர வேண்டிய பருவம். பல நாட்டு இளம் அரசர்களும், இளவரசர்களும் அவளுடைய கரம் பற்றும் வாய்ப்பைப் பெற முயன்றார்கள். சூரசேனருக்கு மணவினை வேண்டி ஓலைக்கு மேல் ஓலைகள் வந்தன.

பெற்றோருக்கும் பெண்ணை விரைவில் மணமகள் ஆக்கிவிட வேண்டும் என்று கவலை தானே? சில நல்ல வரன்கள் வந்தபோது சூரசேனர் கல்யாணம் நடத்திவிடலாம் என்று எண்ணினார். ஆனால் தாரா இணங்கவில்லை.

''நான் திருமணம் செய்து கொள்ள மறுக்கவில்லை. ஆனால் நம் குலத்துக்கு ஆப்கானிய லைலாவினால் ஏற்பட்ட அவமானம் நீங்க வேண்டும். அந்த லைலாவை வென்று நம்மிடமிருந்து அவன் கவர்ந்து கொண்ட பிரதேசத்தை மீட்பதற்கு நமக்கு உதவுகிற வீரரையே நான் மணப்பேன். அவர் என்னை விட வயதில் மிகப் பெரியவராக இருந்தாலும் சரி, மிகச் சிறியவராக இருந்தாலும் சரி'' என்று தீர்மானமாய் உரைத்து விட்டாள் தாரா.

லைலாவை அடக்க வேண்டும் என்ற நிபந்தனையைக் கேட்டதும் பல அரசர்களும் இளவரசர்களும் அவளை மணக்க வேண்டும் என்ற விருப்பத்தையே ஒழித்து விட்டனர்.

அவள் தன் தந்தையாரையும் தூண்டிக் கொண்டேயிருந்தாள். ஒரு முறை அவள் ஆடவர்களைப் போல் உடுத்து, ஆயுதங்கள் ஏந்தினாள். சிறு குதிரைப் படையுடன் சூரசேனரின் தலைமையில் டோங்க் பிரதேசத்தைத் தாக்கினாள். ஆனால் ஆப்கானியப் படையை வெற்றி கொள்ள முடியாது என்று கண்ட அவள் குதிரை வீரர்களுடன் திரும்பி விட்டாள்.

ஆனால் அச்சிறு போர் அவளுக்கு ஓர் ஒத்திகைப் பயிற்சி ஆயிற்று. ஆப்கானியர்களை முறியடிக்கத் தக்க தருணம் வரும் என்று காத்திருந்தாள்.

• • •

ராணா ராயமல்லரின் மகன் ஜயமல்லன், தாராவின் சூளுரையைத் தான் நிறைவேற்றுவதாக ஒப்புக் கொண்டான். ஆப்கானியர்களிடமிருந்து சூரசேனரின் ராச்சியத்தை மீட்டுத் தருவதாகக் கூறினான். இந்த வாக்குறுதி அளித்துவிட்டு அவன் சூரசேனரின் குடும்பத்தாரோடு நெருங்கிப் பழகினான்.



ஜயமல்லன் அக்குடும்பத்தின் நண்பன் ஆகி விட்டான். தாராவை அடிக்கடி சந்தித்துப் பேசும் வாய்ப்புக்கள் கிட்டின. நெருக்கமாகப் பார்த்தபோது அவளுடைய அழகால் அவன் மிகவும் கிறக்கம் கொண்டான். இந்தப் பேரழகு தன் உடைமை என்ற உரிமை உணர்ச்சி ஏற்பட்டு விட்டது; குடும்பத்தில் தாராளமாய்க் கலந்துகொள்ள அனுமதித்ததன் விளைவு அது. தாராவைத் தன் மனைவியாக எண்ணி விட்டான் அவன்.

ஆனால் தாராவோ தந்தை இழந்த பிரதேசத்தை மீட்டுத் தரும் வலிமை இல்லாத எவனையும் கணவனாக ஏற்க விரும்பவில்லை. ஜெயமல்லன் ஆப்கானியர்களை விரட்டி அடிப்பதாக வாய்ச் சொல் வீரம் காட்டினான்; அதற்கான ஏற்பாடுகள் ஏதும் செய்யவில்லை. தாரா இருக்கும் இடத்தில் இருப்பதாலேயே அவனுக்குத் திருப்தி உண்டாகிவிட்டது போலும். அவனுடைய ஆற்றலைப் பற்றித் தாராவுக்கு ஐயம் எழுந்து விட்டது. அவள் அவனுடன் ஜாக்கிரதையாகவே பழகினாள்.

ஒரு நாள்....

''தாரா, அன்று நீ குளித்துவிட்டு வருவதைப் பார்த்தேனே – பிறகு என் மனத்தில் அமைதியே இல்லை......'' என்றான் மல்லன்.

''எந்த நேரமும் என் நினைவாகவே இருக்கிறதா ?''

''உண்மைதான்'' என்று அவன் அவளை நெருங்கினான்.

அவள் அசையவில்லை.

''தாரா, என் வேட்கையை....''

''விலகி நில்லுங்கள்!''

அவன் அவளுடைய கையைப் பற்றினான்.

மறு விநாடி அவள் கையை உதறி விடுவித்துக் கொண்டாள். இடுப்பிலிருந்த தன் வாளை உருவினாள் அவள்.

''அற்பனே, ஓடிப் போ......!''

ஜயமல்லனுக்கு ஆத்திரம் வந்தது. என்ன இருந்தாலும் நாளைக்கு அவனுக்கு மனைவி. இவளுக்கு இவ்வளவு திமிரா? வாளை உருவுவதற்கு என்ன துணிவு !

அவனும் வாளை உருவினான். அவளுடைய வாளைத் தட்டிவிட்டு, அவளை அவமானப் படுத்த வேண்டும் என்பதே அவன் எண்ணம்.

இருவருடைய வாட்களும் மோதிக் கொண்டன.

வாளை உருவியது தவறு என்று சற்று நேரத்துக்குள் புரிந்து கொண்டான் ஜயமல்லன். அவளுடைய கை வாளை எளிதில் தட்டிவிடலாம் என்று முதலில் நினைத்தான். ஆனால் இப்போதோ அவளுடைய வாள்வீச்சிலிருந்து தன்னைக் காத்துக் கொண்டால் போதும் என்றாகி விட்டது. அவன் மிக விழிப்புடன் போராட வேண்டிய கட்டாயம் எழுந்தது.

''நிறுத்துங்கள், நிறுத்துங்கள் !'' என்று கத்திக் கொண்டே சூரசேனர் ஓடி வந்தார்.

எப்படி நேர்ந்தது என்று தெரியவில்லை. தாரா குறி வைக்கவில்லை. சூறைக் காற்றுப் போல் சுழலும் வாளுக்கு முன்னால் ஜயமல்லன் கழுத்து சென்றது. அவனுடைய தலை தரையில் உருண்டது. உருண்ட தலை கண்களை மூடித் திறந்து மூடியது. முண்டமோ அவளை நோக்கி இரண்டடி நடந்து கீழே விழுந்தது.

''என்ன காரியம் செய்து விட்டாய், தாரா ?'' என்றபடி பக்கத்தில் வந்து நின்றார் சூரசேனர்.

''என்ன செய்தேன் ? தனியாக இருக்கும் பெண்ணிடம் விஷமம் செய்கிறவர்களுக்கு இதுதான் தண்டனை!''

தாரா வாளை உறையில் செருகினாள்.

ஜயமல்லனின் தம்பி பிருதிவிராஜன் தமையன் தலை இழந்ததை அறிந்தான். தாராவின் வீரம் பற்றி முன்பே கேள்விப் பட்டவன். நேரிலும் சில முறைகள் பார்த்திருந்தான். ஒழுக்கப் பிழையில் அண்ணன் கொல்லப்பட்டான் என்று தெரிந்ததுமே அவன் தாராவை மனத்துள் பாராட்டினான்.

அவன் சூரசேனருக்கு ஓர் ஓலை அனுப்பி வைத்தான்.

''ஆப்கானியர்களிடமுள்ள தங்கள் பிரதேசத்தை மீட்பதற்கான ஆயத்தங்கள் செய்கிறேன். தாராவை ஏற்பேன்.''

எழுதிவிட்டுக் காதல் கனவுகளில் அவன் மூழ்கிவிடவில்லை; போருக்கான ஏற்பாடுகளை முடுக்கி விட்டான். படை வீரர்களைத் திரட்டுவதும், ஆயுத உற்பத்தியைப் பெருக்குவதுமாக அவன் மிகவும் தீவிரமாக இருந்தான்.

தாரா எல்லாவற்றையும் கேள்விப் பட்டாள். பிருதிவிராஜன் சுத்தவீரன் என்பது அவளுக்கு முன்னமே தெரியும். வெற்றுச் சொல்லோடு நில்லாமல் அவன் காரியத்தில் கருத்தா யிருப்பதைக் கண்டு அவள் மகிழ்ச்சியுற்றாள். தன்னுடைய நிபந்தனைகளையும் கொஞ்சம் தளர்த்தினாள்.

சூரசேனரும் தாராவின் விருப்பத்தை உடனே நிறைவேற்ற முற்பட்டார்.

ஒரு நன்னாளில் பிருதிவிராஜன் தாராவை மணம் புரிந்து கொண்டான்.

மனமொத்த இணை;

இணைக்கேற்ற உடல்;

இருவரும் தாம்பத்திய சுகத்தைத் திருப்தியாக நுகர்ந்தார்கள்; ஆனால்—

அப்போதும் அவர்கள் தங்கள் லட்சியத்தை மறக்கவில்லை. போருக்கான ஏற்பாடுகளெல்லாம் தொடர்ந்தன.


தேவையான படை பலம் சேர்ந்துவிட்டது. அடுத்தபடி, படையெடுப்பதற்குத் தகுந்த காலம் எது என்ற பிரச்னை எழுந்தது. பிருதிவிராஜன் போர்க் கலையில் வல்லுநன். ஆப்கானியர்கள் முன்னறிவிப்பு இல்லாமல் திடீரென்று தாக்குவது வழக்கம். எதிரிகள் ஏமாந்திருக்கும் வேளையில் அடிப்பது சுலபம் அல்லவா? ஆப்கானியர்களின் தந்திரத்தையே தாங்களும் கையாள்வது என்று தீர்மானித்தான் அவன். மொஹரம் பண்டிகையின் போது அவர்கள் நோற்பதும், துதிப்பதுமாகக் காலம் கழித்துக் கொண்டிருப்பார்கள். அந்த நேரத்தில் அவர்களைத் தாக்குவது என்று பிருதிவிராஜன் முடிவு செய்தான்.

''என் தந்தையை அவமதித்த லல்லாவை என் கையாலேயே வெட்டி வீழ்த்துவேன்!'' என்றாள் தாரா குதூகலமாக.




FDSA1453TMA

பாடி பில்டிங்கில் டிவிஎஸ்ஸின் பழுத்த அனுபவத்தை நன்கு பயன்படுத்தி மிகச் சிறந்த பாடிகளை நியாய விலையில் அமையுங்கள்



ஆண்டுதோறும் ஆயிரத்துக்கு மேற்பட்ட பாடிகள் கட்டுகிறோம். 45 ஆண்டு அனுபவத்தின் காரணமாக தேவைகளுக்கு ஏற்ற பாடிகளை அமைக்க நன்கு அறிந்துள்ளோம். அன்றியும் எங்கள் அனுபவமும் ஆராய்ச்சியும், சிக்கனமாகப் பாடிகளைக் கட்ட உதவியுள்ளன.

பாடிகளை அமைக்கும் சாமான்களைத் தேர்ந்தெடுப்பதில் குறியாய் இருக்கிறோம். பக்குவமான உயர் தர தேக்குமரம், பாஸ்பேட் ஸ்டீல் ஷீட் முதலியவற்றை உபயோகிக்கிறோம். ஒவ்வொரு வண்டியையும் கடினமான சோதனைக்குப் பின்னரே டெலிவரி செய்கிறோம். பாடிகளைப் பற்றி அதே சிந்தனையாய் ஆராய்ச்சி செய்து புதிய புதிய டிசைன்களைக் கண்டுபிடித்து நடைமுறையில் நேரும் பிரச்னைகளைச் சமாளிப்பதில் கண்ணும் கருத்துமாய் உள்ள நிபுணர்கள் கொண்ட தனிப் பகுதி ஒன்று டிவிஎஸ்ஸில் உண்டு.

டிவிஎஸ் கட்டும் பாடிகள் லேசானவை. ஆதலால் எண்ணெய்ச் செலவு குறைவு. அன்றியும் கரடு முரடான சாலைகளில் ஆட்டம் கொடுக்காது. உறுதியானது. பல்லாண்டுகள் உழைக்கும்.

இந்தியாவிலேயே பாடிகள் கட்டும் மிகப் பெரிய ஸ்தாபனம் டிவிஎஸ்

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ்
பிரைவேட் லிமிடெட்
மதுரை

(இது ஒரு டிவிஎஸ் ஸ்தாபனம்)



TVS

உங்கள்
நம்பிக்கைக்கு
உரியது
டிவிஎஸ்

SI-6089

"அப்படியானால் நீயும் போர்க்களத்துக்கு வருவதென்று தீர்மானமா?"

"புதிய தீர்மானம் இல்லை. சபதம் செய்தவள் நான்தானே! அதை நிறைவேற்ற வேண்டாமா?"

பிருதிவிராஜனின் படை டோங்கை நோக்கிப் புறப்பட்டது. தாரா தான் மிகவும் குதூகலமாக இருந்தாள். இழந்த நாட்டை மீண்டும் பெறப் போகிறோம் என்ற எக்களிப்பு. செய்த சபதத்தை நிறைவேற்றப் போகிறோம் என்ற திருப்தி. சுத்த வீரனை கணவனுடன் செல்கிறோம் என்ற பெருமிதம். குழந்தைப் பிராயம் முதல் தான் கற்ற வித்தைகளை உலகத்துக்குக் காட்ட ஒரு வாய்ப்புக் கிடைத்ததே என்ற மகிழ்ச்சி. மற்ற வீரர்களைப் போலவே அவளும் ஆடையும் ஆயுதங்களும் அணிந்திருந்தாள். அவள் ஒரு பெண் என்பதை யாரும் கண்டுகொள்ள முடியாது. அவளும் கணவனும் இரண்டு அரபுக் குதிரைகள் மீதேறிப் படைக்கு முன்னால் சென்றார்கள்.

டோங்க் நகரத்துக்கு முன்னாலேயே அவர்கள் படையை ஆயத்த நிலையில் நிறுத்தினார்கள். தாராவும் பிருதிவியும் தனியே நகரத்துக்குள் புகுந்தார்கள்.

நகரமே பண்டிகைக் கோலத்தில் காட்சி அளித்தது. யாரும் இவர்களைக் கவனிக்கவில்லை. இவர்களுடைய புரவிகள் கூட்டங்களை ஒதுக்கிக் கொண்டு அரண்மனையை நோக்கிச் சென்றன.

அரண்மனைக்கு வெளியில் ஆப்கன் சர்தார் லைலா சிலருடன் பேசிக் கொண்டிருந்தான். தாராவும் பிருதிவியும் அவனை நோக்கிப் போனார்கள்.

"இங்கே வருகிற குதிரை வீரர்கள் யார்? எதற்கு வருகிறார்கள்?" என்று கத்தினான் சர்தார் லைலா.

அவனுக்கு மறுமொழி கிடைக்கவில்லை. தாராவின் குதிரை அவன் பக்கம் பாய்ந்தது. அவள் வாளை வீசினாள்; லைலாவின் தலை மண்ணில் உருண்டது.

அவ்வளவுதான்; அங்கு பெரும் குழப்பம் உண்டாகிவிட்டது. சில வீரர்கள் 'பிடி, பிடி, அடி, அடி' என்று கூச்சலிட்ட வண்ணம் தாராவின் பக்கம் ஓடினார்கள்.

ஆனால் பிருதிவியும் தாராவும் குதிரைகளை உற்சாகப்படுத்தி விட்டார்கள். எதிர்ப்பட்டவர்களை மிதித்துக் கொண்டு அவை பறந்தன. பிருதிவியும் தாராவும் ஆப்கன் வீரர்களைப் போலவே 'பிடி, பிடி, அடி, அடி' என்று கத்தியவாறு யாரையோ துரத்துவது போல் விரைந்தார்கள். அவர்களுடைய வாட்களுக்கும் ஓயாமல் வேலை இருந்தது.

நகர வாசலை அடைந்தபோது அவர்களை ஒரு யானை வீரன் மறித்தான். யானையின் தும்பிக்கையை வெட்டினான் பிருதிவி. யானை அகன்றதும் இருவரும் நகரத்துக்கு வெளியே வந்து தங்கள் படைகளோடு சேர்ந்து கொண்டார்கள்.

ஆப்கன் சர்தார் இறந்த செய்தியைக் கேட்டு ராஜபுத்திர வீரர்கள் பெருமகிழ்ச்சி கொண்டார்கள். இந்த ஆவேசத்தோடு அவர்கள் டோங்க் நகரத்தைத் தாக்கினார்கள்.

நகரமெங்கும் ஒரே குழப்பமாக இருந்தது. சர்தார் செத்துப் போய்விட்டதால் ஆப்கன் வீரர்கள் திகைத்துப் போயிருந்தார்கள். ராஜபுத்திரர்களுடன் போராடவும் துணியவில்லை; சிதறி நான்கு திசைகளிலும் ஓட்டம் பிடித்தார்கள்.

ராஜ்யத்தை மிக எளிதாய்க் கைப்பற்றி விட்டான் பிருதிவி.

சூரசேனர் மறுபடியும் அந்த ராஜ்யத்து அரியணை ஏறினார். அவருக்கு வயதாகிவிட்டது. குல கௌரவத்தைக் காப்பாற்றிய மகளையும் மருமகனையும் அவர் மனதார வாழ்த்தினார்.

தந்தை மறுபடியும் சிம்மாசனத்தில் அமர்ந்திருந்ததைக் கண்ட தாரா தன் வாழ்க்கை லட்சியம் நிறைவேறிய பெருவகை கொண்டாள்.

தாயுள்ளம் !

"அடாடா! இப்படிச் செய்யலாமா?"

அறியாப் பருவத்துச் சிறு பிள்ளையின் இரு விரல்களுக்கு இடையில் சிக்கி நெளியும் புழுவைக் கண்ட அன்னை ஓடோடி வந்து கேட்டாள்.

"என்னம்மா சொல்றே நீ?"

"ஓர் உயிரை இப்படித் துன்புறுத்தக் கூடாது, அம்மா! அப்படித் துன்புறுத்தினால் அடுத்த பிறவியில் நீ புழுவாய்ப் பிறப்பாய். இந்தப் புழு உன்னைப் போல் ஒரு பெண்ணாகப் பிறக்கும். உன்னை இப்படித் தூக்கித் துன்புறுத்தும்!" - குழந்தை ஜீவஹிம்ஸை செய்யக் கூடாது என்பதற்காக அன்னை சொன்ன உபதேசம் இது.

ஒரு நிமிஷம் குழந்தை சிந்தனையில் ஆழ்ந்தாள். அடுத்த கணம் ஏதோ நினைவு வந்தவள்போல், "ஏன் அம்மா இப்படி இருக்கக் கூடாது? - இந்தப் புழு போன பிறவியில் பெண்ணாக இருந்து, நான் புழுவாக இருந்து இது என்னைப் பிடித்துத் தூக்கி யிருக்கலாம் அல்லவா? அதற்குப் பதில் நான் இந்தப் பிறவியில் தூக்கி யிருக்கலாம் இல்லையா?"

குழந்தையின் இந்தத் தர்க்கத்துக்கு அன்னை என்ன பதில் சொல்லுவாள்? ஆனால் தாயுள்ளம் படைத்த பாரதியார், இப்படியெல்லாம் கூறவில்லை. "உயிர்க் கொலை புரிவது பாவம் அம்மா!" என்று கூறிக் குழந்தையின் செயலைத் தடுக்கிறார்.

— ரா. வி.

[பாரதி விழாவில் ஔவை திரு நடராஜன் கூறியது]





எல்லாக் கடிதங்களும் உரிய சன்மானம் பெறுகின்றன

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பார்கள். சாதாரண மேடைப் பேச்சாளன் எல்லாம் பயிற்றுமொழியைப் பற்றிப் பேசுவது கேலிக்குரியதாகவும் ஆனால் வேதனையாகவும் இருக்கிறது. பல்கலைக் கழகத் துணைவேந்தர் என்ன ஆனார்? கல்லூரி முதல்வர்கள் என்ன ஆனார்கள்? மூச்! ஏற்கனவே ஐந்து லட்சம் பேர் ஆங்கிலத்தில் படித்துவிட்டு ரோடுகளில் ரோந்து வருகிறார்கள். இதில் தமிழில் படிப்பவர்களுக்கு மட்டுமே சலுகை என்றால் ஐந்து லட்சம் பேரின் கதி என்னாவது? 1972ல் இதே அரசு நீடிக்கும் என்று என்ன நிச்சயம்? வேறு கட்சி பொறுப்பு ஏற்றவுடன் முதல் வேலையாக இந்தத் திட்டத்தை மாற்றுவதாக வைத்துக் கொள்வோம். இடையில் தமிழிலே படித்தவர்களின் கதி என்னாவது? நாட்டின் முதுகெலும்பு மாணவர்கள் என்று சொல்லிக் கொண்டே அந்த முதுகெலும்பில் இப்படி அடித்தால் நாடு என்னாகும்?

சென்னை — 5
18–12–70 துலாமவன்

கல்வி அமைச்சர் திரு நெடுஞ்செழியன் அவர்களைச் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு கருத்திருமன் அவர்கள், மொழிப் பிரச்னையை விவாதிக்க அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கூட்டியிருந்த கூட்டத்தில், ''ஐயா! கல்வி அமைச்சரே! உங்கள் மகன் மட்டும் கான்வெண்டில் (ஆங்கிலம் போதனா மொழியாகக் கொண்டு இயங்கும் பள்ளியில்) படிக்கலாமா?'' என்று கேட்டார். அதற்குக் கல்வி அமைச்சர் திரு நெடுஞ்செழியன் அவர்கள், ''அது அவனுடைய விருப்பம்'' என்றாராம். கல்வி அமைச்சரின் மகன் மட்டும் ஆங்கிலம் படித்து விட்டு முன்னேறலாம். மற்ற ஏழைப் பிள்ளைகள் தமிழை மட்டும் படித்துவிட்டுக் குண்டுசட்டியில் குதிரை ஓட்ட வேண்டுமா என்ன? என்ன நியாயம் இது? போதனாமொழி விஷயத்தில் கல்வி அமைச்சரின் மகனுக்கு உள்ள சுதந்திரம் மற்ற மாணவர்களுக்கு ஏன் தரப்படக்கூடாது?

சென்னை — 13
17–12–70 துரை செல்வராஜ்

கல்லூரிகளில் போதனாமொழியாகத் தமிழ் இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாக ஜப்பானைக் காட்டுகின்றனர். ஜப்பானில் எல்லா இடங்களிலும் எல்லோராலும் ஒரே மொழியே பேசப்படுகிறது. அதனால் அவர்கள் தாய்மொழியில் கற்ற கல்வி ஜப்பானில் எல்லா இடங்களிலும் உபயோகப் படுகிறது.

ஆனால் இந்தியாவில் தமிழில் கற்றவர் எல்லா இடங்களுக்கும் சென்று பணி புரிய முடியாது. எல்லா இடங்களுக்கும் பொதுவான ஆங்கிலத்தில் பாடங்களைக் கற்றால் எப்போதும் எந்த மாநிலத்துக்கும் செல்லலாம். படித்த எல்லோருக்கும் தமிழகத்திலேயே வேலை கொடுப்பதென்பது எளிதான காரியமன்று. இதனால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கும்.

மணச்சநல்லூர்,
14–12–70 பி. ரங்கராஜு.

முதலமைச்சர் ஸ்ரீ கருணாநிதியின் தமிழ்ப் பற்று கல்லூரிகளில் விஞ்ஞான போதனைக்கு ஆங்கிலத்தை அடியோடு அகற்றி, தமிழையே வைக்கும் அளவுக்கு இருக்கக் கூடாது. ஆங்கிலத்தை மட்டுமின்றி ஜெர்மானிய, பிரெஞ்சு பாஷைகளையும் கற்க வேண்டியது அவசியம் என்பதை விஞ்ஞானத்தில் உயர்கல்வி பயிலும் மாணவர் பலர் அறிவர். பல பெரிய தொழில் நிறுவனங்கள் ஏற்படுவதற்கு நாம் அந்நிய உதவியை நாடுகிறோம். மேற்படிப்புக்காக அயல்நாடுகளுக்குப் பல பட்டதாரிகள் செல்கின்றனர். தொழில் விஞ்ஞான வளர்ச்சிக்கு உலக நாடுகள் ஒன்றோடொன்று ஒத்துழைப்பது தற்பொழுது சாதாரணமாகி விட்டது.

இந்நிலையில் தமிழை மட்டுமே அரசினர் கல்லூரிகளில் போதனா மொழியாக்கினால், அரசினர் கல்லூரிகளில் படித்த மாணவர்களுக்கு அயல்நாடுகளுக்கு உயர் கல்வி பெறச் செல்லும் வாய்ப்பு அதிகம் இருக்காது. ஆங்கிலத்தில் கல்லூரிப் பாடங்களைப் படித்தவர்கள் இவர்களைவிடத் தரம் உயர்ந்தவர்களாகக் கருதப்படுவர், இவ்விஷயத்தில். ஆகவே, தமிழக அரசில் வேலை வாய்ப்புக்காக மட்டும் படிப்போர், உயர் கல்வியைத் தொடர விரும்புவோர் ஆகிய இரு சாராருக்கும் உதவும்படி அரசினர் கல்லூரிகளிலும் இரு மொழிகளில் போதனை நடைபெற வேண்டுவது அவசியம். இவ்விஷயத்தில் மாணவர்கள் கோரும் சுதந்திரம் நியாயமானது.

சென்னை — 17
14–12–70 வி. ஆர். ஸ்ரீநிவாஸன்

'உண்மைக்கு என்றும் அழிவில்லை' என்பதின்படி 'சுப்ரீம் கோர்ட்' மன்னரின் மானியத்தைக் கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பு செய்தது.

ஆனால் இப்போது இந்திரா காந்தி மன்னர் மானியத்தை ஒழிக்கப் புதிய சட்டம் கொண்டு வரப் போவதாகக் கூறுகிறார். அதாவது தாம் பிடித்த முயலுக்கு மூன்றே கால்கள் என்று நிரூபிக்கப் போகிறார்; தமது சர்வாதிகாரப் போக்கை இதிலும் காட்டப் போகிறார். இது நாட்டின் நன்மைக்கு அறிகுறியல்ல.

கோவை — 15
18–12–70 ஏ. சீநிவாசன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam


குடும்பத்தினர் அனைவரும்
திட ஆரோக்கியத்துடன் திகழ
ஃபாஸ்ஃபோமின்
ஃபாஸ்ஃபோமின்
• சக்தியை அதிகரிக்கிறது
• பசியைத் தூண்டுகிறது
• வலிவைப் பெருக்குகிறது
• நோய்களை எதிர்க்கும் சக்தியைக் கூட்டுகிறது.
SQUIBB
Phosforin
VITAMINS ELIXIR
There's health in Phosfomin for all the family
SQUIBB
SARABHAI CHEMICALS
இ.ஆர் ஸ்க்விப் & ஸன்ஸ் இன்கார்ப்பரேடெட்டின் ரெஜிஸ்டர்ட் ட்ரேட்மார்க்காகும். காம் சந்த் ப்ரேம் சந்த் பிரைவேட் லிமிடெட் இதை உபயோகிக்க உரிமை பெற்றவர்கள்.
ஃபாஸ்ஃபோமின்...
பழரஸ மணம் கமழும்
பச்சை நிற விடமின்
டானிக்.
Shilpi HPMA-35A/70 Tam

REGISTERED No. M. 4392

Registered as a Newspaper in Ceylon